உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 18] விளம்பி ஆண்டு மாசித்திங்கள் 10—3—59 [இதழ் 4

ஆசிரியர்:- வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

துணை ஆசிரியர்:- வித்துவான். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குப்
புதிதாகச் செய்யப்பெறும் நவரத்ந கவசத்தின் பின்தோற்றம்

குருபாதம்

“ ஞானசம்பந்தம் ”

உட்பொருள்

பக்கம்

1.	சிவ ஞான போதம் ...	205
2.	கனம். திரு. M. பக்தவத்சலம் அவர்களுக்கு வரவேற்புரை	213, 217
3.	திரு. A. உத்தண்டராமப் பிள்ளை அவர்களுக்கு வரவேற்புரை	221, 224
4.	நவரத்ந கவசத் திருப்பணி ...	232
5.	தல அமைப்பு ...	235
6.	பாட்டின் வேற்றி ...	241
7.	ஆராய்ச்சிக் குறிப்புகள் ...	245
8.	தனிப் பாடல்கள் ...	250
9.	வினைதீர்க்கும் அருமருந்து ...	257
10.	திருவிழாச் சிறப்பு ...	260
11.	ஆதீனத்து அடியார்கள் ...	264
12.	புராணம் ...	267
13.	கல்வெட்டுக்கள் ...	270
14.	சிவாகமம் ...	273
15.	புலவர்களுக்குப் பாராட்டு ...	275
16.	கனம். திருமதி. லூர்தம்மாள் சைமன் அவர்கள் தலைமையுரை ...	277
17.	செய்திகள் ...	279
18.	எதிர்காலம் ...	289
19.	மதிப்புரை ...	259

அட்டைப் பட விளக்கம் :— வேளூர் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக் குப் புதிதாகச் செய்யப்பெறும் நவரத்ந கவசம் முன்புறத் தோற்றம்.

கடிதம் :

ஆர். கந்தசாமி மூப்பனார், கும்பகோணம்

5-3-59.

இப்பவும் நாளை சனிக்கிழமை 7—3—59ல் நடைபெறவிருக்கும் தருமபுர ஆதீனம் கல்வி நிலையங்களின் மாணவர் கழக ஆண்டு விழாவுக்கும், அன்றே நடக்கும் வைத்தீசுவரன்கோயில் இந்து அநாதைக்குழந்தைகள் இல்லத்தின் ஆண்டு விழாவுக்கும் அவ்விடம் ஆக்ஞைப்படி அனுப்பியுள்ள அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சில காலங்களுக்குமுன் மேடைப்பிரசங்கிகளும் எழுத்தாளர்களும் குறைகளையே கூட்டுவித்து கூறுவோர்களும் பொதுவாக மடங்களையும் குறிப்பாகத் தமிழ் மடங்களையும் தாக்கி எளியவர்களுக்கும் அநாதைகளுக்கும் பயன்படும் வகைகளில் ஈடுபடவில்லை என்றும், கிருத்துவ மடங்களையும் பாதிரிமார்களையும், சுட்டிக்காட்டி அவ்வழியில் இந்துமத ஆச்சாரியர் பலனளிக்கும் துறைகளில் கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியமென்று பறைசாற்றுவதுண்டு. ஆனால் அவர்கள் உண்மையை உணர்ந்தவர்கள் அல்ல. நமது மடங்கள் செய்துவந்துள்ள போற்றுதற்குரிய தொண்டுகளும் உதவிகளும் விளம்பரமின்றி நடந்து வந்துள்ளபடியால் மடங்களில் தொடர்பு இல்லாதவர்களுக்கு அவ்வுண்மை தெரியவராது. தொன்றுதொட்டு மடங்களில் அநாதைகளுக்கும் அன்புடைய எளியவர்களுக்கும் ஆர்வத்துடன் கல்வி பயில விருப்பமுடையவர்களுக்கும் உணவளித்து கல்வி அறிவு புகட்டியும் வந்துள்ளார்கள். அத்தகைய அன்புடையவர்களில் சிறந்த கல்வியாளரும் டாக்டர் பட்டம்பெற்று தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ள உ. வே. சாமிநாதய்யர் அவர்களும் ஒருவரென்று ஒருவகையில் கூறினால் தவருகாது. சோறு மணக்கும் மடங்கள் எல்லாம் என்று மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் கூறியது நினைப்புக்குரியது. தருமை ஆதீனம் காலத்திற்கேற்ப திருத்தமுறையில் பாடசாலைகளை ஸ்தாபித்து அநாதைகளுக்கும் மற்றுமுள்ள சிறுவர் சிறுமிகளுக்கும் அன்னம் அளித்தும் கல்வி புகட்டியும் வருவதில் உண்மை மக்களுக்கு ஒருவகையில் தெரிந்துகொள்ள வேண்டிய நவீன முறையில் அரசியலாரையும் பேரறிவாளர்களையும்கொண்டு நடத்திவரும் விழாக்கள் அவசியமாகும். உண்மையில் யாவரும் போற்றத்தக்கதாகவும் உள்ளது.

"யாரையும் இல்லார்க்கு உற்ற நற்றுணை" — நம் குருபீடமன்றோ. அவர்களின் நோக்கம் ஏனையோர்கள் நோக்கம்போல் போன்றதன்று, ஏன்? வேறோரு சமயத்தாரும், "போதியாரும் பிண்டியாரும் புகழல சொன்னாலும்" — நிமலன் நீதியாக கொண்டருளுவன் என்பது நமது மறை முடிவு.

ஆண்டு விழாக்கள் சிறப்புடன் நடக்கவும், ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் புகழ் பெருமையுடன் ஓங்கவும் பிரார்த்திக்கும்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான
திருக்குவளை (திருக்கோளிலி) ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்



ஸ்ரீ தியாகராஜசுவாமி வெள்ளிமஞ்சம்
சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆணையர்
திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L.. I. A. S. அவர்கள்
முன்னிலையில் பிரதிஷ்டை

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான
திருக்குவளை (திருக்கோளிலி) ஸ்ரீ தியாகராஜசுவாமி
தேவஸ்தானத்தில் கல்வெட்டுத் திறப்புவிழா



சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆணையர்
திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள்
திருப்பதிகக் கல்வெட்டைத் திறந்துவைத்தல்

தருமையாதீனம் விளங்கர் ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார் தேவஸ்தானத்தில் கல்வெட்டுத் திறப்பு

வரவேற்புரை ஏற்றல்

கல்வெட்டைத் திறந்துவைத்தல்

திறப்பாளர் : சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆணையர்

திரு. A. உத்தண்டராமப்பிள்ளை B. A., B. L., I. A. S., அவர்கள்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்
நவரத்ந அங்கித் திருப்பணி



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள்
10-2-59-ல் திருப்பணிக்குத் தனி உண்டியலைத்
தொடங்கிவைத்தருளல்.

உ

குருபாதம்

வாழ்க உலகெலாம்!

ஞானசம்பந்தம்

[தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு]

மலர் 18 } விளம்பி - மாசி 10—3—59 { இதழ் 4

உ

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சிவ ஞான போதம்

(கட்டுரை 2. சென்ற இதழின் தொடர்ச்சி)

முதல் அதிகாரணம்

1. பொருள்

1. முதலதிகரணத்தாற் கூறப்படும் பொருள் :- (இரண்டாவது அதிகரணத்தாற் கூறப்படும்) வினைமுதல் (ஆகிய கடவுள்) உண்மை சாதித்தற்பொருட்டு, உலகிற்கு முத்தொழிலுண்மை சாதித்தலாம். (முவினைமை'யை நிறுவுதல்.)

2. ஐயம்

2. உலகிற்கு மூவினை உளவோ? இலவோ?

3. பிறர் கூற்று (தடை)

3. உலகம் தோன்றுதலும் இல்லை, அழிதலும் இல்லை, என்றும் இவ்வாறே நிலைபெறுவது ஆகும். ஆதலின், உலகம் காரியப்பொருளாதல் இல்லை. இதைக்கொண்டு வினைமுதல் உண்டு எனச் சாதித்தல் ஒல்லாது. உலகிற்கு மூவினை யில்லாமையால், அம் மூவினையால் அவ்வினைக்கு முதல் உண்டு என்று சாதித்தல், 'முயல் கோம்புடையது ஆன் (பசு) வயிற்றுப் பிறத்தலான்' என்பதனோடு ஒக்கும். ஆன் வயிற்றில் முயல் பிறப்பதும் இல்லை, அதற்குக் கோம்பும் இல்லை. அதுபோல, உலகிற்கு மூவினையும் இல்லை. மூவினை செய்யும் முதலும் (கர்த்தாவும்) இல்லை. இல்லாமை யால், 'உலகம் செய்வோ(ன் ஒருவ)னை உடையது முத் தோழில் உடைமையால் என்று கருதலளவையால் சாதித்தல் ஒல்லாது. இவ்வாறு கூறுவோர் (அ) மீமாஞ்சை நூலாரும் (ஆ) உலகாயத நூலாரும் ஆவர். அவருள்

(அ) மீமாஞ்சை நூலார் கூறும் முறை

உலகம் தோன்றிநின்று அழியும் என்பது காட்சி யளவையாற் பேறப்படுவதும் அன்று. காட்சியளவை - ப்ரத்யக்ஷப்ரமாணம்; ஐம்போறிகளால் அறியும் அறிவளவு.

வழியளவை (அநுமான ப்ரமாணம்) விட்டு நீங்காத தன்மை ஒன்றை ஏதுவாகக்கோண்டுள்ளது. 'இம்மலை தீயுடையது; புகையுடைமையால்' என்னும் அநுமான வாக்கி யத்தில், தீயைவிட்டு நீங்காதது புகைமை. அதனால் தீக்குப் புகைமை அவிநாபாவம் ஆகும்.

'அநுமானம் அவிநாபாவம் பேசுறும் ஏதுக்கோண்டு மறைபோருள் பேறுவதாகும்' (சித்தியார், சுபக்கம். அளவை 2.) என்னும் மூலத்தையும், காட்சியளவையால் அறிவது

போல, "நேரே அறியப்படுவதன்றிச் சாதித்துப் பெறற் பாலதாய் மறைந்துநின்ற பொருளைச் சொல்லப்பெற்ற அதனைவிட்டு நீங்காது யாண்டும் உடனாய் நிகழும் ஏதுவைக் கொண்டு அவ்வாறு நிருவிகற்ப வுணர்வைத் தனக்கு முன்னாகக்கொண்டு ஐய விபரீதக் குற்றம் இன்றி உணர்வ தாகிய ஆன்மாவினது ஞானசத்தி கருதலளவை எனப்படும்" என்னும் மாதவச் சிவஞானயோகிகள் உரையையும் அறிந்து கொண்டால் அநுமானத்தை ஒரு சிறிதுணரலாம்.

உலகம் தோன்றிநின்று அழியும் என்பது காட்சிக்கு எய்தாமையால் காட்சியளவையால் பெறப்படுவதும் அன்று. கருத்துக்காவது எய்துமோ? கருத்துக்கு எய்த ஓர் ஏது வேண்டும். அவ் வேது அவிநாபாவமாயிருத்தல் வேண்டும். புகையைக்கண்டு, காணப்படாத தீயைக் கருதியறிதல் போல, உலகம் மூவினையுடையது என்பதைக் கருதியறிய அப் புகை போல்வதோர் ஏது அவிநாபாவமாய் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லை, அதனால், வழியளவையாற் பெறப்படுவதும் அன்று.

உரையளவை (ஆகமப்ரமாணம்) கொண்டு பெறலாம் எனின், அதுவும் இல்லை. வேதத்துள் கூறப்படுதலால் உலகிற்கு முத்தொழில் உண்மை பெறுவோம் எனிலோ வேதத்தில் 'நடாத்துக; நிறுவுக, செய்க' என்றாற்போலத் தொழிற்படுத்தும் வாக்கியங்களே சொற்பொருளை உணரும் வேட்கையாளர்க்கு அச்சொற்பொருளை உணர நிற்கின்றன. அங்கனம், ஏவுகின்றவர் சொற்கேட்டு, இயற்றுகின்றவர் செய்யுந் தொழிலாலே அவ்வச் சொற்பொருளை உணரலாம். அத் திறத்தில் அவை பிரமாணமாகும். அவ்வாறு அன்றிப் பொருளியல்பு (வஸ்துவின் சொருபலட்சணம்) கூறும் வாக்கியங்களால் சொற்பொருள் உணரப்படாமையின், அவை பிரமாணம் ஆகா. ஆயினும், தொழிற்படுத்தும் வாக்கியங் களுக்கு யாதானும் ஓர் ஆற்றால் உபகாரமாதல் உடைமை யால், உபசரித்துப் பிரமாணம் எனக் கொள்ளப்படும்; அப் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள். அதுபற்றி உரையள வையால் பெறப்படுவதும் அன்று உலகிற்கு மூவினைமை.

இவ்வாறு காட்சி (ப்ரத்யக்ஷம்) கருதல் (அநுமாநம்) உரை (ஆகமம்) என்னும் மூன்றளவை (பிரமாணங்)களாலும் உலகிற்கு முத்தொழில் உண்மை பெறப்படாது என்பர் மீமாஞ்சை நூலார்.

(ஆ) உலகாயத நூலார் கூறும் முறை

காட்சியளவை ஒன்றே பிரமாணம், வழியளவை முதலியன பிரமாணம் அல்ல. அவற்றால் சாதிப்பன பொருள்படா. உலகிற்குத் தோற்றமும் ஈறும் காணப்படாமையால் இல்லை.

4. பிறர் கூற்றாகிய தடைக்கு விடைகூறி நிறுவும் முடிபு

4. 'உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப் பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசம் உடைத்து' (பிரதிக்ஞை; மேற்கோள்).

தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின், (ஏது).

இவ்விடையின் இருபகுதியுள் 'உளதாய்........ உடைத்து' என்னும் பகுதி அநுமான வாக்கியத்தின் பிரிவுகளுள் முதலாகிய துணிபொருளை உணர்த்தும் வாக்கியம். 'தோற்றமும்........... கிடத்தலின்' என்னும் பகுதி அப்பொருளைத் துணிந்ததற்கு ஏதுவைக் குறிக்கும் வாக்கியம். இவ்விரண்டாலும் முறையே மீமாஞ்சை நூலாரையும் உலகாயத நூலாரையும் மறுத்தவாற்றை அறிதல் வேண்டும். மேற்கோள் வாக்கியம் மீமாஞ்சை நூலார் தடைக்கு விடை. ஏது வாக்கியம் உலகாயத நூலார் தடைக்கு விடை.

அவற்றுள், முதலாவது மீமாஞ்சைநூலார் தடைக்குஉரிய விடையின் விளக்கம்:- முன்னை இதழில் பக்கம் 144-இல் முதலதிகரணத்தின் விளக்கத்தை நினைவிற் கொண்டவர்க்கு இது தெளிவாகும். அது முதலதிகரணத்தின் விளக்கம். இதுவரை எழுதியது, அதற்குப் பிறர் கூறும் தடையின் விளக்கம். இனி எழுதுவது, அத் தடைக்கு மெய்கண்ட தேவநாயனார் விடுத்த விடையின் விளக்கம் என்று பகுத்துணர்தல் வேண்டும்.

'உளதாய் ஒருவன் ஒருத்தி ஒன்று என்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி திதி நாசம் உடைத்து' இது முதலாவது விடை. இவ் விடை மீமாஞ்சை நூலார் தடைக்கு விடுத்த (மேற்கோட்)பகுதி,

வழியளவையால் உலகிற்கு, முத்தொழிலுண்டு எனல்

(க) சுட்டியறியப்படுவன எல்லாம் தோன்றி நின்று அழியும் என்பது சித்தாந்தம், அவன் (ஒருவன்), அவள் (ஒருத்தி), அது (ஒன்று) எனச் சுட்டியது அது விளங்கற் பொருட்டே, எண்ணுப் பெயர்களுள் ஒருவன் முதலிய மூன்று பெயரும் சுட்டுதற் பொருளனவாகும். இரண்டு முதலிய வற்றைச் சுட்டு விரலாற் குறித்தல் இல்லை, 'ஏகம் என்று சுட்டுவது' (சூ. உ. அதி.,) முதலியவற்றைக் கருதுக.

சுட்டியுணர் பொருளான எல்லாம் அசத்தாம். அறிவி னுல் அறிந்த யாவும் அசத்து, நித்தியப் பொருள்களையும் 'அவனேதானே' 'அவன் இவனாய் நின்ற முறை ஏகனாகி' 'அவன் இவன் ஆனது' 'அது நானானேன் என்று பாவிக்கச் சொல்வது' என்று கூறும் ஆற்றால், சுட்டியறிவதாகக் கொள்ளலாகாது. அவ்வறிவு பொதுமையிற் சுட்டியறிவது. அநு பவநிலையிற் சுட்டியறியப்படா. 'உரையுணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வு' சுட்டப்படாது, உலகம் சிறப்பியல்பு பற்றி அநுபவமாய்ச் சுட்டப்படும், அதனால் தான் 'உளதாய்' என்று கூறியது.

(2) ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும் பகுப்பு உடையது, உலகு. அவயவி அது. இவை அவயவம். ஆடையின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப்படும் நூல்கள் போல ஒரு பொருளின் ஏகதேசமாய்த் தனித்தனி பிரிக்கப் படும் தகுதியுடையனவும் அவயவம் எனப்படும்

(3) பலவேறு வகையது உலகம். உலகம் சடம், சித்து அன்று.

இவற்றைச் சுருக்கிச் சொல்லின்,

ஒருவன் என்றும் ஒருத்தி என்றும் ஒன்று என்றும் இவ்வாறு அவயவப் பகுப்புடையதாயும், பலவேறு வகையதாய்ச் சடமாயும், சுட்டியறியப்படுவதாயும் இருத்தலின் இம் மூன்று ஏதுவாலும் உலகம் (பிரபஞ்சம்) தோன்றி நின்றழியும் என்பது துணியப்படும். இதுவே முதலதிகரணத்துப் பொருள்.

இதற்கு அனுமான வாக்கியம்:—

1. உலகம் தோன்றி நின்று அழியும் (மேற்கோள்)

2. அவன் அவள் அது என்று இவ்வாறு பலவாகப் பகுக்கப்படும் அவயவப்பகுப்பு உடைமையின் (ஏது)

3. ஆடை போலும் (எடுத்துக்காட்டு). மீமாஞ்சை நூலார் வழியளவையாற் பெறப்படாது என்றது பொருந்தாது என்று நன்குணர, வழியளவையால் உலகிற்கு முத்தொழி லுண்டெனச் சாதித்தவாறு காண்க.

உரையளவை (ஆகமப்பிரமணம்) உலகம் முத்தொழி லுடையது எனற்குப் பிரமாணமாகும் எனல்.

சொற்பொருளுணர்ச்சி, 'நடாத்துக, நிறுவுக' முதலிய தொழிற்படுத்தும் சொல்மாத்திரையால் துணியப்படும் என்னும் வரையறை இல்லை. தாய் தந்தை முதலியோர் இச் சொல்லிற்கு இது பொருள் என்று தெரிவித்தலாலும் துணியப்படும். நிகண்டு நூல் முதலியவற்றாலும் துணியப்படும். அதுபற்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணம் அல்ல என்பது பொருந்தாது. அதனால், உரையளவையே (ஆகமப்ரமாணமே) பிரமாணம் ஆகும். ஆயினும், அம் மீமாஞ்சை நூலார் மதமேபற்றி அவரைமறுத்தற் பொருட்டு, மூவினையுடைமை வழியளவை யாற் சாதிக்கப்பட்டது.

தார்க்கிகர் மதத்தில், பரமாணுக்கள் அவயவம் உடையன அல்ல. அதனால், அவை தோன்றி நின்று அழியும் என்பது பெறப்படாது. படாமையின், காரியப் பாட்டிற்கு அவயவம் உடைமை ஏதுவாதல் யாண்டும் செல்லாது. அம் மதத்தில் இவ் விலக்கணம் செல்லாது அவ்வியாப்திக் குற்றம் அடைதலின்,

அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் இவ்வாறு சடமுமாய்ப் பலவுமாய் உரைக்கப்படுவன எல்லாம் தோன்றி நின்று அழியும் என்பது கருத்தாகக் கொள்க. அவயவம் உடைமையை நீக்கிக் கூறுவது இது.

பரமாணுக்களை மும்மையணு (திரியணுகம்) எனக் கொண்டு, அவற்றினும் நுண்ணியனவாய்க் கண்ணுக்குப் புலனாகாதன உள்ளன என்று சொல்லப் பிரமாணம் இல்லை. இல்லாமையால், பரமாணுக்களும் அவயவம் உடையனவே யாம். அல்ல எனக்கொள்ளினும் அவை சடமுமாய்ப் பலவும் ஆதலின் தோன்றி நின்று அழிவனவேயாம்.

ஆணவமலம் சடம் ஆயினும் பல அன்று. ஆன்மாக்கள் பல ஆயினும் சடம் அல்ல, ஆதலால், அவற்றிற் செல்லாது.

இரண்டாவது, உலகாயத நூலார் தடைக்கு விடை :- வழியளவை இல்லை ஆயின், பின்வரும் பயனைக் குறித்து முயற்சி செய்வார் இல்லை யாதல் வேண்டும். இம்மையின் முயற்சியாலே இருநிதி யீட்டப்படும் என்பதே அவர் கொள்கை. அதனால், வழியளவையும் அதுபற்றி உரையளவையும் பிரமாணம் ஆம். அதனால் அவரும் மறுக்கப் படுவர். படினும் அவர் மதமே பற்றி அவரை மறுத்தற் பொருட்டுத் தோன்றியழிதல் கண்கூடாக (ப்ரத்யக்ஷம் ஆக)க்காட்டுவாராய், மெய்கண்டதேவர்,

‘தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்’ எனவரும் ஏதுவைக் கூறியருளினர். உள்ளது - ஸ்திதி.

கிடத்தல் - அதனோடு உடன் நிகழ்தல். உள்ளதனோடு (நிற்றலோடு) தோற்றமும் ஈறும் உடன் நிகழ்தலை யாவரும் அறிவர். தோன்றுததுளதாகாது. சொல்லுலகு பொருளுலகு என்னும் இரண்டனுள் பொருளுலகு தோன்றிநின்று அழியும் என்பது ஏதுக்களால் சாதிக்கப்பட்டது. அவன் அவள் என்று குறிக்கும் உயர்திணையும் அது என்பதாற் பெறப்படும் அஃறிணையும் சொற்பிரபஞ்சம். சொற்பிரபஞ்சம் (உயர் திணை + அஃறிணை எனும்) அவயவப்பகுப்பு உடைமையாலும், சடமும் ஆய்ப்பலவுமாகலானும் சுட்டியறியப்படுதலாலும், திதியின்பால் பால் ஏனையிரண்டும் காணப்படுதலாலும் தோன்றிநின்று அழிதல் உடையது என்று இரட்டுற மொழிதலால் பொருளுரைத்துக் கொள்க.

அவன் அவள் அது என்ற மூன்றே சொல்லால் உலகெல்லாவற்றையும் தெரிவித்துள்ள திறம் பக்கம் 144 - 145 இல் விளக்கப்பட்டது. தருக்க நூலார் ஏழாயும் பதினாறும் விரித்துக்கூறுவர். இறைவன் எட்டுருவாய் நிற்கும் உண்மையைக் கூறுங்கால், உலகம் அவ்வெட்டில் அடங்குதல் அறிக. அத் திறம் எல்லாம், இச்சிவஞான போதத்திற் குறித்த திறத்தைப் போலச் சுருக்கமுடையன அல்ல. இம்முதல் அதிகரணப்பொருள் உலகிற்கு முத்தொழில் உண்மையைச் சாதித்தல் என்பது அறியப்பட்டது. இனி அவ்வுலகிற்கு அம்முத்தொழிலைச் செய்யும் முதல்வன் உளன் என்பது இரண்டாவது அதிகரணத்தில் விளக்கப்படும்

(தொடரும்)

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது,

நேசத்தை யெய்துவ னோர்குருவைப் பற்றி நின்றவனு
பாசத்தை யெய்துவன் பல்லாசிரியரைப் பற்றியவ
னீசத்தை யெய்துவன்றேசிகற் பற்றிப் பின்னீத்தவன்மா
நாசத்தை யெய்துவனுசானை வைது நகைத்தவனே. 46

உ

குருபாதம்

தருமையாதீனத்துக்குச் சொந்தமான

திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில்

மேலராமன்சேத்தி கிராமச்

சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத்தைத் தொடங்கிவைக்கும்

சென்னைமாநில இந்துசமய அறநிலைய, விவசாய, உணவு அமைச்சர்,

" நல்லறங்காவலர் "

கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்களுக்கு

அளிக்கப்படும்

வரவேற்புரை

நல்லறங் காக்கும் நல்லோய் வருக ! வருக !!

உழவு செழித்தால் உலகம் செழிக்கும். உழவு மிகுந்த நாடே பிற எல்லா நலமும் பெருகி உள்ள நாடு. இதனாலேயே சோழமன்னன் முடிசூட்டு விழாவில் ஔவைப்பிராட்டி 'வரப் புயர' என்ற இரு சொல் பெரும்பொருள் ஆசி வழங்கியதாகச் சரிதம் சொல்கிறது. அதிலே முடிவில் 'குடி உயரக் கோன் உயரும்' என்று முடித்தார். ஆகவே உழவு செழிக்கவேண்டு மானால் குடிகள் செழிக்கவேண்டும். அவர்கள் நன்றாக வாழ வேண்டும். நல்ல ஒற்றுமை அங்கே இருத்தல்வேண்டும். அதற்குக் கூட்டுறவுச் சாகுபடி முறை வளரவேண்டும் என்பது ஆட்சியாளர் கொள்கை. நம் நாட்டிலே முன்காலத்தில் கரை வழிச் சாகுபடி என்ற ஒரு முறை நிலவியது. அது மாமூலாக எங்கும் பரவியிருந்தது. அந்தப் பழக்க வழக்கமே இப்பொழுது விரிவடைந்து கூட்டுறவுச் சங்க முறையில் அமைந்துவர விரும் பப்படுகிறது. இந்தச் சாகுபடி முறை வலுத்தால் ஒற்றுமை வளரும். நவீன சாதன வசதிகளைப் பயன்படுத்தலாம். நிலம் வளம்பெறும். பயிர் செழிக்கும். மக்கள் நலம் பெறுவர். உலகத் தொழில் வளரும். நாடு சிறக்கும். 'இந்தக் கூட்டுறவு முறை நம் ஆலய நிலங்களில் அமுலுக்கு வருதல்வேண்டும் அதனால் குடிகளும் ஆலயங்களும் நன்மைபெறும்' என்ற நம்பிக்கை தங்களுக்கு இருந்துவருவது உலகறிந்தது. அதை

நடைமுறையில் செய்துகாட்டவேண்டும் என்பது எங்கள் குரு மகாசந்நிதானத்தின் திருவுளம். சாதாரணமாக விவசாயத்தில் ஈடுபட்டவர்கள் நூதன முறைகளை ஆர்வத்துடன் வரவேற்கும் இயல்பு பெறவில்லை. சாதகமான நல்ல சூழ்நிலை அமைந்துள்ள இடத்தில் நடத்த முற்படுவது நலம். அதுவும் ஒரு அளவு நிச்சயமாக வெற்றிகாணலாம் என நம்பிக்கை தரக்கூடிய நல்ல இடத்தில், நல்ல குடிகளைக்கொண்டு செய்து அதில் வெற்றி காணவேண்டும். அதற்கேற்ப இந்தக் கிராமத்தில் இது அமைகிறது. தங்கள் கைவளத்தால் இது மேன்மையுற வளரும் என்பது உறுதி. இந்தக் கூட்டுறவுச் சாகுபடியைத் தொடங்கி வைக்க வரும் தங்களை வருக, வருக என வரவேற்கிறோம்.

தருமை ஆதீனமடம் தேவஸ்தானங்கள் எல்லாமுமே நிலத்திலிருந்தே பெரும்பாலான வருமானத்தை எதிர்நோக்கியுள்ளவை. ஆகையால் எல்லா நிலையங்களிலும் உழவு பெருக, நிலம் செழிக்கச் செய்யும் பணிகள் பல நடைபெற்றுவருகின்றன. குடிமக்களோடு நேரடித் தொடர்புகொண்டு உழவு நடைபெறவும் செய்துவருகிறது இவ்வாதீனம். ஆங்காங்கும் உழவு மேன்மை அடைய அந்தந்த ஆலய நிலங்களிலும் ஒரு சிறு பகுதியை நேரடிச் சாகுபடியில் வைத்துக்கொண்டு அவற்றில் நல்ல வித்திட்டு, நல்ல முறையில் காலத்தில் சாகுபடி செய்யவைத்து, எரு இட்டு, பயன்பெருக்கிக் காண்பதோடு மற்றைக் குடிகளுக்கும் அதை ஒரு மாதிரிப் பண்ணையாக நடத்திக்காட்ட முயன்று வருகிறது. ஞான ஏருழவர்களாக உள்ள இவர்கள் இவ்விதம் செய்துவருவது இன்றுநேற்றல்ல. இவ்வாதீனத்து அடியவர்கள் ஞானமுதிர்ச்சியிலும் ஞானதானத்திலும் எவ்வளவு சிறந்தவர்களாக இருந்தார்களோ, அதைப்போன்றே ஆலயங்களுக்குச் சொத்தைச் சேர்ப்பதிலும், சேர்த்த சொத்துக்களைப் பரிபாலிப்பதிலும் மிக்க விழிப்போடு இருந்துவந்தார்கள். அவ்வீடுபாட்டைக் கண்ட மன்னர்களும் வியந்து நில நிபந்தங்கள் கொடுத்தனர் என்பது வரலாறு.

அன்றும் இன்றும் அதேபோலே நடைபெற்றுவருகிறது. குடிகளிடமும் நல்ல தொடர்பு வைத்துக்கொண்டும், அதை விருத்திசெய்துகொண்டும் வருகிறோம். ஆதீனக் குடிகள் என்று அவர்கள் தங்களைச் சொல்லிக்கொள்வதில் பெருமை தொனிக்கும்படி வைத்துவரப்படுகிறது. நிலச்சட்டங்களால் சில

பிணக்குகள் இருந்தபோதிலும் நாளடைவில் அவர்களை ஆதீனத்து நோக்கம் புரிந்துகொள்ளும்படி செய்து அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்து கொடுப்பதில் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் தயங்குவதில்லை. விவசாயத்தில் அவர்களுக்குள்ள ஈடுபாடு மிக அதிகம். நேரடியிலேயே கூட ஆங்காங்கும் சென்று ஊக்குவித்துச் செம்மையாக நடைபெற்றதென்ற பெருமையைத் தேடிக் கொடுத்து வருகிறார்கள் தருமை ஆதீனத்துக்கு. அதுபோன்ற செயல்தான் இந்தச் சாகுபடியாளர் கூட்டுறவு சங்கம்.

நல்ல குடிகளைக்கொண்டு தொடங்கும் இச் சங்கம் நல்ல முறையில் வேலை செய்து அரசாங்கத்தினர் எதிர்பார்க்கும் நல்ல பலனைத் தந்து நம் நாட்டிலே கூட்டுறவுப் பண்ணையை வெற்றிகரமாக நடத்திவிடமுடியும் என்பதைக் காட்டக்கூடியதாகக் கிராம அமைப்பும் அதற்கொத்ததாக இருக்கிறது. வடக்கிலும் தெற்கிலும் பெரிய ஆறுகள். நல்ல பாசன வசதி உள்ளது. கிராம நிலங்களும் ஒருசேர அடைத்தபங்காக அமையப்பெற்றது. அதிலே பயிரிடும் குடிகளுக்குக் கொடுக்கப் படும் பகுதியும் அவரவருக்கும் கூடுமானவரையில் அடைத்த பங்காக இருக்கும். இவ்விதம் எல்லாவற்றாலும் நல்ல முறையில் அமைந்தது. மண்ணும் வளமுடையது எனச் சொல்லலாம். கூட்டுறவுச் சாகுபடி முறைக்கு ஏற்ற முறையில் அமையப் பெற்றது. கனம் அமைச்சரவர்கள் அடிக்கடி சொல்லி வருவது போல இதுவும் அமைந்திருக்கிறது. குடிகளுக்குள்ளும் பிளவு கிடையாது. இந்த அமைதியே கூட்டு முறை சாகுபடிக்கு முதலில் வெற்றியின் அறிகுறி. திருவருள் துணையும் அரசாங்கத்தின் உதவியும் இந்த முயற்சிக்குக் கூடி அமைந்திருக்கின்றன வென்பதன் அடையாளமாகவே தாங்கள் இங்கு இன்று இப்பணிக்கு முன் வந்திருப்பது. அவ்விதம் வந்திருக்கும் தங்களை வருக! வருக! என வரவேற்கிறோம். வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்.

இந்தக் கிராமம் வளமுள்ள புஞ்சையும் தோப்பும் ஒரு அளவு பெற்றுள்ளது. தென்னைகள் பல இருக்கின்றன. மேலும் பயிரிட வாய்ப்பு இருக்கிறது. இந்நந்நாளில் இந்தக் கிராம அபிவிருத்தியை முன்னிட்டு 1008 தென்னம்பிள்ளைகள் நடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. அதைத் தங்கள் கரத்தால்

நட்டு இவ்விழாவில் மற்ருெரு கைங்கர்யம் செய்யவேண்டு மேன்பது எங்கள் மகாசந்நிதானத்தின் விருப்பம். அந்தப் பணியையும் புரியும்படி கேட்டுக்கோள்ளுகிருேம்.

இதுபோன்றே இன்னும் பல இடங்களில் செய்ய எங்கள் குருமகாசந்நிதானத்துக்கு அவா உண்டு. இறையருள் கூட்டு விப்பதாக. எல்லா நல்ல முயற்சிகளுக்கும் தங்கள் ஆட்சியில் ஆதரவு உண்டு என்பதை நாங்களும் அறிவோம். ஆகவே இதுபோன்ற நற்பணிகளில் முன்னின்று வேற்றிகாணமுடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. இந்தக் கிராமத்தை உடைமையாகக்கோண்ட தேவஸ்தானத்தின் பிரதானமூர்த்தி ஸ்ரீ கம்பஹரேஸ்வரர். அன்பர்களுக்கு ஏற்படும் பயம் தவிர்த்து ஆண்டு அருள் வழங்கும் பேருமான். ஆகவே அவனருள் கோண்டு தோடங்கும் இச்சங்கமும் எப்பயமுமில்லாது வேற்றி பேற்று வளரும் என்பது திண்ணம். வாழ்க இந்தச் சாகுபடி யாளர் கூட்டுறவு சங்கம். நலம் பல ஓங்கி உயர்க இக்குடி மக்கள். வாழ்க. வாழ்க. வாழ்க உலகேலாம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது
அருளாணையின் வண்ணம்,

திருபுவனம் தேவஸ்தானம்,
19—2—1959.

வித்துவான், இராமலிங்கத் தம்பிரான்
கட்டளை விசாரணை,

குமரகுருபரன் ஆண்டுச் சந்தா 1 — 50

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரசுவாமிகளினுடைய திருப்பேயர்பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தேளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் இவ்விதழ் வேளிவருகிறது.

விலாசம் :- நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்

குருபாதம்

தருமையாதீனத்துக்குச் சொந்தமான

திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில்

மேலராமன்சேத்தி கிராமச்

சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத்தைத் தொடங்கிவைக்கும்

சென்னைமாநில இந்துசமய அறநிலைய, விவசாய, உணவு அமைச்சர்

கனம். திரு. M. பக்தவத்சலம் B. A, B. L., அவர்களுக்கு

வாசித்தளித்த

வரவேற்புரை

நற்பணி தொடங்கும் நல்லீர் வருக ! வருக !!

நாங்கள் இந்தக் கிராமத்தில் ஆதீனக் குடிமக்களாய் வாழ்ந்துவருகிறோம். சாகுபடி செய்துவருகிறோம். உண்மையாக உழைத்துவருகிறோம். உழுது உண்டு வாழும் பெருமை எங்களுக்கு உண்டு. மேலிடத்திலிருக்கும் ஆதீனத்தார்க்கும் எங்களுக்கும் நெருங்கிய தொடர்பு நிலைத்து உள்ள ஒன்று. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எங்களைச் சொந்தப்பிள்ளைகளைப்போன்று ஆதரித்துவருகின்றார்கள். குத்தகையாளர்களும் அவர்களைப்போலவே எங்களை அன்போடு நோக்கிவந்தார்கள். ஈடுகட்டிக் குத்தகை கொள்ளுமளவுக்கு எங்களுக்குப் பொருளாதார வசதி இல்லை. சட்ட நிர்ப்பந்தங்களும் இருந்தன. இவற்றையெல்லாம் உத்தேசித்தும், நாட்டின் எதிர்காலம் கருதியும் இந்தக் கூட்டுறவுமுறைச் சாகுபடியை இப்போது கொள்கின்றோம். இதை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் குருவருளும், திருவருளும் துணையாகக்கொண்டு வெற்றிகரமாக நடத்தவேண்டுவது எங்கள் பொறுப்பு ஆகும். நடத்துவோமென்று எங்கள் இலாகா மந்திரியாகிய தங்கள்முன் உறுதியும் கூறுகின்றோம்.

நாட்டு முன்னேற்றப்பாதையில் இக்கிராமத்தை ஓர் இலட்சிய கிராமம் ஆக்கி, இதன் அபிவிருத்தியில் மறுமலர்ச்சி ஒன்றை உண்டாக்குவது எங்கள் கடமை. இந்த நல்ல நாளில் இதனை நினைப்பதில் பெருமகிழ்ச்சி எங்களுக்கு உண்டு.

கூட்டுறவு சாகுபடிக்கு நாங்கள் சம்மதம் கொடுத்ததி லிருந்து எங்கள் கிராமம் சுபிட்சப்பாதையில் திரும்பியதின் அறிகுறிகளை நாள் தவருமல் பார்த்துக்கொண்டுவருகிரும். அதுவும் ஒருவார காலமாக இந்தக் கிராமத்தில் நடக்கும் அபி விருத்திகளைக்காண எங்கள் கிராமம் செழித்து மக்கள் நல்வாழ்வு வாழ எல்லைக்கோட்டைத் தோட்டுவிட்டதாகவே கருதுகிரும். அரசாங்கமும் தேவஸ்தானமும் எங்களுக்குத் தேவையான ஆக்கமும் ஊக்கமும் அளித்து முன்னுக்குக் கொண்டுவரவேணு மாய்க் கேட்டுக்கொள்ளுகிரும். இந்தக் கூட்டுறவில் சேர்ந்த தின் பெரும் பயனுக கனம் மந்திரி அவர்கள் வருகையைப் பெற்றுப் போற்றிப் பெருமைப்படுகிரும்.

தாங்கள் நல்ல மனமும், உழைப்புக்கு மதிப்புக்கொடுத்துப் பாராட்டும் பண்பும் வாய்ந்தவர்கள். தங்களால் சென்னைராஜ்யம் பலவிதங்களில் பயன்பெற்றுவருகிறது. இத்தகைய தாங்கள் எங்கள் கிராமத்துக்கு வருவது எங்களுக்கெல்லாம் ஒரு தனிப் பெருமை. தாங்கள் நீடுழிவாழவேண்டுமென்று வாழ்த்துகிரும். வருக! வருக!! என்று வரவேற்கின்ரும். இத்தகைய நல்ல வாய்ப்பை எங்களுக்கும் அளித்த ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவடிகளைத் திசைநோக்கித் தெண்டனிடு கிரும் இது அல்லாது அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவிக்கும் வகை வேறு அறியோம்.

தங்கள் வரவு நல்வரவாகுக. வாழ்க! வாழ்க!! என்று வாழ்த்துக் கூறி மகிழ்கிரும். கம்பன் அருளால் மக்கள் கூட்டுறவு ஓங்குக! நாட்டின் நலம் எலாம் வளர்க! வாழ்க உலகெலாம்!

தங்கள் வணக்கமுள்ள

மேலராமன்சேத்தி, 19—2—1959. } சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத்தார்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

திருநெருப் போன்று விளக்கிடை நின்று திகழ்ந்திருக்கும்
தருநெருப் போன்று வன்த்தை யோழிக்குந் தவத்தர்தர
வருநெருப் போன்று அலைவாரியை யுண்ணும் வழுத்தரிய
பெருநெருப் போன்றிரு பெண்கொண்டவனைப் பிடித்திடுமே. 47

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் மேலராமன்சேத்தி கிராமச் சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத்தைத் தோடங்கிவைத்து சென்னை மாநில அறநிலைய விவசாய, உணவு அமைச்சர் "நல்லறங்காவலர்" கனம். திரு. M. பக்தவத்சலம் B. A., B. L, அவர்கள் ஆற்றிய தோடக்கவுரையின் சுருக்கம் :-

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் எனக்கு இந்த சங்கத்தைத் தோடங்கி வைக்கவேண்டுமேன்று சேன்ற மாதம் தேரிவித்தார்கள் அப்போது அவகாசமில்லை. தாமதமானுலும் நான்தான் ஏற்று நடத்தவேண்டுமேன்றுசோன்னார்கள். அதை மறுக்கமுடியாத நிலையில் அமைந்ததே என்னுடைய இந்தச் சுற்றுப் பிரயாணம் என்று கூறலாம். இக்கிராமவாசிகளின் ஒற்றுமையைக் காட்டும் முறையில் இங்கே இவ்விதமான சிறந்த கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் நிர்வாகிகளும் ஆதீனமும் ஒத்த முறையில் நடத்தப்படுகிறது என்பதறிய எனக்குப் பேருமகிழ்ச்சி யுண்டாகிறது. இது மற்ற கிராமங்களுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என்று கூறலாம். இம்முறை நாட்டின் பலபாகங்களிலும் பரவவேண்டும். அவ்வாறு பரவினுல் அதுவே நாட்டு முன்னேற்றத்திற்கும் அறிகுறியாகும்.

நிலச் சோந்தக்காரர்களுக்கும் விவசாயிகளுக்குமிடையே பேரிய வேறுபாட்டை விளைத்து வந்தது முன்பு மேற்கோள்ளப்பட்ட குத்தகை முறை. அதைப்போக்க அரசாங்கம் 60 - 40 வார முறையைக் கோண்டுவந்து விவசாயிகளுக்கு ஒரு நன்மையைச் சேய்ய எண்ணியது. அது இன்று நடைமுறையில் வகையாளப்படுகிறது. அதனுல் விவசாயிகள் நல்ல பயன் பேறுகிறுர்கள். மேலும் நல்ல விளைவுக்கு வழிதேடினுல் இருசாருக்கும் அதிக வருமானம் கிடைக்கும்.

தற்போது விரைவில் வரவிருப்பது நில உச்சவரம்புச் சட்டம். அதுவும் அடுத்த ஆண்டிற்குள் வந்துவிடும் அப்படி சட்டம் வந்தால் பேரும்பாலும் நிலத்தையே எதிர்பார்த்து இருக்கும் தேவஸ்தானங்கள் வேகுவாகப் பாதிக்கப்படும். அவைகளுக்கு விலக்கு அளிக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு சேய்வதாக உத்தேசம். அப்படி அளிக்கும்போது அந்தச்

சட்டத்திலேயே தேவஸ்தானம் போன்ற மதஸ்தாபனங்கள் தரும ஸ்தாபனங்கள் கல்வி ஸ்தாபனங்கள், ஆஸ்பத்திரி போன்றவை நிலங்களைக் கூட்டுறவு முறையில் கட்டாயம் வைக்கவேண்டும் எனச்சொல்லப்படும். அப்போழுதுதான் அந்த விதி விலக்கு உட்பட்டதாகும் என்று சட்டம் வரும். இவ்விதமாக இந்த ஆதீனம் இந்த வழியில் இப்போதே முன்வந்து செய்து காட்டியதைப் பாராட்டுகிறேன். இனியும் இதுபோன்றே மற்ற இடங்களிலும் செய்யவேண்டும். சட்ட நிர்ப்பந்தம் வந்த பிறகு செய்வதில் பல கஷ்டங்கள் வரலாம். அதற்குமுன் இவ்விதம் செய்துவிடுவது மேலாக இருக்கும்.

இக்கூட்டுறவு முறையினால் குடிகள் நல்ல பயன் பேறலாம். அவர்கள் நன்றாக - ஊக்கமாக உழைக்கவேண்டும். நடுவில் யாராவது ஏதாவது சொல்வதைக் கேட்டு நம்பிக் கெட்டுப்போகக் கூடாது. அவ்வாறு செய்வது அவர்களுக்கே கெடுதலை உண்டுபண்ணும். இம்முறை குடிகளை ஊக்குவிப்பதற்கு - நல்ல பயனைப் பேறுவதற்கு நல்லவழியாகும். இக்கிராமத்தில் கூட்டுறவு முறையை ஏற்படுத்தி இவ்வளவு பேரிய விழாவில் என்னையும் ஈடுபடச் செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு எனது நன்றியும் வணக்கமும் உரியதாக்குகிறேன்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Amirthakateswaraswamy Devasthanam
Tirucadaiyur (Mayuram Tk.)

இன்றுதினம் திருக்கடவூர் தேவஸ்தான ஆலயத்தைச் சுற்றிலும் பார்த்து ஆனந்தமடைந்தேன் பிரகாரங்களும் மூர்த்தங்களும் நிலயங்களும் ஆகம ரீதியிலும் சுத்தமாயும் கவர்ச்சிகரமாயு மிருக்கிறது. இராஜகோபுரம் திருப்பணி ஆகம முறைப்படி திருத்தி பணி செய்திருப்பது மேச்சத்தகுந்தது,

(Sd.) T. Purushothaman, M. L. C.,
Madras 5.

(Sd.) நா. சங்கரன்;
Deputy Commr. Corpn. of Madras.
2—6—58.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான

விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் தேவஸ்தானம்

இத்தலத்துத் திருப்பதிகக் கல்வெட்டைத் திறந்துவைக்கும்

சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆணையர்

உயர்திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A. B. L., I. A. S.

அவர்களுக்கு வாசித்தளித்த

வரவேற்புரை

அறநெறி பேணும் சான்றோரே !

தேவாரப் பாடல்கள் பெற்ற சிவஸ்தலங்களில் தெய்வத் தன்மை சிறந்து விளங்குவதைக் காணுகின்றோம். பாடல்பெற்ற பழம்பதி என்று பாமரரும் அத் தலங்களைப் பெருமையோடு பேணி வழிபடுகின்றனர். தேவாரத் திருப்பதிகங்களில் குறிப் பிடப்பெறும் வைப்புத்தலங்களுக்கும் அவ்வாறே சிறப்பு இருந்து வருகிறது. ஏனைய தலங்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு இதற்கு மக்கள் அளிப்பதற்குக் காரணம் திருமுறைகளின் பெருமையே ஆகும் என்று கூறலாம். பாடல் பெற்ற தலங்களுக்குச் செல் லும் அன்பர்கள் அத்தலத் திருமுறைகளைக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதி வழிபடுவர். தலயாத்திரைக்குப் புறப்படும் அன்பர்கள் திருமுறைகளைக் கொண்டுவந்து பாராயணம் புரிவர். ஏனையோர் தெரிந்த திருப்பாடல்களைச் சொல்லித் திருவருள் பெறுவர். இவ்வாறு திருப்பதிகம் பெற்ற தலங்களுக்கு வரு வோர் நியமமாகத் தலத் திருப்பதிகங்களை ஓதிப் பயன் உறும் வண்ணம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், கல்வெட்டில் அவ்வத்தலத் தேவாரத் திருப்பதிகங்களைப் பொறித்துப் பிர திஷ்டை செய்யக் கட்டளையிட்டருளியிருக்கின்றார்கள். பாடல் பெற்ற சிவஸ்தலங்கள்தோறும், அவ்வத்தலத் திருப்பதிகங்கள் அழகிய முறையில் பார்ப்போரைப் படிக்கத் தூண்டும் வகையில் நாட்டப்பெறுதல் மக்களுக்குப் பயன் விளைப்பதொன்றாகும். அச்சுப் புத்தகங்கள் ஏற்பட்ட காலத்தும் வளர்ச்சியடைந்த இக் கல்வெட்டுக்கலை இன்றியமையாததாய் விளங்குகின்றது.

திருமுறை, சாத்திரம் திறம்படக் கற்றோரே !

தேவாரத் திருப்பதிகங்களை ஓதிப் பயன் உறுவோர் எண்ணிலர். வயிற்றுநோய், விஷக்காய்ச்சல், சுரம், பாம்பு, தேள் முதலிய விஷக்கடி முதல் எல்லாப் பிணிகளும் இன்றும் பலர்க்கு அனுபவமாகத் தீர்ந்துவருகின்றன. 'படர்தருஞ் சடைமுடியினுர் பைங்கழலடி பரவுவார் அடர்தரும் பிணிகெடுக' என அருளுவார். 'இன்புறும் தமிழாற் சொன்ன ஏத்துவார் வினை நீங்கிப்போய்த் துன்புறும் துயரம்மிலர் தூநெறி பெறுவார்களே' என்று இத் தலப் பதிகத்திலும் உளது. பிறவிப்பிணி நீக்கும் பெருங்குளிகை சாதாரணமான இந்நோய்களைத் தீர்த்தலில் வியப்பில்லை. இவை எண்ணற்ற இம்மைப் பயன்களைத் தருகின்றன. 'மலர்மகள், கலைமகள், சயமகள், இனமலி புகழ் மகள் இசைதர இருநிலனிடை இனிதமர்வர்; பாரோடு விண்ணைப் பரிபாலனம் செய்வர்; விண்ணவர் விமானம் கொடுவர ஏறி வியன் உலகாண்டு வீற்றிருப்பர்; இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடையாவே' என்றெல்லாம் கூறுவதோடு ஆணையிட்டுப் பயன் கூறும் அரிய திருமுறைப் பதிகங்களை ஓதிப் பயன் உறுவர் உணர்ந்தோர். திருமுறைகளைப் பொருளுணரத் தெளிவுரையோடு வெளியிட்டு வருகின்றது எங்கள் தருமை ஆதீனம்.

கோயிற் பணிகளில் ஆக்கந்தேடும் பெரியோரே !

பாடல்பெற்ற நூற்றுத்தொண்ணூறு சிவஸ்தலங்கள் உள்ளன. காவிரியின் தென்கரைத் தலங்கள் நூற்றிருபத்தேழு. அவைகளுள் ஒன்று திருவிளநகர் என்னும் இத் திருத்தலம். இங்குள்ள பெருமான் துறைகாட்டும்வள்ளல் எனப் பெறுவான். தேவாரத்திலும் இப்பெயர் குறிக்கப்பெற்றுளது. காவிரியிற் கரைகடந்து பெருகிய வெள்ளத்திலும் திருஞானசம்பந்தர்க்குத் துறைகாட்டியவர் இவ்வள்ளல். அவர் அருளிச் செய்த திருப்பதிகம் ஒன்று இதற்கு உண்டு. இது தருமை ஆதீனத்துத் திருக்கோயில். அண்மையில் திருப்பணிகள் எல்லாம் நிறைவுற்று கும்பாபிஷேகமும் நிகழ்த்தப்பெற்றது. இத்தலத் தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுக்களைத் திறந்து வைக்க வருகைபுரிந்த தங்களை வருக, வருக என வரவேற்கின்

றோம். இடையருப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத் திண்படையருத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும், நடையருப் பெருந்துறவும் கொண்டவர் நங்கள் அப்பரடிகள். அவர்களை நினைவூட்டி விளங்கும் தாங்கள் இத் திருப்பணிக்கு ஏற்றவர்கள் எனத் திருவருள் தங்களை நியமித்திருக்கிறது. வருக! வருக!! வாழ்க! வாழ்க!! என வரவேற்று வாழ்த்திசைக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது
அருளாணையின் வண்ணம்,

விளநகர் தேவஸ்தானம், 10—2—59. } வித்துவான். இராமலிங்கத் தம்பிரான்,

---

நவமணிமாலை

வித்துவான், திரு. ப. இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னார்குடி.

இராகம் – ரீதிகௌளை] [தாளம் – ஜம்பை

பல்லவி

ஓங்கார ரூபிணி—ஓங்காளி கௌமாரி
ஓங்கார ரூபிணி (ஓங்)

அநுபல்லவி

ரீங்கார நாதமதில் நீங்கா துறைந்திடும்
ஸ்ரீங்காரி லக்ஷ்மி துர்க்கை (ஓங்)

சரணம்

ஆங்கார ரூபமாம்—அசுரர்கிளை மாளவே
பாங்கான சிங்கமிசை ப்பாய்ந்தேறு மம்பிகையே
மாங்கனியுந் தேன்கதலி தேன்சொரியும் தருமபுரம்
தேங்காதே அருள்செய்யும்—தேவிநீயே சரணம். (ஓங்)

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான

திருக்குவளை என்னும்

திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுள்ளப்படி

தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுக்களின் திறப்பு,

வெள்ளி மஞ்சம் பிரதிஷ்டை ஆகியவற்றை நிகழ்த்தும்

சென்னை மாநில இந்து சமய அறநிலைய ஆணையர்,

உயர்திரு. A. உத்தண்டராமப்பிள்ளை B. A., B. L., I. A. S.

அவர்களுக்கு வாசித்தளித்த

வரவேற்புரை

திருக்கோயில்களின் அமைப்பு தத்துவம் அனைத்தையும் உணர்வது ஒரு தனிக் கலை. கோயில்கள் மக்களின் உடலமைப்பை ஒட்டி எழுந்தவை. உடலில் உள்ள உறுப்புக்கள் எல்லாம் கோயில்களில் காட்டப்பெற்றுள்ளன. ' உள்ளம் பெருங் கோயில் ; ஊன் உடம்பு ஆலயம் ; வள்ளற்பிரானுர்க்கு வாய் கோபுரவாசல்; தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் ' என்பது அகக்கோயிலே புறக்கோயில் என்னும் திருமூலர் கருத்தைத் தெளிவிக்கும் திருமந்திரம். சீவனுக்குள்ளே சிவ மணம் பூக்கக் காண்போர் சிவஞானிகள். அச்சிவஞானிகளே உள்ளத்தில் பூசலார்போல ஒரு சிவாலயம் எழுப்பமுடியும். ஏனையோர்க்குப் புறக்கோயில் வழிபாடுதான் கடவுளருள் பெறுதற்குச் சீரியவழி. இதயத்தானமாக விளங்கும் கோயிலின் இடப்புறத்தில்தான் இன்றும் திருக்கோயில்களில் நடராசப் பெருமான் காட்சிதருகிறுர். இதயத் துடிப்புப்போல இவரது திருநடமும் இடைவிடாது நிகழ்கிறது. அத்தகைய பழம்பெருந் திருக்கோயில்களில் ஒன்ருய்த் தேவாரம் பாடிய மூவராலும் பாடப்பெற்ற தெய்வச் சிறப்புடையதாய் விளங்குவது இத் திருக்கோளிலி என்னும் திருத்தலம்.

அடியார் இடர்தீர்க்க அருளே திருவுருவாய் இத்திருக் கோயிலில் வீற்றிருக்கும் ஆண்டவன் சப்தவிடங்கருள் அவனிவிடங்கர் ஆவர். ஒன்பது கோள்களும் வழிபட்ட உயர்வுடைய இத் தலத்தில் வந்து இறைவனை வழிபடுவார்க்குக் கோள், குற்றங்கள் இல்லை. குண்டையூர்கிழார் தந்த நெல் மலையை நம்பியாரூரர் இத் தலத்துப் பெருமானை வழிபட்டு ஆள்வேண்டிப் பெற்றார். நம்பியாரூரர் ஒருவர்பொருட்டாய்த் திருவாரூர் வாழ்ந்தார் எல்லாருக்கும் நெல் கிடைத்தது. இங்கு மாசித் திருவிழாவில் இந்த நிகழ்ச்சி இன்றும் நடைபெறுகிறது. இத்தகைய சீரிய தலமாக விளங்கும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகேசப்பெருமான் திருக்கோயிலில் தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுக்களைத் திறந்துவைக்க வருகைபுரிந்த தங்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

முசுகுந்த சக்கிரவர்த்தி தேவேந்திரனிடம் தியாகேசனைப் பெற்றான். அன்று அவன் பெற்ற தியாகேசப்பெருமானின் திருவுருவங்கள் ஏழும் ஏழு திருத்தலங்களில் திகழ்கின்றன. ஏழு ஊர்களிலும் தியாகர் ஏழு திருநடங்கள் இயற்றியுள்ளார். அவ்வத் திருக்கோயிலிலும் அவ்வந்நடனம் நடைபெறுகிறது. இத்தலத்தில் வண்டு நடனம். தியாகேசனை முசுகுந்தன் தானே அர்ச்சித்தான். அவன் அன்று நிகழ்த்திய அர்ச்சனை இன்று நிகழ இருக்கிறது. அதற்குச் சிறப்பாக முசுகுந்தார்ச்சனை என்று பெயர், பெரும் பொருட்செலவில் இவ்வர்ச்சனைத் திட்டம் அமைந்திருப்பதால் அடிக்கடி இதனைச் செய்தல் இயலாது. புதிதாகச் செய்யப்பெற்ற வெள்ளி மஞ்சத்தில் எழுந்தருளி அர்ச்சனைகளை ஏற்று இன்று அருள் வழங்க இருக்கிறான் தியாகேசன். இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இறைவன் திருவருட் செல்வத்துக்கு இலக்காக இருக்கும் தங்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாடுகள் இயற்றுவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டவர்கள். தருமையைச் சுற்றியுள்ள தலங்களில் ஒவ்வொரு வாரத்திலும் குறிப்பிட்ட நாட்களில் சென்று வழிபடுவதை நடைமுறையில் கொண்டுள்ளவர்கள். இதுமட்டுமல்லாமல் பல தலங்களுக்கும் விசேஷ காலங்களிலும் சென்று வழிபடுபவர்கள். அவர்கள் செல்லும்போது மற்றவர்களையும் அழைத்துச்சென்று வழிபடச்

செய்கிறார்கள். மாதந்தோறும் திருநட்சத்திர நாட்களில் பாடல் பெற்ற தலங்களில் வழிபாடு நிகழ்த்தி, அத்தலப் பதிகத்தையும் வெளியிடச் செய்தருளுகின்றார்கள். இதனால் ஆதீனத்தில் உள்ளவர்களும் பாடல்பெற்ற தலங்களிலுள்ளவர்களும் பயன் அடைகிறார்கள். பழைய முறையைப் பின்பற்றித் தாங்களும் எல்லாத்தலங்களுக்கும் சென்று வழிபடுகிறீர்கள். அங்குள்ள வர்களையும் அவ்வப்போது நிகழச்செய்யும் விழாக்கள், மாநாடுகள், தலப்பதிகக் கல்வெட்டுத் திறப்பு விழாக்கள் முதலியவற்றிற் கலந்து வழிபடச் செய்கின்றீர்கள். தாங்கள் இத்தலப்பதிகக் கல்வெட்டைத் திறந்துவைப்பதைத் திருவருள் வாய்ப்பாகவே கருதித் தங்களை வருக ! வருக !! என வரவேற்று வாழ்க ! வாழ்க !! என வாழ்த்துகிறோம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது
அருளாணையின் வண்ணம்,

திருக்குவளை தேவஸ்தானம்,
11—2—59.

மாணிக்கவாசகத் தம்பிரான்,
கட்டளை விசாரணை.

சென்னை மாநில இந்துசமய அறநிலைய ஆணையர் உயர்திரு A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L., I. A. S., அவர்கள் கல்வெட்டுத் திறப்புவிழாவில் ஆற்றிய சொற் பொழிவின் சுருக்கம் :-

திருக்கோளிலி எம்பெருமான் திருமுன்பு, சமயாசாரியர்கள் மூவராலும் பாடப்பட்ட தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுகளைத் திறந்துவைக்கும் திருவிழா இன்று நிகழ்கிறது. இதைத் திறந்து வைக்கும் திருவருள் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி யடைகிறேன். கல்வெட்டுகளில் பதிகங்களை அமைத்திருக் கின்றோம். இவற்றை நம் கருத்தில் அமைத்துக்கொள்ளவேண் டியது நம் கடமையாகும். சமயாசாரியர்கள் இங்கு வந்து இறைவனைத் துதித்துப் பாடியது தங்களுக்காக அல்ல ! நமக்கெல்லாம் இறைவன் அருள் கிடைக்கவேண்டும் என்பதற் காகத்தான் பாடினார்கள். அப் பாடல்கள் எப்போதும் நம் நினைவி லிருக்கவேண்டிய முறையில் இன்று இக் கல் வெட்டுப் பணி அமைந்திருக்கிறது.

இத் தலத்திற்கு வழிபட வருகின்றவர்கள் படித்துக் கருத்திலிருத்தி இறைவனை வழிபடவேண்டுமென்பதுதான் இக் கல்வெட்டுத் திறப்பின் முக்கிய நோக்கமாகும். இதைத் திறந்து வைத்து மூவர் அருளிய உண்மைகள் ஒன்றிரண்டைமாத்திரம் தோட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நஞ்சணிகண்டன் :- சம்பந்தர் சிவபெருமானை நஞ்சணி கண்டன் என்று அழைக்கின்றார். இத் தலம் சப்தவிடங்க ஸ்தலங்களிலே ஒன்று. தியாகராசப்பெருமானுக்கு உகந்த தலங்கள் ஏழு. இவற்றைச் சப்த விடங்கஸ்தலங்கள் என்று சொல்லுவார்கள்.

ஆதியிலே மகாவிஷ்ணு தியாகராசப்பெருமானைத் தன் இதயகமலத்திலே வைத்துப் பூசித்துக் கொண்டிருந்தார். (தியாகேசர்) அவர் அப்போது செய்த நடனம் அஜபா நடனம். பாற்கடலிலே பள்ளிகொண்டிருக்கிறார் மகாவிஷ்ணு. ஆதிசேடனாகிய பாம்பு நெளிந்து நெளிந்து அவர் படுக்க இடம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. மூச்சுக்காற்றை உள்ளிழுத்துக் கொண்டும் வெளி விட்டுக்கொண்டும் உறங்காமல் உறங்கும் திருமாலின் இதயகமலத்திலே தியாகேசன் எழுந்தருளி இருந்து இத் திரு நடனம் புரிந்துள்ளான். இதய கமலத்தில் மேலும் கீழும், ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கமும் எல்லாப் பக்கங்களிலும் அசையும் நடனமே அஜபா நடனமாகும் மூச்சுக்காற்றைப்போல செல்லுவதும் மீளுவதும் நடனத்தின் தத்துவம். திருமாலிடமிருந்து இந்திரன் தியாகேசனைப் பெற்றான். இந்திரனுக்கு ஒருகாலத்தில் முசுகுந்த சக்கரவர்த்தி உதவிசெய்வதற்காக இந்திரன் நன்றியறிதலாக ஏதாவது கேள் என்று முசுகுந்தனைக் கேட்டபோது முசுகுந்தன் தியாகராசாவே, எனக்கு வேண்டுமென்று கேட்டான். இந்திரன் தியாகேசனைப் பிரிந்திருக்க மனமில்லாமலும் கொடுக்க மனமில்லாமலும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற ஒரு சூழ்ச்சி செய்தான். தியாகராசனைப்போலவே ஆறு உருவங்கள் செய்து அதனோடு வைத்து இந்த ஏழு உருவங்களில் நீ எதை விரும்பினாயோ அதை எடுத்துக்கொள் என்று முசுகுந்தனிடம் சொன்னான். பெருமான் முதல்நாள் இரவே முசுகுந்தன் கனவில் தோன்றிச் செங்கழுநீர் மாலை அணிந்துள்ள உருவம்தான் நாம் எழுந்தருளியுள்ள மூர்த்தி என்று கூறியிருந்தார்.

முசுகுந்தன் அவ்வாறே செங்கழுநீர் மாலேயோடு விளங்கிய தியாகேசரை எடுத்துக்கோண்டான், இந்திரன் தன் ஆத்மார்த்த மூர்த்தியே போகின்றபோது ஏனைய உருவங்கள் நமக்கு எதற்கென்று ஏழையும் கோடுத்துவிட்டான். அவைகளே திருவாரூர், திருக்குவளை முதலிய சப்தவிடங்க ஸ்தலங்களில் எழுந்தருளியுள்ளன.

தியாகராசா என்ருல் தியாகத்துக்கு ராசா என்று போருள். இறைவன் என்ன தியாகம் செய்தான்? அதைத்தான் சம்பந்தர் சோல்லுகிருர் நஞ்சணியும் கண்டன் என்று. தேவர்களும் அசுரர்களும் திருப்பாற் கடலில் அமுதம் கடைந்தார்கள். நன்மையும் தீமையும் கலந்திருக்கின்ற உலகத்தைப்போலப் பாற்கடலில் மலேமத்தின் அடியில் கயிருகக் கட்டி இழுக்கப்பட்ட பாம்பினிடமிருந்து வந்தது விஷம். அந்த விஷத்தைக் கண்டவுடன் எல்லோரும் ஓடிவிட்டார்கள். மகாவிஷ்ணுகூட அதை நேருங்கியதால் கருநிறமடைந்தார் என்று சோல்லுவார்கள், அப்போது இறைவன் சுந்தரரை அனுப்பி ஆலகாலவிஷத்தை எடுத்துக்கோண்டுவா! என்று கட்டளே இட்டார்.

சுந்தரர் இறைவனது பிரதிபிம்பம். அழகே உருவமாய் அமைந்தவர் - அவர் பாற்கடல் அருகே சேன்று விஷத்தை நேல்லிக்கனி அளவாகத் திரட்டிக்கோண்டு வந்தார். பேருமான் அப்படியே அதை வாங்கித் தான் உண்டு தம் கண்டத்திலே நிறுத்திக்கோண்டார். இது பேருமானின் தியாகச் சின்னமாக விளங்குகிறது. அதுதான் தியாகராசன் செய்த சிறந்த தியாகம்.

மாணிக்கவாசகர் கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு என்று கூறுகிருர். அதுபோல தியாகத்திற்கு ஓர் எல்லே வேண்டுமானுல் எல்லோரும் காணக் காட்டிக்கோண்டிருக்கும் எல்லா உலகமும் உய்ய எழுந்தருளியிருக்கும் தியாகேசனின் திருவருள் பேறுதல் முக்கியமாகும். எல்லா உலகமும் ஆனுய் நீயே! எல்லா உலகமும் உய்யும்போருட்டு எழுந்தருளியிருக்கிருன் அவன். நஞ்சணியும் கண்டன் என்று மிகப் போருத்தமாகத் தியாகேசனின் தியாகச் சேயலே மூவரும் போற்றுகின்றனர்

திருநாவுக்கரசர் மைக்கோள் கண்உமைபங்கினன், மான் மழு தோக்க கையினன் என்று அம்மையும் அப்பனுமாய் நின்றுள்ள தியாகேசனின் உருவத்தை எடுத்துக்காட்டுகிறார். உலகம் உய்ய நல் நெறிகாட்டிய முதல்வர் திருநாவுக்கரசர். மண்ணில் நல்லவண்ணம் வாழவும், வையத்துள் வாழ்வாங்கு வாழவும்; நல் நெறி காட்டியிருக்கும் நாவுக்கரசர்க்கு இறைவன் கயிலைக் காட்சியைக் காட்டினார். ஆணும் பெண்ணுமாகத்தான் கயிலைக் காட்சியை அப்பர் கண்டார்.

அம்மை அப்பனாக மாதொரு பாகனாகக் கண்டார் திருநாவுக்கரசர். காதல் மடப்பிடியோடு களிறு வருவதைக் கண்டார், நம் சமயத்தில் கடவுளை மாதொரு பாகனாகக் காண்கிறோம். பாதி அம்மையும் பாதி அப்பனுமாக அம்மையப்பர் உருவம் அமைந்திருக்கிறது. எவ்வளவு ஒற்றுமையோடு ஆணும் பெண்ணும் வாழவேண்டுமென்பதைக் காட்டுகிறது இவ் வுருவம். எண்ணிப்பாருங்கள். அதைத்தான் குமர குருபரர் மாதொருபாகனை நோக்கி ஒருவன் என்று சொல்வேனா? ஒருத்தி யென்று சொல்வேனா? இரண்டும் கலந்த இவ் வுருவத்தை ஒருவர் என்ற தமிழ்ச் சொல்லால் சொல்லுவதுதான் பொருந்தும் என்று தெரிவிக்கிறார். தமிழைத் தவிர வேறு எந்த மொழியாலும் இந்த உருவத்தை அழைக்க முடியாது. இறைவன் தமிழோடு தொடர்புடையவன். சிவபெருமானும் முருகனும் தலைச்சங்கத்திலிருந்து தமிழைக் கேட்டார்கள். தில்லைக் கூத்தன் திருவாசகத்தைத் தன் கைப்பட எழுதி வைத்துக் கொண்டார், இதைச் சுந்தரம் பிள்ளையவர்கள் கடையூழிக் காலத்தில் தான் தனித்திருக்கும்போது படிப்பதற்காகவும் எல்லாமழிந்தாலும் திருவாசகம் அழியக்கூடாது என்பதற்காகவும் இறைவன் எழுதிவைத்துக்கொண்டதாகக் கூறுகிறார்.

சமயாசாரியர்கள் பாடிய பதிகங்கள் வாழ்க்கைக்குப் பயன் படத்தக்கவை. சுந்தரர் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பவர்கள் உலக மாயையில் இவர் ஈடுபட்டதாகக் கருதுவார்கள். சுந்தரர் இவ்வுலகில் பதினெட்டு ஆண்டுகள் வாழ்ந்தார். பதினாறாம் ஆண்டில் திருமணம். இரண்டாண்டுகள்தான் அவர் மனைவியரோடு வாழ்க்கை நடத்தியுள்ளார். இதற்குள் தல யாத்திரைகள், சேரமான் பெருமாள் நட்பு எல்லாம். இதைப் பார்க்கிறபொழுது அவர் மிகக் குறைந்த காலத்திற்குள்தான்

இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாரெனத் தெரிகிறது. பரவையாரும் சுந்தரரும் திருவாரூரில் அடியார் தொண்டும் இறைவன் தொண்டுகளும் செய்து வந்தனர். சுந்தரர் அடியார்களுக்கு அமுது செய்விக்கக் '' குண்டையூரில் சில நெல் '' பெற்ருர். '' மண்ணினிற் பிறந்தார் பெரும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல் '' அல்லவா? அந்தநெல்மலையை அள்ளிவர ஆண்டவனிடம் ஆள்வேண்டினர். வேண்டத்தக்கது அறிவோன். வேண்டமுழுதும் தருவோன் ஆண்டவன். 'பாலகன் பால் வேண்டப் பாற்கடல் அளித்த பரமனல்லவா அவன். பன்றிக்குட்டிக்குத் தாயாய் முலையைத் தந்தவன் அல்லவா? சுந்தரர் வேண்டியவுடன் பரவையார் இல்லத்தில் நெல்மலையாகப் பொழியச் செய்தார். இந்த இடத்தில் இறைவன் செய்தது தன் பெருமையையும் சுந்தரர் பெருமையையும் காட்டுவதற்கு அல்ல. அடியார் குறைதீர்க்க ஆண்டவன் காத்திருக்கிருன் என்பதைக் காட்டவே.

இறைவனின் எளிவந்த கருணைக்கு மற்ருெரு நிகழ்ச்சி. இராவணன் வழியில் தன்னை மறித்த கைலையங் கிரியைப் புரட்டினுன், அப்பொழுது இறைவன் தன் கால் விரலால் தலைகள் நெறுநெறெனும்படி ஊன்றினுர். அப்பொழுது இராவணன் பெருமான் சாமகானப் பிரியன் என்பதை அறிந்து பாடினுன். அவனுக்கு இரக்கம் காட்டி அருள் செய்தார். அவரவர் வினையின் பயன்களை அவரவர் அனுபவிக்கவேண்டும். என்பதற்குச் சுந்தரர் வரலாற்றில் ஓர் நிகழ்ச்சி. சங்கிலியாருடன் சபதம் செய்து திருமணம் செய்துகொண்ட சுந்தரர், திருவாரூர்த் தியாகேசனைக் காண திருவொற்றியூர் எல்லையைத் தாண்டுகிருர். கண்கள் குருடாகின்றன. இறைவனை வேண்டுகிருர் அவரிடம் இரக்கம் காட்டி ஊன்றுகோல் அளிக்கிருர், ஊன்றீசுரர் கோயிலென்று இப்பொழுதும் உள்ளது. அம்பிகை மின்னல் ஒளியாய் வழிகாட்டினுளாம்; அங்கு மின்னம்மை என்ற பெயருடன் அம்பிகை விளங்குகிருள். காஞ்சிபுரத்துக்கு வரும்பொழுது அம்பிகைக்கு இரக்கம் மேலிட்டுத் தன் பக்கமாகிய இடப் பக்கக் கண்ணைத் தருகிருள். பின்னர் இரண்டு கண்களையும் பெறுகிருர். இந்நிகழ்ச்சி அவரவர் வினைப்பயன் துய்க்கவேண்டுமென்பதைக் காட்டுகிறதல்லவா? இறைவனை வழிபட மனம் மொழி மெய்களின் தூய்மைவேண்டும்.

இறைவன் திருவருள் பெறுதற்கு நாம் பெரிதும் முயல வேண்டும். திருமுறைகளை ஓதவேண்டும். திருக்கோயில் வழிபாடு செய்யவேண்டும்.

திருத்தொண்டத் தொகையிலிருந்துதான் பெரியபுராணம் பிறந்தது. சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரக் கருத்தாகிய 'மாலறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே' என்றதற்கு இலக்கியமாக சுந்தரர் பாடிய பதிகங்களில் இத்திருத் தொண்டத் தொகை மிகச் சிறந்தது. அடியார்கள் செய்த அன்பு வழிபாட்டை உணர்ந்து நாமும் செய்யப் பழகிக்கொள்ளல்வேண்டும். இத்திருக்கோயில் கல்வெட்டுக்களைத் திறந்துவைக்கும் வாய்ப்பினைத் தந்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துக்கு என்னுடைய வணக்கமும் நன்றியும் உரியன.

நவமணிமாலை

வித்துவான், திரு. ப. இராமநாதபிள்ளை, தமிழாசிரியர், மன்னார்குடி.

காப்பு

இராகம் – நாட்டை] [தாளம் – ஆதி

பல்லவி

ஐங்கரனைத் தொழுவோம்—அன்புடனே நாம்
சங்கரி மகாலக்ஷ்மி—சக்திதுர்க்கையைப் பாட (ஐங்கர)

அநுபல்லவி

சங்கத் தமிழ் வளர்க்கும்—சங்கரன்தன் குருவாம்
செங்கை வடிவேலனை—அங்கையால் தொழுவோம் (ஐங்கர)

சரணம்

நங்குற்றமே தீர்த்து—நாளும் நலம்பெருக
இங்குற்ற ஞானபீடம்—தங்கிவளர் தருமை
தங்கத் தமிழ் சைவம்—எங்கும் பெருகவளர்
துங்க ஞானம் தரும்—நங்குரு பதம்போற்றி. (ஐங்கர)

வேளூர்

நவரத்ந கவசத் திருப்பணி

(மாயூரம், திருப்பணிக் குழுவினர்)

திருவருட் பெருமை உடையவர் உலகில் எக் கவலையும் இன்றி வாழ்வர். அவர்க்கு இரவானாலும், பகலானாலும் ஒன்றே. அவரால் உலகு வாழும். அத்தகைய அநுபூதிமான்களாகிய நம் சமயாசாரியார்கள் தம் திருவருட் பேற்றை உலகும் அடைந்து ஓங்கி வாழவேண்டுமென்ற பேருள்ளங் கொண்டார்கள். பதிகள்தோறும் சென்று பாடல் பாடினார்கள்; அவற்றுள் புள்ளிருக்குவேளூரும் ஒன்று, இத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு நவரத்ந கவசம் செய்வித்து அணியும் திருப்பணி புரியத், தருமையாதீனத்துக்குச் சொந்தமான அத் திருக்கோயிலின் பரம்பரைத் தருமகருத்தர் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையையும் ஆசியையும் பெற்று நாங்கள் முயன்று வருகின்றோம். ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி கண்கண்ட தெய்வமாய், கலியுக வரதராய் விளங்கும் பெருமான், வைத்தியநாதப் பெருமானது வேறுருவாய் உலகுக்குக் கிடைத்த பரம் பொருள். இப்பெருமானுக்குச் செய்யும் திருப்பணியில் ஒவ்வொருவரும் பங்குகொள்ள வேண்டும். வாழ்வில் இன்பம் அடைய விரும்பும் நாம், அவ்வின்பத்தை நிலையாகப் பெறவேண்டும் அல்லவா? ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமியின் திருவடிபரவினால் அந் நிலைத்த இன்பச் செல்வம்கிடைப்பது உறுதி. ஸ்ரீமத் குமரகுருபரசுவாமிகள் முத்துக்குமார சுவாமிப் பிள்ளைத்தமிழில் இதனைத் தெளிவாக்கியுள்ளார்கள்.

"ஒழியாத புவனத்து உயிர்க்கு உயிரதாய்நிற்பது
ஒருதெய்வம் உண்டெனஎடுத்து
உரையால் உணர்த்துவதை ஒழிய எவர்எவர்கட்கும்
ஊன்கண் உளக் கண்ணதாம்

விழியாக முன்நின்று தண்ணளிசுரந்து அவர்கள்
வேண்டிய வரம் கொடுப்பான்
மெய்கண்டதெய்வம் இத் தெய்வம் அல்லால்புவியில்
வேறுஇல்லை என்று உணர்தியால்
பொழியாத புயல்தங்கு புவனமும் திசைமுகப்
புத்தேள் பெரும் புவனமும்
பொன்னுலகும் மண்ணுலகும் எவ்வுலகு வேண்டினும்
பொருள்அன்று இவற்கு மற்ற
அழியாத வீடும் தரக்கடவன் இவனுடன்
அம்புலீ ஆட வாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ ஆட வாவே. ''

என்றது அது. அதுமட்டுமோ? ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானைத் தையல்நாயகியம்மை பாராட்டிப் போற்றும் சிறப்பை உரைத்துள்ள திருப்பாட்டை அறியுங்கள்.

வார்ஆட்டு தடமுலைப் பால்ஒழுகி வழிவதென
மணிமுறுவல் நிலவுகாலும்
மழலைவாய் முத்துண்டும், உச்சிமோந் தும்,திரு
மடித்தலத் தினில்இருத்திப்
பாராட்டி யும்,தமது கண்மணிப் பாவைநின்
படிவமாகக் காட்டி "இப்
பாலரோடும் விளையாடு" எனப்பணித் தும்,தங்கள்
பார்வைகளி யாடச்செயும்
தார்ஆட்டு மதிமுடித் தீராத வினைதீர்த்த
தம்பிரானும் தம்பிரான்
தழல்உருவில் ஒருபாதி குளிரஒரு புறம்நின்ற
தையல்நா யகியும்வைத்துச்
சீராட்டி விளையாடு சேனு பதிக்கடவுள்!
சிறுதேர் உருட்டியருளே;
திருவளர வளர்கந்த புரிவளர் இளங்குமர!
சிறுதேர் உருட்டியருளே.

நமக்குக் கடவுளருளால் கிடைத்த பொருட் செல்வம் முதலியவற்றை அருட் செல்வம் ஆக மாற்றிக்கொள்வதே இன்ப வாழ்க்கைக்குத் தக்கதொரு மேலான வழி. இது

பல யுகங்களுக்கு முன்பே கண்ட உண்மை. ஆதலின், அன்பர்கள் இத் திருப்பணிக்கு மகிழ்ந்து உதவுவார்களாக.

இத்திருப்பணியின் உத்தேசமதிப்பு ரூ.160000. ஆகவே அன்பர்கள் தங்களால் ஆன உதவிகளையெல்லாம் செய்து எங்கள் முயற்சியை முற்றுவிப்பார்கள் என்ற முழு நம்பிக்கை உடையோம். நமக்கு உயிர்க் கவசமாகிய அப் பெருமானுக்கு நம் அன்பின் சின்னமாக ஒரு நவரத்ந கவசம் செய்வது நம் கடமை அல்லவா? இதற்கெனத் தனி உண்டியல் ஆலயத்தில் கோடிமரத்துக்கு அருகில் (10—2—59)ல் வைக்கப்பட்டிருக்கிறது. அன்பர்கள் அதில் சேர்க்கலாம்.

இத் திருப்பணியில் எல்லோரும் பங்குகொண்டு இதனை விரைவில் முற்றுவித்துத் திருவருளும் குருவருளும் உற்று நல்லன எல்லாம் பெற்று இனிது வாழ்க.

“ தருமன்னு பொன்னுலகும் மண்ணுலகும் ஒக்கத்
தலைத்தலை மயங்கத் தோகும்
சந்நிதி அடைந்தவர்கள் பையுள்நோய் முற்றும்
தவிர்ந்து அக மகிழ்ந்து தவிராக்
கருமன்னும் ஊழிப் பெரும்பிணியும் மாற்றிடுதல்
கண்டனை இருத்திஆல் நின்
கயரோக முடன்முயற் கறையும் துடைத்திடக்
கருதிடுதி யேல் எம்பிரான்
திருமுன்னர் அள்ளியிடு வெண்சாந்தும் மற்றைத்
திருச்சாந்தும் நிற்க வற்ருச்
சித்தாமிர்தத் தடத் தீர்த்தத் துறைக் குறுந்
திவலை ஒன்றே அமையும்ஆல்
அருவென்ன உருவென்ன அன்றென்ன நின்றவனேடு
அம்புலீ ஆட வாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ ஆட வாவே ”

குறிப்பு :- அன்பர்கள் திருப்பணிக்கு உதவும் பொருள்களை கமிட்டி பொக்கிஷதார் ஸ்ரீ T. S. தியாகராஜ அய்யர், (Correspondent. Hindu & Swadesamitran) 62, மகாதானத்தெரு, மாயூரம் P.O என்னும் விலாசத்திற்கு அனுப்பவும்.

தல அமைப்பு

வித்துவான், திரு. சாமி. ஞானப்பிரகாசம்
தமிழாசிரியர், கீழைக்கலை உயர்பள்ளி, தருமபுரம்

மந்திரமும், தந்திரமும், மருந்துமாகித் தீராநோய்களெல்லாவற்றையும் தீர்த்தருள வல்லானாகிய சடைமுடியெம்பெருமான் எழுந்தருளி இனிதமர்ந்து வேண்டுவார்க்கு வேண்டுவன அருளிய மேம்பாட்டுடன் விளங்கும் தலம் திருப்புள்ளிருக்குவேளூர்.

சரவணப் பொய்கையுள் இருந்து உமையம்மையால் ஆறு முகமும் ஒன்றுசேர இறைவன் கையில் சத்திவேல் கொடுப்ப, அதுகொண்டு சூர்தடிந்து அடியார்க்கு இன்பம் நல்கிய சேந்தில் அமர் கந்தவேள் எழுந்தருளி, அடியார்க்கு பொருளன்றி, மற்றை அழியாத வீட்டையும் தருவதாகி அமர்ந்தருள்புரிகிறான். ஆகவே இப் புள்ளிருக்குவேளூர், தலங்களுக்குள் திலகமாக விளங்கும் தகுதியுடைய தலமாக விளங்குகிறது.

இருப்பிடம் : தன்னைவந்து தஞ்சமெனப் புகுந்த புறவின் உயிரைக் காப்பாற்றியவனும், கன்றுக்குச் சமமாகத் தன் மைந்தனைத் தேரிலிட்டு முறைசெய்தவனும் ஆகிய சோழர்கள் ஆண்ட சிறப்புள்ளதும் சோழநாடு சோறுடைத்து என நீங்காச் சிறப்புடையதுமான சோழநாட்டிலுள்ளது. சோழநாட்டின்கண் கீழ்கடலுக்கும், திருவெண்காட்டிற்கும் மேல்திசையில் ஒரு யோசனை தூரத்திலும், சாயாவனத்துக்குத் தென்கீழ்த்திசையிலும், காழியம்பதிக்குத் தென்மேற்குத்திசையிலும், திருவாளொளிபுத்தூருக்குக் கீழ்த்திசையிலும் அமைந்த சிறப்புள்ளது. மற்றும் தற்கால வசதிக்காகப் புகைவண்டித் தொடர் நிலையம் தலத்தின் மேற்கிலும், உள்ளது. பேருந்து வசதியும் உண்டு. தலத்தைச் சூழக் கழனிகள் அழகு செய்கின்றன.

வீதிகள் : தலத்தைச் சுற்றிலும், அல்லிமலரனைய நான்கு கவின் மிக்க வீதிகளும், வீதிகளில் சிவனடியார்கள் தங்கி

இறைவழிபாடு செய்யவும், பலநாள் இருந்து புத்தியை ஒன்ற வைத்துப் பூசனைபுரிகின்ற திருநெறிய தமிழ் வல்லவர்களும், முனிபுங்கவர்களும் இறைவழிபாடு மூன்று வேளைகளிலும் ஆற்றி, மும்மலங்களை அறுத்து வீடுபேற்றுக்குத் தவம் புரியும் பெரியோர்களும் இனிதிருக்க, அன்னச்சாலைகள், மடாலயங்கள், மாளிகைகள், பூசை மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், சத்திரம் முதலியன கவின்பெறுங் காட்சியனவாய் அணியணியாய் விளங்குகின்றன.

வனங்கள் : இத் தலத்தைச்சுற்றி, வனங்கள் பலருக்குப் பல பேறளித்தனவாகவும், விலங்குகளுக்கும், தேவர் முதலானோர்க்கும் விழுமிய வரங்கொடுத்த கெழுமியனவாகவும் எல்லையற்ற பரம்பொருளை நினைவுபடுத்தி நிற்கின்றன. நைமிசாரணியம் என்ற வனமாயிருந்த இடமே தற்சமயம் ஆலயமாக விளங்குமிடம். சௌனகாதி முனிவர்கள் காஞ்சி சென்று படைத்தற் பெருமானை நோக்கித் தவமியற்ற ஓர் சிறப்புள்ள இடமொன்றை அருள்வீராக என வேண்ட, உடன் ஒரு தருப்பையை எடுத்து, அந் நான்முகன் உருட்டிவிட்டு இச் சக்கரம் நிற்குமிடமே உங்களுக்குத் தவமியற்ற ஏற்ற இடமென்று அருள, அவ்வாறே முனிவர்கள், அதன் பின்தொடர, அச் சக்கரம் மேருமலையின் தென்திசையிலுள்ள ஒரு வனத்திற் றங்கியது. நைமிசம் தங்கினமையால் நைமிச ஆரண்யம் எனப் பெயர் மிளிர்வதாயிற்று. நீண்டகாலம் தவமியற்றிய முனிவர்கள் அங்கேயே மதில்கள், கோபுரங்கள், அன்னசத்திரங்கள், திருச்சுற்று மாளிகைகள் முதலியன ஏடுப்பித்துச் சிறப்பாக யாகசாலையை அமைத்து யாகம் புரிந்துத் தங்கள் கருத்தை முடித்துக்கொண்டார்கள்.

தலச் சிறப்பு : இத் தலத்திற்குப் பல பெயர்கள் காரணப் பெயர்களாகவே அமைந்துள்ளன. சடாயு பூசித்ததால் சடாயு புரி யெனவும், வேதம் பூசித்ததால் வேதபுரியெனவும், கந்தவேள் பூசித்ததால் கந்தபுரி யெனவும், சூரியன் பூசித்ததால் பரிதிபுரி யெனவும், அங்காரகன் பூசித்ததால், அங்காரகபுரம் எனவும், அம்பிகை பூசித்ததால் அம்பிகாபுரமெனவும், இங்குக் கூறப் பெற்ற முதல் மூன்றாகிய, புள் (சடாயு), இருக்கு (வேதம்), வேள் (கந்தவேள்) மூவரும் பூசித்த சிறப்பான காரணம்பற்றி

'புள்ளிருக்கு வேளூர்' என்றும் புகலப்படுகிறது. தீராநோய் தீர்க்கின்ற பெருமானைக் காவல் செய்யுமுகத்தால் கீழ்த்திசையில் வைரவரும், மேற்றிசையில் வீரபத்திரரும், தென்றிசையில் கற்பக விநாயகரும் துர்க்கையும், வடதிசையிற் காளியும் இருந்து ஏவல் புரிகின்றனர். மற்றும் கீழவீதியில் தஞ்சை மாவட்ட உயர்நிலைப் பள்ளியும், தருமையாதீனம் 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாட்சியில் நிறுவப் பேற்ற இந்து அனுதை விடுதியும், தெற்குவீதியில் ஊராட்சி மன்றமும், அஞ்சல் நிலையமும், சத்திரமும், மேலவீதியில் வணிக முறையில் சிறந்த பண்டமாற்றுச் சாலைகளும் திருத் தேர்களும், யானைகட்டு மண்டபமும், வடக்கு வீதியில் விண்ணளாவிய மனைகளும், திருச்சுற்று வீதிகளாகக் காட்சி நல்குகின்றன.

தீர்த்தங்கள் : இத்தலத்தைச் சுற்றியும், தலத்தினுள்ளும் பலபேறுகளை வழங்கக்கூடிய தீர்த்தங்கள் உள்ளன. கீழைக் கோபுரத்துக்கு முன், கீழவீதியின் கிழக்கில் முனிவர் தீர்த்தம் ஒன்றுள்ளது. இதனை இப்போது வேட்டுக்குளம் என வழங்குவர். இதில் ஆவணிமீ மூல நட்சத்திரத்தில் ஸ்நானம் செய்வோர் சிவகணங்களாகத் திகழ்வர். இத் தீர்த்தத்தில் பல இன்னல்களிழைத்த வீரபத்திரர் கைலைப்பெருமான் ஆணையால் ஸ்நானம் செய்து தன் பாவத்தை நிவர்த்திசெய்துகொண்டனர். இன்னும் தென்கீழ்த்திசையில் பிர்ம்மதீர்த்தம் ஒன்றுளது. பிரமன் இத் தீர்த்தக்கரையில் ஸ்நானமாடி, பூசைபுரிந்து பல வரங்களையும், படைப்பு ஆற்றலையும் பெற்றுர். பிரமனுல் உண்டானமையின் பிரம தீர்த்தமாயிற்று. தற்போது இதனைக் 'கங்கைக்குளம்' என வழங்குகின்றனர். மற்றும் இத்தலத்தின் வடகீழ்த்திசையில் தக்கனது ஆட்டுத்தலை நீங்கப்பெற்ற சிறப்பும், பிரமகத்தி முதலியன நீங்கப்பேற்றதுமான தக்க தீர்த்தம் ஒன்றுளது. இத் தக்க தீர்த்தத்தின் ஐந்து விற்கிடை தூரத்தில் 'தாமிரபர்ணி' என வழங்கும் வித்யாதர தீர்த்தமும், ஆலயத்துக்கு வட திசையில் வில்வ தீர்த்தமும், கடைத்தெரு விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் இராமதீர்த்த மொன்றுமுளது. ஸ்ரீ ராமபிரான் தண்டகாரண்யத்தில் வதிந்தபோது இத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தருப்பணம் கோடுத்து, வினை தீர்க்கும் விண்ணவனை வணங்கி ஏகினன். ஆகலின் இப் பெயர்பெற்றது. தற்போது இதனைத் 'தாமரைக்குளம்' என வழங்குவர். இராம தீர்த்தத்தின்

வடதிசையில் சோம தீர்த்தமும், இதற்கு அண்மையில் கபில தீர்த்தமும், கீழ்த்திசையில் காட்டாக்கினிபோன்ற கௌதம தீர்த்தமும், மற்றும் சூரிய தீர்த்தமும், ஆலயத்தின் கீழ்த்திசையில் பராசர தீர்த்தமும், மிக முக்கியமான ஆலயத்துக்கு மேற்கே ஆதிகாவேரி தீர்த்தம் ஒன்றுமுளது. தலயாத்திரைசெய்த அகஸ்திய முனிவர் காவிரி தீர்த்தமாகிய தனது கமண்டலத்தை இவ்விடத்தில் சிறிதுகாலம் வைத்து திறங்கொண்ட அடியார்மேல் தீவினை வாராது அருள்செய்யும் பெருமானை வணங்கிச் சென்றனர். அன்றுமுதல் காவிரி யிருந்தமையால் ஆதிகாவிரித் தீர்த்தம் எனப் பெயர்பெற்றுள்ளது. மற்றும் இந்திர தீர்த்தம் முதலான எண்டிசைத் தீர்த்தங்களும், சேட தீர்த்தமும், சூல தீர்த்தமும், ஆக, இவ்வகைத் தீர்த்தங்கள், பல முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள், மானிடர்கள் விலங்குகள் முதலான யாவர்க்கும், மூலையிற் கிடப்பவரை முற்றத்தே விடுபவையாகக் காட்சி நல்குகின்றன.

ஆலய அமைப்பு: ஆலயம் மேற்கு முகமாக அமைந்துளது. நான்கு தீக்கிலும் விண்ணளாவிய கோபுரங்களும், நடுவில் ஒரு கோபுரமுமாக பஞ்சகோபுரங்களும், நீண்ட சந்நிதியும், சந்நிதியின் இருபக்கங்களிலும் விழாக் காலங்களில் அழகு செய்யும் விற்பனை நிலையங்களும், பிறகு பிரசங்க சபா மண்டமும் நடுகோபுர வாயிலுக்கப்பால், தங்கக் கொடிமரமும், மேற்புரத் திருச்சுற்றுமாளிகையில் ஆறுமுகப் பெருமானும், கார்த்திகைத் திருநாளில் கந்தவேலன் இனிதமர்ந்து அருள் வழங்குமிடமாகிய அபிஷேக மண்டபமும், பிறகு வடதிசைச் சுற்றுமாளிகையில் நெற் களஞ்சியமும், துர்க்கை சந்நிதியும், கீழ்ச் சுற்றுமாளிகையில் அலுவலக நிலையமும் கீழக்கோபுர வாசலின் நுழைவழியும், வினைதீர்த்த எம்பெருமான், வேம்படிப் பெருமான், முதலானோர் அமர்ந்துள்ள வேம்படியும் அதே சுற்றுமாளிகையில் தண்டாயுதப்பெருமானும், திருமடைப்பள்ளியும், தென்றிசைச் சுற்று மாளிகையில் தென்முகப்பெருமானும், அம்பிகையின் சந்நிதியும், சந்நிதிக் கெதிரில் சித்தாமிர்த தீர்த்தமுமாக சுற்றுமாளிகைகள் அமைந்துள்ளன.

சித்தாமிர்தத் தீர்த்தம்: இச்சித்தாமிர்தம், அண்ணாமலையானை நினைத்துத் தொழுதாலே பாவம் தீர்ப்பவர் என்று

சம்பந்தப்பெருமான் அருளியதைப் போல, ஸ்நானம் செய்யாமல் கண்ணுற்கண்டாலே போதுமானது. கண்டவர்களிடம் உள்ள குற்றங்கள் யாவும் உடனே மறையும், என ஆன்றோரால் கூறப்படுகிறது.

பெயர்க்காரணம் : கலியுகத்தில் சித்தர்கணம் வைத்திய நாதப்பெருமான் திருமுடியில் தேவாமிர்தத்தால் அபிடேகம் செய்தபோது, அவ்வமிர்தம் பெருகி, இத் தீர்த்தத்தில் கலந்தமையால் சித்த அமிர்த தீர்த்தம் எனக் காரணப்பெயராயிற்று.

வேறு பெயர்கள் : இன்னும் இத்தீர்த்தத்துக்குக் காமதேனுவின் பால் கலந்தமையால் கோட்சீர தீர்த்தமென்றும், சிவன் அடியாரோருவற்குக் கருப்பஞ்சாறுபோன்று மதுரமாயிருந்ததால் இச்சுசார தீர்த்தமென்றும், பலகாலம் சடாயு பலமுறை இதில் ஸ்நானம் செய்து இதன் கரையிலேயே வதிந்திருந்தமையால் சடாயு தீர்த்தமென்றும் பெயர்கள் வழங்குகின்றன. ‘ இதனை சம்பந்தப்பெருமான்’ ‘‘ பத்தியினால் வழிபட்டுப் பலகாலங் தவம் செய்து புத்தியோன்ற வைத்திருந்தான் புள்ளிருக்குவேளூரே.’’ என்ற தேவாரப் பாசுரத்தால் அறியலாம்.

தீர்த்தப் பெருமை : சுந்தரன் என்ற அந்தணனுக்கு வெண்குட்டத்தை நீக்கியதும் அங்காரகன் என்பான் தன் வெண்குட்ட வியாதியைப் பங்குனி மாதச் சேவ்வாயன்று முழுகி நீக்கிக்கோண்டதும், மற்றும் பல துரோகங்களையும், பல நோய்களையும் தீர்க்கும் சக்திவாய்ந்து விளங்குவது இத் தீர்த்தம். இத்தீர்த்தச் சிறப்பை

‘‘ முத்தான பிள்ளையும் தேவியுந்தானுமாய்
மூவர்க்கும் வரமருளியே
முப்பத்து முக்கோடி தேவரும் தேண்டனிடு
மூர்த்தி புள்ளிருக்கு வேளூர்
சித்தாமிர்தக் குளத் தீர்த்த நீராடினோர்
திவலைகள் தேறித்த வுடனே
தீராத நோயையும் போகாத பேயையும்
தேடிப்பிடிப்பிப்பனே ’’

எனவரும் வேளூர்க் கலம்பகத்தால் அறியலாம்.

உள்சுற்றுமாளிகை : துவார பாலகரை வணங்கி உள் சென்றால் பண்ணோன்ற இசைபாடும் அடியார்க்கு மண்ணின்றி விண்ணையும் கொடுக்கும் மணிகண்டனைக் காணலாம். சேடியாய வுடல் தீர்த்து, தீவினைக்கு மருந்துஆகி அருள்புரியும் ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானை வழிபட்டு, மீண்டும் வெளியில் வந்து சுற்றுமாளிகையில் சென்றால் கீழ்த்திசையாக அடியவர் தம் பிறப்பொழித்து, அவர்களுக்குப் பெருவாழ்வும், பேறும் கொடுக்கவல்லனாய ஸ்ரீ முத்துக்குமாரப்பெருமானைக் கண்டு தரிசித்து வெளிவந்து அம்பிகையை வணங்கி வெளிச்சுற்று மாளிகைக்கு வந்தால் அழகிய நந்தவனங்களும், காட்சி நல்கும்.

விழாக்கள் : ஒவ்வொரு மாதத்திலும் கார்த்திகைப் பெரு விழாவாக, இவ்வாலயத்தில் மிளிரக்காணலாம். சிறப்பாகப் பன்னிரண்டு மாதங்களிலும், ஒன்றிரண்டு தவிர, மற்றைய மாதங் களில் விழாக்காலமாகவே இத்தலம் விளங்கும்.

முடிவுரை : ஆகவே சோழநாட்டின்கண் காவிரியின் வடபால் தலங்களுள் மிகச் சிறப்பானதோரு தலமாக விளங்கு கின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றானும் சிறப்புடைய தலம் இதுவாகும். கீழ்வரும் பாசுரத்தால் மூர்த்திச் சிறப்பை நன்குணரலாம்.

" கண்ணுண்டு வானவர்க் கோர் மதியுண்டு
கதியடையக் கருத்து முண்டு
தண்ணுண்டு வலைதேறித்தான் முத்திதரத்
தீர்த்தமுண்டு தையலென்னும்
பெண்ணுண்டு நல்லமுத்துப்பிள்ளையுண்டு
வினை தீர்த்த பெருமான் பக்கல்
மண்ணுண்டு பிறப்பறுக்க மாட்டாமல்
மருந்துண்டு மயங்குவாரே." -வேளூர்க் கலம்பகம்.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

தூப நெருப்புணுங் கற்பூர நெஞ்சிற் றுரேலவரிய
கோப நெருப்புணுங் கொண்டவ னுவியைக் கோலமனைத்
தீப நெருப்புணுநேய் யன்பிலாப் பேண்டைத் தேடிக்கொண்ட
தாப நெருப்புணு மாடவன் செல்வமுந் தன்னையுமே. 48

பாட்டின் வெற்றி

செஞ்சொற்கொண்டல் - வித்துவான், திரு. சொ. சிங்காரவேலனார்.
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

சில பாடல்களைப் படித்தாலே இன்பமாக இருக்கிறது; இன்னும் சிலவற்றைக் கேட்டாலே இன்பமாக இருக்கிறது; மற்றும் பிறவற்றை நினைத்தாலே இன்பமாக இருக்கிறது. அவ் வின்பம் இதயச் சோலையிலே என்றும் குன்றாத இன்பம்; வற்றாத இன்பம். எல்லாப் பாடல்களும் இவ்வின்பத்தைத் தந்துவிடுகின்றன என்று சொல்லமுடியாது. சில பாடல்கள் படித்தால்கூட இன்பம் விளைப்பதில்லை; நினைத்து நினைத்துப் பார்த்தாலும் நெஞ்சில் தங்குவதில்லை சில. நம்மையறியாமல் நம் நெஞ்சோடு நெஞ்சாய் ஒட்டிக் கொண்டு நினைக்கின்ற போதெல்லாம் இன்பம் தரும் பாடல்களே நம்மை வாழ்விக்கும் பாடல்கள்; நம்மை இன்புறுத்தும் பாடல்கள். அப் பாடல்களுக்கும் நமக்கும் உள்ள உறவைச் சூழ்நிலையோ, பொருமையோ, பொல்லாங்கோ துண்டித்துவிட முடியாது. நம்முடைய இன்ப துன்பங்கள் அனைத்திலும் அப்பாடல்கள் பங்கு கொள்கின்றன. இத்தனைக்கும் அத்தகு பாடல்களில் மிகச் சிறந்த புதிய பொருள் ஏதோ புனையப்படுகிறதா என்றால், அப்புதுமை நம் கவர்ச்சி நிலைக்குக் காரணமா என்றால் அதுவும் இல்லை. பொதுநிலையான பொருள்கள் - நாம் எல்லோரும் அன்றாடம் கண்டும், கேட்டும் துய்த்த பொருள்கள்தாம். அவை பாடல் வடிவாக வருங் காலத்து ஏதோ ஒரு மந்திரசக்தி பெற்றுவிட்டனபோல் தோன்றுகின்றன. அறிந்த சொற்கள் நம் முன்வந்து அழகுநடமிடுகின்றன. உலகின் மறைந்த பேரழகு - உலகின் உறையும் ஒப்பற்ற ஆற்றல் அப்படி உருவாகிறது; அதற்குத் தக்க கிண்ணமாகக் கவிதையைப் பயன்படுத்துகிறான் கவிஞன்.

பாட்டு என்ற தெய்விகக் கருவி பாவலனிடம் இருக்கிறது. அவன் அதைக் கொண்டு உணர்வுலகத்தை இயக்குகிறான். படிப்போன் கேட்போன் உணர்ச்சிகள் கவிஞன் கூறுகிறபடியெல்லாம் ஆடுகின்றன. ஆம்; குரங்காட்டியைத் தெருவிலே காண்கிறோம். குரங்குகளைத் தன் திறமையால் ஆட்டிவைக்

கிருன் அவ்வெளியவன். அதைப்போல்தான் இங்கும். கவிஞன் சொற்படி உணர்ச்சி ஆடுகிறது; உயிர் ஆடுகிறது; பாட்டு பண்பாடுள்ள இடத்தில் வீற்றிருக்கிறது. சில பாடல்களுக்கே இத்தகு ஆற்றல் இருக்கிறது. பல பாடல்களுக்கு இல்லையே என்றால் அது பாடியவன் குறை. பிறரை மயக்கிப் பொருள் பறிக்கப் பாடியதாயிருந்தால், பிறரோடு போராடும் நிலையில் பாடியிருந்தால், பிறனை வெல்லும் நோக்கோடே பாடியிருந்தால் அஃது அவ்வளவு தூரம் நிலைப்பதில்லை. கவிதைக் கன்னியும் தானும் கலந்திருந்து, உணர்ச்சிக் குவியல்களை உள்ளத் தடத்தில் பெருகச் செய்து அதன்மூலம் பாட்டு அருவியைப் பெருக்கெடுக்கச் செய்யும் பாவலனே இத்தகைய சாவா மூவா நிலையமைந்தவற்றைத் தருகிறான். அப்போதுதான் தாழ்ந்த பொருளென்று நாம் நினைப்பவை உயர்கின்றன; எளியவை என்று எண்ணி நம்மால் ஒதுக்கப்படுபவை யெல்லாம் உயர் கின்றன; நம் அகக்கண் திறக்கப்படுகின்றது.

இயற்கைப் பேரழகை மூடியிருக்கும் திரையைப் பாடல் களைகிறது. இயற்கையின் பேரருள் நிலை வெளிப்படுகிறது. துலக்கப் பெற்றுத் திகழும் தூய பொருள்களையே எங்கும் பார்க் கிறோம். இது பாடல் அநுபவம். பெரும் பேராசிரியராகவும், கவிஞர் பிரானுகவும் விளங்கிய ஷெல்லி (Shelly) பின்வருமாறு எழுதினார்:

"Poetry lifts the veil from the hidden beauty of the World, and makes familiar objects be as if they were not familiar."

ஆழ்ந்த சிந்தனை கவியாக்கப்படுகிறது; ஆனால் அதனோடு ஓசை யின்பமும் கலக்கிறது; அவ்வின்பம் செறிந்தமையின், 'Poetry, therefore, we will call musical thought' என்றார் கார்லைல் (Carlyle). சங்கப் பனுவல்களிலும் பிற்காலப் பனுவல்களினும் அனைத்திலும் பற்பல பாடல்களைப் படிக்கும் போது இந்த அநுபவம் நமக்குத் தோன்றக்கூடும்.

இப்பொழுது அப்படி ஒரு சிந்தனை.

கார்காலம் வந்துவிட்டது; அவள் காதலனைப் பிரிந்த ஒரு காதலி. அவளைப் பிரிந்த அவன் நெடுந்தூரம் சென்றிருக்கிறான் பொருள்தேட. கார்காலத்தில் வருவேனென்று கூறிச் சென் றிருந்தான் அவன். ஆனால் வரவில்லை. பாவம், அவள்

என்செய்வாள்? வருந்துகின்ருள். காலத்தின் கோலத்தைக் கண்திறந்து பார்க்கின்ருள். எங்கும் மழை. மேகங்கள் திரண்டு திரண்டு மழை பொழிகின்றன· தன் உடம்பை நோக்குகின்ருள். அங்கே பிரிவால் உண்டாகிய நிறவேறுபாடு. அதனைப் 'பசலை' என்றுரைத்தல் பழைய இலக்கிய வழக்கு. உடம்பெல்லாம் பசலைமழை பொழிந்துவிட்டதாம். குயில் கூவினல் அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும்போலிருக்கிறது; கார்கால மாதலின் குயில் கூவவில்லை. என் செய்ய இயலும்? காற்றுச் சுழன்றடிக்கிறது வெளியில்; காற்றுச் சுழன்றடிக்கிறது இவள் நெஞ்சிலும். மழை பொழிகிறது வெளியில்; பசலை மழை கொட்டுகிறது இவள் உடலிலும். இத்தகைய காலத்தில் தலைவர் வரவில்லையே என்று தவிக்கிருள் அந்தத் தலைவி.

அந்த நிலையிலும் அவளுக்கு ஒரு கற்பனை; மேகங்கள் பசுக்கள்; அவை கடல் நீரை வயிறு முட்டக் குடித்தன. மலைகளில் ஏறி மேய்ந்தன. காற்று என்ற இடையன் அவற்றை மேய்த்தான். பின்பு ஆகாயமென்னும் பெருவெளியிலே மேயச் சென்றனவாம் அம் மேகப் பசுக்கள்; நல்ல வளமிக்க பசுக்க ளாதலின் பால் சொரிகின்றதாம்; ஆம் 'சோ' வென்று பெய்யும் பெருமழையைப் பால் என்ருள் அந்தப் பெண்; அந்த வானப்பால் இயற்கைத் தாய்ப்பால்; அதை உண்டு உயிர்கள் வாழ்கின்றன; இவ்வண்ணம் சிறக்கும் காலம் இது என்று எண்ணுகிருள் அவள்.

இங்கே ஒரு குறிப்பும் புலப்படுத்துகிருள். மனிதவர்க்கத் தைச் சேராத இடத்திலும் உயிரை வளர்க்கின்ற இந்தக் கருணை இருக்கிறது. ஆனல் என் காதலர்க்கு மட்டும் இந்தப் பண்பு இல்லையோ? 'என்னை வாழவைக்கும் கருணை மழை இல்லையோ அவரிடம்' என்று எண்ணுகிருள்போலிருக்கிறது அம் மங்கை.

பாட்டு பெண்ணின் குரலாக அமைந்திருக்கிறது; மழை நமக்கு இப்படி ஓர் அரிய கற்பனையை எழுப்புவதில்லை. ஆனல் கவிஞனுக்குத்தான் அஃது எப்படியெல்லாம் தோன்றுகிறது! அதனடிப்படையில் கற்பனைமழை பொழிந்து நம் மனச்சுடரைத் தூண்டிவிடுகிருன் கவிஞன். அற்புதமான நடையழகும், கருத்தும், ஓசையின்பமும், அடங்கிய அப்பாடல் இதுதான்:

"மேகமேனும் பசுநிரைகள் கடல்நீர் மாந்தி
வெற்பேறி மேய்ந்திடையன் வீடுகாற்ருக

மாகமேனும் பெருவேளிக்கே பரந்து சென்று
மழையெனும்பால் பொழிந்துயிரை வளர்க்குங்காலம்
போகமேனும் பசலைமழை பொழியுங் காலம்
புள்ளிருக்கு வேளூரர் புணராக் காலம்
காகமிடம் வளர்ந்தகுயில் கூவாக் காலம்
கான்மோதுங் கார்காலம் காலந்தானே ''

இது படிக்காசுப் புலவர் என்ற புலவர் பாடியுள்ள புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் என்ற நூலின்கண் (24) அமைந்த ஒரு பாடல். தலைவியின் கூற்றிலே வைத்து மிக அழகாக இப் பாடலைப் புனைந்துள்ளார் பாவலர். புள்ளிருக்கு வேளூரில் கோயில் கொண்டு வீற்றிருக்கும் சிவபிரானே இவள் காதலர். அப்பெருமான் 'புணராக்காலம்' எப்படி அவளுக்குத் தீமை பயக்கிறது என்பதை அவள் கூற்ருகவே வைத்து 'வாக்கு மூலம்' (Statement) வழங்கிவிட்டார் புலவர். தீர்ப்பு நம் பக்கம்; அவள் படுந்துயரம் களையச் சிவபெருமான் அருள் புரியத்தான் வேண்டும் என்ற நல்ல தீர்ப்பே அது.

பாடலைப் படிக்கும்போது நாம் கார்காலத்தில் இருப்பது போல ஓர் உணர்ச்சி உண்டாகிறது அல்லவா? எங்கும் பெய்யும் மழையின் இரைச்சல் நம் காதுகளில் ஒலிக்கிறது; நீரின் தண்மை நம் மேனியில் படுகிறது. அந்த மழைக் காட்சியோடு மனமயங்கும் ஒரு மங்கையின் அவலக் காட்சியும் சேர்ந்து ஓர் ஓவியம் உள்ளத்தே உருவாகிறது. அந்த அநுபவம் பாட்டைப் படிக்கும்போதெல்லாம் தோன்றுமாறு பாட்டு இன்பமாக நடக் கிறது. ஆம்; இதுவே பாட்டின் வெற்றி; 'பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னுமோர் பைங்கிளி - என்பது இவர் தனிப் பாடலில் ஒரு வரி. பாட்டிற் சிறந்த படிக்காசர் பாடிய இக் கலம்பகத்தில் இதையொத்த நலம்செறிந்த பாடல்கள் நூறு உள்ளன. அனைத்தும் இவ்வெழில் நிரம்பிய - பாட்டின் வெற்றி உடைய உயிரோவியங்கள். அவற்றைப் படித்துப் படித்து இன்புறுங்கள்; இறைநலம் கண்டு இன்புறுங்கள் என்று ஆற்றுப் படுத்துவதே என் விருப்பம். 'படிக்காசன் உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைத் தோட்டாலும் கைமணக்கும்; சொன்னாலும் வாய்மணக்கும்; துய்ய சேற்றில் நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடும்' - என்று பாடியுள்ளமை புனைந்துரையன்று என்பது அறியத்தக்கது. உயர்ந்த கவிதை அநுபவத்தை எப்படி யெல்லாம் சொல்லுகிருர்கள் நம் பெரியவர்கள்!

ஆராய்ச்சிக் குறிப்புகள்

பன்மொழிப்புலவர், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள்
(ஓய்வுபெற்ற ஆராய்ச்சிப்புலவர், சென்னைப் பல்கலைக் கழகம்)

1. பாம்பின் விஷவேகம்

பேரிய புராணத்தில் உள்ள அப்பூதியடிகள் புராணத்தில், வாழையிலையைக்கொண்டுவரச் சென்ற குமாரன் அராத் தீண்டப் பட்டு உடனே வீட்டை அடைந்தான். பின்,

"எரிவிடம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார் பால்வைத்துப் படிமேல்வீழ்ந்தான்."

ஏழாம் வேகம் தலைக்கொண்ட மைந்தன் பல்லும் கண்ணும் மேனியும் கருகப் பெறறு உரை குழறிக் கீழே விழுந்தான் என்பது 'எரிவிடம்' என்னும் இச் செய்யுளில் கூறப்பட்டுளது.

இங்கு, பாம்பின் விஷவேகம் எத்தனை? ஏழாம் வேகம் யாது? என்பவற்றை அறிதல்வேண்டும். ஆதலின், விஷவே கத்தின் விவரணத்தை இங்கு எழுதுதலாயினேன்.

விஷவேகத்தின் தொகையும் அவற்றின் செயலும் காசியப ஸம்ஹிதையில். (4 : 55, 66)

"பேதா தசைவ தத்ராதௌ ரோமஹர்ஷோ பவிஷ்யதி ।
தாஹஸ்வேதௌ கபச்சைவ ஸர்வாங்கோத்வேஜநம் புந : ॥"

"ஸர்வாங்கபாரவச்யம் ச லாலாஸ்ராவ : ப்ரலாபநம் ।
ஸ்ம்ருதிமோஹ : க்ரமாத்தஸ்ய தசமம் மரணம் பவேத் ॥"

என்னுஞ் சுலோகங்களில் கூறப்பட்டுள்ளன. அவை :—

1 ரோமஹர்ஷம் — மயிர்க் கூச்சு
2 தாஹம் — உடம்பு எரிச்சல்
3 ஸ்வேதம் — வியர்வை

4 கபம் — கோழை, குளிர்த்தி
5 ஸர்வாங்க உத்வேஜநம் — எல்லாவுறுப்புக்களிலும் வலி
6 ஸர்வாங்க பாரவச்யம் — எல்லாவுறுப்புக்களும் பரவசமாதல் (ஒடுங்குதல்)
7 லாலாஸ்ராவம் — வாயில் நுரை வருதல் (நீர்வடிதல்)
8 ப்ரலாபனம் — அதிகம் பேசுதல் (வாய் குழறுதல் நேரும்)
9 ஸ்ம்ருதிமோஹம் — மெய்மறத்தல்
10 மரணம் — சாவு

மேற்செய்யுளில் கூறப்பட்ட, எயிறும் கண்ணும் மேனியும் கருகித் தீதல் இரண்டாம் வேகத்தின் செயல் ஆகும், உரை குழறல் எட்டாம் வேகத்தின் செயல், மயங்கி வீழ்தல் ஒன்பதாம் வேகத்தின் செயலாகும்.

பாம்பின் விடத்தைப் போக்குதற்குரிய மருந்தும் மந்திரம் முதலியனவும் விஷவைத்ய நூலிற் கூறப்பட்டுள. கன்னட மொழியில் உள்ள 'ககேந்த்ரமணி தர்ப்பண'த்திலும் காணலாகும்.

2. சில சொல்வழக்கு

அ. எல்லா (எள்ளா)

பாண்டிய நாட்டில் சாதாரண மக்கள் ஒருவரை விளிக்கும்போது 'எள்ளா' என்னுஞ் சொல்லை வழங்குகின்றனர். ஆயின், எல்லாரையும் விளிக்கும்போது இச்சொல்லை வழங்குதல் இல்லை; மனைவியை விளிக்குமிடத்துப் பெரும்பாலும் இச்சொல் வழங்கப்படுகின்றது. அன்றி, நகையாடிப் பேசுதற்கு உரிமையுடைய பெண்களுள் தம்மினும் குறைவான வயசு உள்ளவர்களையும் எள்ளா என்று விளித்தல் உண்டு. இவரல்லாத பிற மகளிரை எள்ளா என்று அழைக்கின், அவர் கோபித்து நிந்திப்பர். எள்ளா என்பது பழைய செய்யுட்களில் 'எல்லா' என்று வழங்கப்பட்டுளது. இதனை நோக்கும்போது, மெல்ல என்னுஞ் சொல் மெள்ள என்று திரிந்து வழங்குதல் போன்று, எல்லா என்னுஞ் சொல் எள்ளா என்று வழக்கில் திரிந்துளது என்பது அறியப்படும்.

எல்லா என்னுஞ்சொல் ஆண், பெண் இருபாலார்க்கும் வழங்கும் என்று தொல்காப்பியத்தினால் தெரிகின்றது.

"எல்லா, தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றுமோ மற்று."

இங்கு 'எல்லா' என்பது ஆண்பாலுக்கு வந்துளது. இது தலைவி தலைவனை நோக்கிக் கூறுமிடத்து வந்தது.

"எல்லா இஃதோத்தன் என்பெருன் கேட்டைக்காண்."

இதில் 'எல்லா' என்பது பெண்பாலுக்கு வந்துளது. இது தோழி தலைமகளை நோக்கிக் கூறியவிடத்து வந்தது.

இவ்வாறு வந்துள்ள இடங்களை நோக்குமிடத்து, 'எல்லா' என்னுஞ் சொல் தலைவன் தலைவியர் ஒருவரை யொருவர் விளிக்குமிடத்தும், தோழியும் தலைவியும் உரையாடு மிடத்தும் வழங்குவதாகத் தெரிகின்றது. ஆசிரியர் தொல்காப்பியனுர் இச்சொல்லைக் 'கெழுதகைப் பொதுச்சொல்' (பொ. 216) என்று கூறியுள்ளார். அதாவது, 'உரிமையை யுடையதாய் இருபாற் கண்ணும் வருவது' என்பதாம்.

இனி, இச்சொல், 'இல' என்றும் வந்துளது

"எந்தையும், நிலனுறப் பொருஅன் சீறடி சிவப்ப
எவன்இல குறுமகள் இயங்குதி என்னும்"

என்பது காண்க. இங்கு, தந்தை மகளை நோக்கிக் கூறு மிடத்து வந்துளது.

பாண்டிய நாட்டில் ஆடவரை விளிக்குமிடத்து 'எலே', 'ஏலே' என்னும் சொற்கள் வழங்குகின்றன. ஆயின், இவை ஏறக்குறைய ஒத்த வயதுடைய நண்பர்கள் உரையாடுமிடத்தும், தாழ்ந்தவர்களை விளிக்குமிடத்தும் வழங்கப்படுகின்றன.

இனி, இச்சொல் நூல்வழக்கில் தோழன் தோழியரை விளிக்குமிடத்தும் வந்துளது.

"குறவன் மகளாணை கூறுஏலா கூறேல்"

என்பது காண்க.

கன்னட மொழியில் 'எலே' என்னுஞ் சொல் காவியங் களில் வழங்கப்பட்டுளது. ஆயின், தமிழிற் போன்று கெழுதகைச் சொல்லாய் வருதல் இல்லை.

"எலே கட பாந்த!"

என்னுமிடத்தில் எலே என்பது ஒருத்தி வழிப்போக்கனை விளித் தற்கண் வந்தது.

"எலே கட சோளபூபதி!"

என்பதில், ஒருத்தி அரசனை விளித்தற்கண் வந்தது.

ஆ. தாழ்வில்லை

(தாவிள்ளை, தாவுள்ளை)

நோயாளியைக் குறித்து வினவுபவருக்கு மறுமொழி கூறுபவர் தாவிள்ளை என்பர். இது தாழ்வில்லை என்னுஞ் சொல்லின் திரிபு. இதனைத் தாவுள்ளை என்றுஞ் சிலர் சொல்லுவர். இச்சொற்களில் இரட்டித்த லகரம் ளகரமா யொலிக்கின்றது.

நெட்டெழுத்திற்கு முன் நிற்கும் ழகரமெய்யின் ஒலி கெட்டு விடுதல் வழக்கின்கண் அறியலாகும்.

தாழ்வடம் — தாவடம்
வாழ்வரசி — வாவரசி (சுமங்கலி)

என்பன அறிக.

தாவிள்ளை என்பதன் உண்மை அறியாமல் அது தவறான தென்று கருதிச் சிலர் 'தேவலை', 'தேவலாம்' என்று சொல்லுகின்றனர். இது அந்த இடத்தில் பொருந்துவதன்றாதல் அறிக.

இ. "ஏ"

ஏறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டுகட்கு முன் ஒருநாள் எங்கள் அத்தையின் கணவனார் எனக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தார். நான் சுமார் பத்து அடித்தொலைவில் பின்னால் சென்றேன். அப்பொழுது ஏதோ ஒரு செய்தியை அவர்களிடம் சொல்லக் கருதி, 'ஏ, மாமா!' என்று வீளித்தேன். அவர்கள் மறுமொழி தரவில்லை. அதனால் 'ஏ, மாமா' என்று சிறிது உரக்கக் கூவினேன். அப்பொழுதும் அவர்கள் ஏனென்று கேட்கவில்லை. ஆகலின், அவர்களருகிற்சென்று, 'மாமா' நான் உங்களைப் பல தடவை அழைத்தும் நீங்கள் பேசாது போகின்றீர்களே! நான் என்ன குற்றம் செய்தேன்?

என்று வினவினேன். அதற்கு அவர்கள் ‘இவர் மரியாதையாய் அழைத்துவிட்டார். ஏனென்று கேட்கவேண்டியதுதான்’ என்று, கோபத்துடன் சொன்னார்கள். நான், ‘ஏ, மாமா’ என்றுதானே அழைத்தேன். இது தவரு? ‘என்று கேட்டேன், அதற்கு அவர்கள், ‘ஏ என்றுதான் அழைப்பதோ? அது மரியாதையோ?’ என்றார்கள். நான் ‘வேறு எப்படி அழைக்க வேண்டும்?’ என்று கேட்டேன். ‘ஓ மாமா என்று அழைக்க வேண்டும்; ஏ, மாமா என்று அழைப்பது மரியாதையன்று’ என்று சொன்னார்கள். அப்போழுதுதான் ‘ஏ’ என்று விளிப்பது தகாதது என்று அறிந்தேன், ஒருவர் ‘ஏ’ என்று பிறர்மகளை அழைத்தபோது அவள் மிக்க சினங்கொண்டு, ‘ஏ’ என்று யாரை அழைக்கின்றாய்?’ என்று சொல்லியதை அறிந்தேன். இவ்வழக்கு, பண்டுதொட்டே தமிழ்நாட்டில் இருந்ததென்று தெரிகின்றது. தொல்காப்பியர், ‘னகர, லகர ளகர’ ஈற்று உயர்திணைப் பெயர்களை விளிக்குமிடத்து ‘ஏ’காரம் வரும் என்று விதித்திலர். வேந்து, கோ என்னுஞ் சொற்கள் உயர் திணைப் பொருளை உடையனவாயினும் சொல்லால் அஃறிணை போன்றிருத்தலின் அவற்றிற்குமட்டும் ஏகாரம் வரும் என்று விதித்தார். இனி, மகன் மகள் என்னும் முறைப்பெயர் அஃறிணை யிலும் வழங்குமாதலின் அவற்றிற்கும் ஏகாரம் வரும் என்றார். இவற்றால் வேந்தனே, வேளே என்பன போன்று வருதல் தொல்காப்பியர்காலத்தில் இல்லை என்பது நன்கு அறியப்படும்.

பிற்காலத்தவர் இவ்வேறுபாடுகளை உளங்கொள்ளாமல் உயர்திணைப் பெயர்கள் எல்லாவற்றிற்கும் ஏகார விளியுருபு கொடுத்து வழங்கியதனால் நன்னூலார், உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், விரவுப் பெயர் எல்லாவற்றுக்கும் ஏகாரம் விளியுருபாக வரும் என்று விதித்தார். ஆயின் இவையெல்லாம் பெயரோடு சேர்ந்து வருதலேயன்றி, தனியே முதலில் வருதல் இல்லை. வழக்கில் தனியே சில பெயர்கட்கு முதலில் வருகின்றது.

நூல் வழக்கில் பெயருக்கு முதலில் (ஏ என்பதன் திரிபாகிய) யா என்பது வருகின்றது. அதனை இலக்கண நூலார் அசை என்று கூறி அமைத்துள்ளனர். அதனால் ஏ(யா) என்னுஞ் சொல் உயர்திணைக்கண் வருதல் அமைதியன்று என்பது உய்த்துணரப்படும்.

தனிப் பாடல்கள்

வித்துவான், திரு. இரா. கோவிந்தராசன்
தமிழாசிரியர், கீழைக்கலை உயர்பள்ளி, தருமபுரம்.

உலகம் முகிழ்த்த நாள் முதலாக பெருமையுடனே பேசப் படுவது இயற்கைச் செல்வம் அச்செல்வம் காட்டிய நன் னேறியில் பகுத்தறிவு படைத்த மக்களினம் தன் நாகரிக மேம்பாட்டு வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொண்டது; உலக வரலாற்றில் எந்த நாட்டின் ஏடுகளைப் புரட்டினுலும் மக்கள் இன வாழ்வில் சமயம் ஒன்றியிருந்த ஒரு செய்தியைக் காணமுடியும். பேரறிவு படைத்த ஞானிகள் ஆண்டவனின் திருவுருவைக்கண்டு ஏட்டிலே எழுத்தாணியால் எழில்பெறத் தீட்டி என்றுமழியாச் செல்வமாக்கிச் சென்றனர். தமிழகத்தில் சங்க காலம் முதல் அண்மைக்காலம் வரை இலக்கியங்கள் ஆண்டவன் புகழ்பாடும் செய்யுட்களால் அமைந்திருக்கின்றன.

இலக்கியம்: தென்னகத்தில் - வள்ளுவன் தோன்றி வாழ் நெறி காட்டிச்சென்ற இலக்கியச் செல்வமாம் திருக்குறள் திகழும் தமிழ் நாட்டில் கடவுளைப்பற்றிய பாடல்கள் ஏராளம். பாட்டுலகின்மூலம் மக்களின் உள்ளத்தில் கடவுள் நெறியைப் புகட்ட விரும்பிய செந்நாப்புலவர்கள் தங்கள் கவித்திறன் விளங்கச் சிறக்கப் பாடினுர்கள். கடவுளைப்பற்றிய பழமைச் செய்திகளைப் பாங்குற விளக்கும் புராணங்களும் ஊர் வரலாற் றுடன்கூடிய தல புராணங்களும், தனிக் காவியங்களும், அன்புடையார் காதலால் கசிந்து நெக்குநெக்குருகிப் பாடிய அகப்பாடல்களும் கடவுள் கொள்கையையும், தத்துவங்களையும் விளக்கும் தன்மையவாய் அமைந்தன. இத்தகைய ஏற்றமுடைய இலக்கியச்செல்வத்தினுல் ஒப்பிலா அம்மையப்பனுக்குப்பாமாலை சூட்டி மகிழ்ந்தார்கள். இன்னும் சில புலவர்கள் ஆண்டவனின் அடியிணை மலர்களில் சில மலர்களிட்டு அருச்சனை செய்தார்கள். அவை தனிப்பாடலால் அமைந்த கலம்பகமாலை. தமிழகத்தின் தனிப்பெருங் கோயில்களில் ஒன்று புள்ளிருக்குவேளூர்க் கோயில். அக் கோயில்பற்றிய தனிப்பாடற் செய்திகள் தமிழ்

கூறும் நல்லுலக மக்களுக்குப் புகட்டும் அருள்மணநுகர்வை அறிதல் நன்மை பயக்கும்.

வேளூர்: வேளூர்த் திருக்கோயில், கி. பி. 12-ம் நூற்றுண்டில் சோழவள நாடாண்ட மன்னன் விக்கிரமசோழன் காலத்ததென சில ஆய்வாளர் கூறுவர். புள்ளும் (சடாயு) இருக்குவேதமும், புவியோர்க்கு அருளும் குமரவேளும் வழிபட்டுச் சிறப்பெய்திய இடம் இத் திருத்தலம்.

"போற்றிய காதல்பெருக புள்ளிருக்குந் திருவேளூர்
நாற்றடங்தோள் உடைமூன்று நயனப்பிரான் கோயில்"

என்று இத்திருக்கோயிலைப் பாடுகிருர் சேக்கிழார் பெருமான். வேளூர் வைத்தியநாதப் பெருமான் சந்நிதியின்முன் ஒளிவீசித் திகழும் சரவிளக்குகள்போல் கவிச்சுவை கனிந்த தனிப் பாடல்கள் விளங்குகின்றன. ஆண்டவன் சிறப்பை - மெய்ப் புகழை - விளக்குகின்றன.

ஊரும் கோயிலும்: மனிதர்கள் தம் வாழ்வுப் பாதையில் நல்வினை தீவினை என்ற இரண்டைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டி யிருக்கிறது. மனிதனுக்கு அமைந்த ஊழ் (விதி) இதையோட்டியே அமைகிறது. "தினை விதைத்தவன் தினை யறுப்பான், வினை விதித்தவன் வினையறுப்பான்" என்பது பண்டையோர் கூறிய செம்மொழி. "எழுதிச்செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும்" என்கிருன் உமர் கயாம் என்னும் பாரசீகப் புலவன். "ஊழிற் பெருவலி யாவுள" என்கிருர் வள்ளுவப் பெருந்தகை. அத்தகைய ஊழ் நல்லதானுல் நன்மையே. அல்லதானுல் தீமையே. "அருளினுல் உரைத்த நூல்கள் கூறிய நல் வழியிலேதான் உலக மாந்தர் வாழ்வு செல்லவேண்டும். அப்படிச் செல்லா மாக்களை இறைவன் இருளுலா நிரயத்திலே இட்டுத் துன்பஞ்செய்து அவர்கள் பாவத்தை நீக்குகிருன்; நல்வினை உடையோரை, "பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தால்" புண்ணியந் தீர்க்கின்ருன் - என்ற கருத்தைச் சிவஞானசித்தியார் செப்புகிறது. நரகத்தை ஆரிருள் என்ருர் வள்ளுவரும்.

அத்தகைய தீவினை - தள்ளற்கரிய வினை வருத்த சம்பாதி சடாயு என்போர் வேளூர்ப் பெருமானின் திருவடிகளைப் பூசனை

செய்தார்கள். தீவினை தீய்ந்தது. உலக மக்களும் அவ்விறைவனைப் பூசனைசெய்து உள்ளம் என்னும் கனியின்மேல்கொண்டார்களானால் அவர்களை வந்தடையும் வெள்ளத்தனைய நோய் யாவும் நொந்து விலகும்; அத்தகைய மருத்துவன் வாழ்கின்ற ஊர் வேளூர் என்று பாடுகிறது சிதம்பர புராணம். இது ஊர்ச்சிறப்பு.

அக்கோயிலின் அமைப்பை இன்னொரு தனிப்பாடல் இனிதே இயம்புகிறது. ஆலயத்தின் கீழ்த்திசையில் வைரவக் கடவுளும், மேற்றிசையில் வீரபத்திரரும், தென்புறத்தில் கற்பக விநாயகரும். வடதிசையில் காளியும் காவல்புரிகின்றனர்.

'' தெற்கிற் கணேசன் திகழ்மேற்கிற் பைரவனும்
தொக்க வடக்கில் தொடர்காளி — மிக்ககிழக்
குள்ளிருக்கும் வீரனையும் முற்றுப் பணிந்துய்ந்தோம்
புள்ளிருக்கு வேளூரிற் போய் ''

ஆசிரியர் தெரியா இத் தனிப்பாடல் அக்கோயிலின் அமைப்பை அறிவிக்கிறது.

புவியோர் மருந்துவன் : இத்தலத்து ஆண்டவன் பிணி தீர்க்கவல்ல மருத்துவன். இவனடி வணங்குவார், பிறவிப்பிணி நீங்கப்பெறுவார்; எமன் பற்றிய துன்பத்திலிருந்து விலகுவார்கள். அம்மையின் திருக்கரத்துத் தைல பாத்திரமும், சித்தாமிர்தத் தீர்த்தமும், வில்வத்தடி மண்ணும் நோய் நீக்கும் மாமருந்துகள், ஓர் புலவர் இறைவனை நோக்கி வேடிக்கையாக '' வேளூர் வயித்தியரே; இந்த உலகத்தில் உள்ளவர்கள் நோயெல்லாம் சித்தார்மிதத் தீர்த்தக் கரையிலேயே தீர்ந்துவிடுகிறதே; அப்படியிருக்க நீர் ஏன் மருந்தை மண்ணுக்கவேண்டும் '' என்று வினவுகிறார்.

'' இத்தாரணியில் எவருடைய நோய் பிணியுஞ்
சித்தாமிர்தக் கரையில் தீருமே—சத்திதையல்
மாதுக்கியைந்த வயித்தியரே நீர்மருந்தை
ஏதுக்கு மண்ணுக்கினீர். ''

மண்டலத்தில் ஒவ்வொருநாளும் வயித்தியராய் இருக்கிறார் சிவபெருமான். அவர் உலக மக்களுக்குக் கண்ட வினையெல்லாம் தீர்க்கிறாராம். அவரோ தொண்டர்க்கு இடுகின்ற விருந்தைப்

பார்த்து உண்ணும் வேளூரர். அவர் மருந்தைப் பார்த் தாலோ சுத்த மண். என்ன வியப்பு என்று பாடுகிருர் காளமேகப்புலவர். வில்வத்தடிமண் நோய்தீர் மருந்தான புராணத்தை ஒட்டி எழுந்த இக்கவிதைகள் உண்மையில் நகைச் சுவையுடன் நல்லறிவுச்சுவையும் தருவதில் வல்லவையா யுள்ளன.

அம்மானைப் பாடல் : மூன்று பெண்கள் சேர்ந்து ஆடுவது அம்மானை. ஆடும்போது ஆண்டவன் சிறப்பையோ, அரசன் புகழையோ சொல்லிப் பாடுவது மரபு. ஒரு பெண், புகழைச் சொன்னுல் மற்ற இருவரும் அதைத் தொடர்ந்தும் மறுத்தும் கூறுவார்கள். வேளூர்ப் பெருமானைப்பற்றிய அம்மானைப் பாடல் ஒன்றுண்டு. அதன் செய்தியைக் காண் போம். ஒரு பெண் சொல்லுகிருள்; விரிந்த புகழ் உடையவர் வேளூரிலிருக்கும் வைத்தியநாதர். அவர் அன்போடு துன்ப வினைகளைத் தீர்ப்பதில் வல்லமை உடையவர் என்ருள்; அதற்கு மற்ருெருத்தி; அவர் வினை தீர்க்கவல்லவர் என்று சொன்னுயே, அப்படியானுல் மருந்துவிலை, கைக்கூலி வாங்கமாட்டாரா? என்ருள். இன்ஞெருத்தி அவர் வாங்காமல் வருவார் வாயிலே மண்போட்டு (மண் - இங்கே மருந்து) வாங்கிவருவாரே என்ருள்.

“ விரிந்த புகழ்ப் புள்ளிருக்கு வேளூர் வயித்தியஞர்
பரிந்துவினை தீர்க்கவல்ல பண்டிதர்காணம்மானை
பரிந்துவினை தீர்க்கவல்ல புண்டிதரே யானக்கால்
மருந்து விலை கைக்கூலி வாங்காரோ வம்மானை
வாயிலே மண்போட்டு வாங்குவர் காண் அம்மானை ”

காளமேகப் புலவர் நகைச்சுவை : ‘ஆசுகவி காள மேகம்’ என இரட்டையரால் புகழப்பெற்றவரிவர் வசைபாடக் காளமேகம் என வையத்தார் கூறுவர். இவர் பாடிய தனிப் பாடல்களில் சற்றேறக்குறைய 25 பாடல்கள் வேளூரைப் பற்றியுள்ளன. புராணச் செய்திகளையும், திருவிளையாடல்களையும் இணைத்து அழகுபட நகைச்சுவையாகப் பாடியுள்ளார்.

‘வேளூரர் மருத்துவராம்; இவருக்கோ வாதக்கால், இவர் மைத்துனர்க்கோ நீரிழிவு (மைத்துனர் - திருமால் - பாற்கடலில் பள்ளிகொண்டவர்). இவர் பிள்ளையோ பெரு வயிறன் (பிள்ளையார்). தனக்கு வந்த வினைகளையே ...க்க

வகையறியாதவராயிற்றே இவர். இவர் எப்படி எந்த வினையைத் தீர்த்தார் என்று கேட்கிருர் காளமேகப் புலவர் ''. அடியார்கள் உய்ய மருந்தளிக்கும் நீர் உமது மையலுக்கு மருந்தறிய வில்லையே, ஊருக்கு வைத்தியன், தனக்கு விரோதி என்ற பழமொழிக்கு இலக்கானீர் என்று படிக்காசர் கூறுவது காள மேகப் புலவர் பாடலோடு ஒப்பிட்டு மகிழத்தக்கது. காளமேகப் புலவருக்கு ஒரு ஐயம் பிறக்கிறது. சிவபெருமான் ஏன் நஞ்சை உண்ணவேண்டும்; உமையம்மை தவம் புரிந்தது ஏன்? திருமால் ஏன் திருமேனி கருத்து மண்ணைத் தின்ருர்? பிரமன் நான்முகனுனது எதற்காக? தேவர்கள் ஏன் இப்படி இமைக்காமல் விழித்தபடியே நின்றுவிட்டார்கள்? என்று வேடிக்கையான ஒரு சந்தேகம் உண்டாயிற்று. சிந்தித்தார்; உடனே அவருக்கு முருகன் குறக்குலப் பெண்ணை - வள்ளியைக் களவு வழியில் மணந்துகொண்டது நினைவிற்கு வந்தது. காரணம் புலப்பட்டதெனக் கவிபாடினுர். குறக்குலப்பெண்ணை மணந்ததாலல்லவா இவர்கள் இவ்வாறு ஆனுர்கள் என்று பாடினுர், வயித்தியர் மகனுன குமரனைப்பற்றி.

'' மருகிருக்கும் வேளூரின் வைத்தியர் மகன் குறமகளை
மணந்தா னென்றே
உருகியரன் நஞ்சுண்டான் உமையவளும் தவம் புரிந்தாள்
உயர் மால்மேனி
கருகிமிக மண்டின்ருன் கமலன்முக நாலானுன்
கடவுளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவு பகல் உறங்காமல்
இருக்கின்ருரே ''

—காளமேகப் புலவர் தனிப்பாடல்

வேளூரனே! உன் கண்ணிலே தீ, கையிலே அனல், உன்னுடைய சிரிப்பிலே நெருப்பு, மெய்யெல்லாம் - அழல். அப்படியிருக்க இந்த உமையம்மை உன்னை எப்படிச் சேர்ந் தாள். வியப்பினும் வியப்பே. என்று சிவபெருமானின் தோற்றத்தைச் சுவைக்கச் சுவைக்கச் சொல்லுகிருர் அந்தக் கவிஞர்.

மஞ்சரியும் கலம்பகமும்: சிவத்தலமஞ்சரி, துறைசைக் கலம்பகம் என்ற இரண்டு நூல்களிலும் வேளூரைப் பற்றிய குறிப்புகள் சிலவந்துள்ளன. முருகன் முதலானவர்கள் பூசித்து

சிறப்படையும்படி அருள் புரிந்தவனே! சொல்லுவதற்கரிய வனே! வேளூரில் வாழும் பெருமணிச்சுடரே! உமை என்னும் தையலை மணந்த பித்தனே! வயித்தியநாதன் என்னும் பெய ருடையவனே! செல்வமே! கருணைக் கடலே! உனது திருவடி களின் நிழலை எனக்கு அருள்வாய் என்றுவேண்டுகிறார் மஞ்சரி ஆசிரியர். துறைசை நமச்சிவாயருக்கு அருள் செய்தவன் வேளூர் இறைவன். அவனை வழிபட இடரேதும் இல்லை. விடராயினும், தவமுடையராயினும் அவனை வழிபட்டால் வினைகளெல்லாம் அழிந்துவிடும் என்கிறது துறைசைக்கலம் பகம். இவ்விரண்டன் மூலம் ஆண்டவனிடம் அன்பர், அவனைப் பலவாறழைத்து திருவடிநிழல் கேட்ட திறத்தையும், வினையை அழிக்கவல்லவன் அவன் என்ற உண்மையையும் அறிகிறோம்.

பட்டினத்தார் :

" மன்னுவுலகத்து மன்னுதல் வேண்டித்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே "

என்பது புறப்பாடல். நம்முன்னோர் அழியும் நிலவுலக வாழ்வை எண்ணி, அழியாப் புகழைப் படைக்க எண்ணினார்கள். அதற்குப்பல நெறிகள் உண்டு. வீரம், கொடை, புலமை முதலானவை; அவைகளில் சில. சிவபூசனை நெறியும் ஒன் றெனக் கண்டனர் சில ஞானிகள். அழியா முத்தி ஆனந்தமான ஆண்டவன் இணையடி நிழல் அடைய ஓர் ஒற்றையடிப்பாதை அந்த ஞானப்பாதை. அவ்வழிச் செல்வோர் கண்ணும் மனமும் கருத்தொருமித்து ஆண்டவன் சிந்தனையையே சிந்தையில் நிறுத்தவேண்டும். கைகள் அவனையே தொழ, கண்கள் அவனையே நோக்க, கருத்தில் அவனையே இருத்தி, உடம்பும் அவன் வழியே ஒருப்பட, செவியும் அவன் புகழே கேட்க வேண்டும். இவ்வாறன்றிச் செய்யும் பூசையை வினைதீர்த்த கருணைவாரிதியாம் கடவுள் ஏறபதில்லை என்று பாடுகிறார் பட்டினத்தார். அப்பாடல் வருமாறு :-

" கையொன்று செய்ய, விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூசை யெவ்வாறு கொள்வாய் வினைதீர்த்தவனே. "

அருணகிரியார் : அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடலில் வேளூர் இறைவனைப் பற்றிய குறிப்புகள் சில உண்டு. இவர் இக்கோயிலைப் பற்றிப் பாடிய பாடல்கள் பதினான்கு

"வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய் சாருபரோடு ஏற்றிருந்தவன்"

என்றும்,

"வைத்திய நாதப் பெருமானே"

என்றும், 'பாடகச் சிலம்போடு' என்னும் பாடலில்,

"தையல் நாயகிக்கு நாதர்"

என்றும் பாடுகிறார்.

சிதம்பர முனிவர் : இப்புலவர் பெருமகனார் பாடிய நூல் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ். அந்நூலில் முத்தப் பருவத்தில் வரும் ஓர் பாடல் வேளூர் கந்தப்பெருமானைப் பற்றி வரலாற்றோடு இணைத்துக் கூறுகிறது. குமரவேள்; அயன், பிரமன், தேவர்கள் வணங்கும் குருவான பிரகஸ்பதி பகவான், சதமகனான இந்திரன், போதியமலை வாழ்முனிவன் அகத்தியன், நக்கீரர், அவ்வையார், பொய்யாமொழிப் புலவர், பகழிக்கூத்தர், குமரகுருபரர் முதலான புலவர்களுக்கும் பிறருக்கும் பாடுதற்கு அடியெடுத்துக் கொடுத்தார் என்ற வேறு வேறு வரலாற்றுச் செய்திகளை ஒன்றுக்கிப் பாடலோவியம் தீட்டுகிறார்.

இவ்வாறாகப் புலவர்கள் பலநூல்களில் புள்ளிருக்கு வேளூரைப்பற்றிய சிறப்பினைக் கூறுகின்றனர். தனிப்பாடல் களாகவும் பாடியுள்ளனர். இவை படிக்கப் படிக்கத் தேன் சுவை தருவன, எண்ணத்தில் இருத்தத் தக்கன. ஆண்டவனின் போய்ப் புகழை அழகுற விளக்கும் தன்மையன. சந்நிதியின் முன்னே ஒளிரும் சரவிளக்குள் பலவானாலும் ஒரே ஒளி மயமாக விளங்குவதுபோல தனிப்பாடல்கள் பலவானாலும் அவை ஆண்டவனின் அடியிணைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகளே. கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியாக விளங்கும் இறைவனின் மெய்யுணர்வை மக்கள் உள்ளத்து வளர்க்கும் தன்மை வாய்ந்தது பாடற்கலை. அக்கலை நெறி காட்டும் தூய வாழ்வை உலகம் பின்பற்றும் என்பது வெள்ளிடை மலை.

வினைதீர்க்கும் அருமருந்து

திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள்
தேவார பாடசாலை ஆசிரியர், தருமபுரம்.

உடற்பிணியோடு உயிர்களைப்பற்றி வருத்துகின்ற பிறவிப் பிணியைத் தீர்க்கும் பெருமருந்து. உம்பரோடு உலகுக்கெல்லாம் அமுதச் சுவையாகித் திகழும் அருமருந்து. வலங்கொள்வார் தங்கள் வல்வினை தீர்க்கும் ஒருமருந்து இங்குத் திகழ் வைத்திய நாதனும் பெருமருந்து. இம் மருந்தாய 'சிவபரம்பொருளைப் பணிந்து வழிபடும் பயன் யாதெனக் கண்டனர் மூவர் முதலியர். அவ்வகையில்,

"ஒன்று தானறி யாருலகத் தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே"

என்று நாவுக்கரசு சுவாமிகள் அருளியபடி, கொன்றை மலர் திகழும் சடாமுடியனுய்த் திகழ்வோன் இங்குறை இறைவன், பண்பொருந்தும் கீத இசைபாடி அவனது பாதம் போற்றி அடியார்கள் குடியாகி வாழ்கின்றனர். அவர்கட்கெல்லாம் வினை நீக்கம்பெறச் சிவதன்மம் உரைத்தருளி இம் மண்ணுலகோடு விண்ணுலகினையும் ஆட்சிபெற அளிப்போனுய்த் தையலம்மை யொருபாகங் கொண்ட அருட் திருக்கோலத்தனுகி வீற்றிருந் தருள்கிருன்.

செல்வமுத்துக்குமாரப் பெருமானும் அவ்வகையே வழிபடு வோர்க்கு மெய்கண்ட தெய்வம் தானே யென விளங்கிப் பொன் னுலகு மண்ணுலகு எவ்வுலகும் அருளும் கருணமூர்த்தியாய்த் திகழ்கிருர். அது மட்டுமா? செடியாய உடல் இதனின் நீங்கி நாம் ஞானத்தொளி வண்ணமேனியைப் பெறுதற்குரிய அரிய தொரு மருந்தாகியும் திகழ்கின்ருன் நம் வைத்தியநாதன் என்பதனைச் 'செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந் தாவான்' என்றருளி "கொன்றையம் முடியினுய்க் கூ[illegible]லால

வாயிலாய் நின்னை நினைப்பதே நியமம்'' எனப் பின்னும் அருளிய சமயாசாரிய மூர்த்திகளுள் ஒருவரான ஞானசம்பந்தப் பெருமான் போற்றிய காதல் பெருகக் காட்சி நல்கும் கொன்றை மலர் திகழும் சடாமுடியுடைப்பெருமான் அவனை இங்குற்று இவ் வகையிற் கண்டனர். அவனது கருணை, வழிபட்டுப்போற்றிய சம்பாதி, சடாயு என்னும் புள்ளரசர்களின் ஆற்றல், உயிர்க் கிறுதியுற்றிடினும் பொய்மை பேசாத வாய்மை, இராவணனைப் புறங்கண்டபோற்பு, யோசனைதூரம் போய் மலர் கொணர்ந்து மந்திரம் கொண்டு ஆற்றிய ஞானவழிபாட்டுச் சிறப்பு, பெரும் பக்தி, மேலாய நற்றவம் ஒன்றிய மனத்தின் ஒருமை, ஆய உவத்தலாதி செயல்களிற் சிறந்தார் பிறவியிற் சிறந்தாராகிப் பயனுற்ருர் என்பது உணர்த்தி, அக் '' கள்ளார்ந்த பூங்கொன் றைச் சடைமுடியன் உறையுமிடம் புள்ளிருக்கு வேளூரே '' என்று சம்பாதி, சடாயு, இருக்கு-வேதம், வேள்-குமாரக்கடவுள் ஊர் - சூரியன் ஆகியோர் வழிபட்டமையும் காட்டி

'' கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானு ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளனூர்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே ''

என்று தொடங்கும் இப்பதிகத்தினை அருளினுர்கள்.

தவிர அப்பரடிகளும் நம்மை ஆண்டருளும் சிவன், உள்ளத்திருள் நீக்கிச் சிவலோக நெறியறியச் சிந்தை தந் தருள்வோன், ஐம்பெரும் பூதங்களாகித் திகழ்வோன். வாராத செல்வம் வருவிப்போன். பாமாலைபாட என்னைப் பயில்வித் தோன். அவனைப் போற்ருது காலம் கழித்தமை அறியாமை யன்ருே ! மேலும்,

'' புள்ளிருக்கு வேளூரான் பொற்கழல்
உள்ளிருக்கும் உணர்ச்சி யில்லாதவர்
நள்ளிருப்பர் நரகக்குழியிலே ''

என்றும் அருளி அவன் கழலடிகளை உள்ளத்துட் கொள்ளாதார் நரகக்குழியினைப் பெறுவர். ஆதலின் உலக வாழ்வில் மனைவீ மக்கள் எனும் பாசத்தினுற் கட்டுண்டு, இறுதியில் இயமன்

உயிர்கவரும் காலம் என் செய்வீர். யாதொருமாற்றமும் கூறு மாறு அறியீர், நீர் உம்மவர் என்று சொல்லி மகிழ்ந்திடும் சுற்றங்கள் எல்லாம் உயிர் பிரிந்தார் என்று கூறும் முன்னம் பிறவிப் பெரும்பிணிக்கோர் மருந்தாம் வேளூர் மங்கை பாகனே வாழ்த்துமின். உடற்பிணியோடு உயிர்ப்பிணியாகிய பிறவிப் பிணியும் நீங்கும். இன்றும் இங்கு உறைந்திருந்தருளும் வைத்தியநாத மருந்தினைக் கண்ட அன்பர்கள் தீராத நோயெலாம் நீங்கப்பெற்று அகமிக மகிழ்கின்றனர். இன்பம் அதுவாம். சிந்தை கூர்தலே சிறந்த பயனும்.

<u>மதிப்புரை:</u>

மணிவாசகர் விழா மலர்

யாழ்ப்பாணம் காரைநகர் மணிவாசகர் சபை வெளியீடு— பக்கங்கள் 76; விலை குறிப்பிடப்பெறவில்லை.

யாழ்ப்பாணம் தமிழ் இலக்கியத்துக்கும், சமயத்துக்கும் செய்து வரும் சேவைகள் எண்ணில. அவற்றுள் தலைசிறந்த ஒன்ருய் இவ் வெளியீடு விளங்குகின்றது. சென்னை மாநிலக் கல்வித்துறை அமைச்சர், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும, கோவை. திரு. சிவக்கவிமணி அவர்களும் கட்டுரை வழங்கியுள்ள தமிழகத்துச் சான்ருேர். ராஜாஜி அவர்களின் வாழ்த்துரை நூலுக்கு அணி செய்கிறது. மற்றும், திருவாசகத்தின் உட்பொருள் பலவற்றைப் பல ஈழச்சான்ருேர் விளக்கி யெழுதியுள்ளனர். சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் பிள்ளை, மகாவித்துவான். சி. கணேசஐயர் — இருவரின் எழுத்து — ஒளியும் வீசுகிறது. திருவெம்பாவைக்கு ஓர் விளக்க வுரையும், ஆளுடையடிகள் யாக்கையமைப்புப்பற்றிப் புதுவதுநுவலும் ஓர் கட்டுரையும், உள்ளன. ஈழப் புலவர்களின் திருவாசகத் தோய்வை, சாத்திர தோத்திர ஈடுபாட்டை, இனிய, எளிய, அழகிய, தெய்வமணங்கெழுமிய இவ் வெளியீட்டு மலர் காட்டுகிறது. இதனை வெளியிட்ட யாழ்ப்பாணம் மணிவாசகர் அவையினைப் பாராட்டுகின்ருேம். தமிழுலகும் சமயவுலகும் இதனைப் பெற்றுப் பயன் எய்துமாக. வேண்டுவோர் மணிவாசகர் அவையி னர்க்கு எழுதிப் பெறுக.

— சோ. சிங்காரவேலனுர்.

திருவிழாச் சிறப்பு

ஆகமவித்துவான், திரு. S. சுவாமிநாத சிவாசாரியர்,
தலைமை ஆசிரியர், வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்,

உத்ஸவம் என்பது நைமித்திக பூஜையாகும். இது திரேத்ஸவம், வாரோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாசோத்ஸவம், சம்வத்ஸரோத்ஸவம் என்று பலவிதமாக ஆகமங்களில் காணப்படுகிறது. அத்தகைய திருவிழாக்களின் பயனும் பலவிதமாகக் கூறப்படுகிறது.

இவ்வுத்ஸவங்களில் விநாயக உத்ஸவம், சிவ உத்ஸவம், சத்தி உத்ஸவம், பக்த உத்ஸவம் என்னும் பல பிரிவுகளும் உண்டு.

ஆண்டுதோறும் திருவிழாவின் பொருட்டுக் கொள்ளப் படும் மாதங்கள் : பொதுவாக ஸ்தூல மாதம், சூக்ஷ்ம மாதம் என இருவகைப்படும். சித்திரை முதல் பங்குனி முடிய சூக்ஷ்ம மாதம் என்றும் மார்கழி முதல் கார்த்திகை முடியவுள்ள மாதங்கள் ஸ்தூல மாதம் என்றும் பேயர். அதிலும் சில பக்ஷம் தைம்மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலுள்ள மாதமே ஸ்தூலம் என்று கூறுகிறது. ஸ்தூல மாதத்தின் கணக்கில் செய்வது விசேஷம் என்று அம்சுமான் ஆகமம் கூறுகிறது.

ஸ்தூல மாதத்தின் முறையால் இந்த வேளூரில் உத்ஸவம் ஆரம்பிக்கப்படுகிறது. அதாவது முதல் முதலில் ஸ்ரீ கற்பக விநாயகருக்கு உத்ஸவம் தோடங்கப்படுகிறது.

வார உத்ஸவம் : தை மாதம் கடைசிச் செவ்வாய்க் கிழமை ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்குத் தீர்த்த உத்ஸவம். இதற்குப் பதினேட்டுநாள் முன்பு ஸ்ரீ கற்பகவிநாயகர் உத்ஸவ ஆரம்பம். கற்பகவிநாயகரின் உத்ஸவ ஆரம்பமுதல் எட்டாவது நாளில் விநாயகர் தீர்த்தம் நடந்து ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்கு வார உத்ஸவ ஆரம்பம். அதாவது மங்களவாரத்தைப்

பிரதானமாகக்கொண்ட உத்ஸவம் மிகச்சிறந்தது; இவ்வுத்ஸவம் விநாயகருக்கும், முருகனுக்கும் தொடர்ந்துசெய்யப்படும் விசேஷ முடையது.

நக்ஷத்திர உத்ஸவம்: பங்குனி மாதத்திய உத்திர நக்ஷத்திரத்தில் தீர்த்தம். இதற்கு முந்திய 27 நாள் முன்வரும் ஹஸ்த நக்ஷத்திரம் சந்திரசேகர உத்ஸவமும், அதன் 18 நாளில் மகோத்ஸவமும் ஆரம்பித்து இடைவிடாது 27 வது நாளில் உத்ஸவத்தைப் பூர்த்திசெய்வது. இந்த உத்ஸவம் தெய்விக உத்ஸவம், கௌமார உத்ஸவம் என்ற இரண்டு உத்ஸவங்களின் சேர்க்கையால் சகல உலகத்தையும் உலக மக்களையும் செழிப்புள்ளதாகச் செய்கிறது. இது நக்ஷத்திர உத்ஸவம்.

மாத உத்ஸவம்: சித்திரை மாதப்பிறப்பு முதல் ஆனி மாதம் முடிய மூன்று மாதங்களில் சீதள கும்பாபிஷேகம் என்பது நடைபெறுகிறது. அதாவது தீர்த்தம் நிறைந்த பொற்குடம் அல்லது அதற்குச் சமமான குடத்தில் மந்திரபூதமான தீர்த்தம் வைத்துப் பூஜை முதலிய ஸம்ஸ்காரம் செய்து அந்தக் குடத்தின் அடியில் ஒரு சிறிய துவாரமிட்டு ஸ்ரீ வைத்தியநாத இலிங்கத்தின் சிரசில் தாரையாக நீர்விழும்படி செய்வது. இது அவிச்சின்னமாய் மூன்று மாதங்கள் நடைபெறும். இதன் பயன் உலகத்தில் அநாவிருஷ்டி நீங்கும். துர்பிக்ஷமகலும். வைசூரி உண்டாகாது, ஜ்வர அபஸ்மார பீடைகள் நாசமடையும். ஸர்வ ரோகமும் நீங்கும் என்று சுப்ரபேதாகமம் கூறுகிறது. இவ்வபிஷேகம் இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது.

மண்டலாபிஷேகக் கிருத்திகை: மண்டல உத்ஸவம் இவ்வூரில் மிகச்சிறப்பு வாய்ந்தது. அதாவது வைகாசி மாதத்தில் வரும் கிருத்திகையில் பூர்த்தி தினம். இதற்கு முந்திய 45 வது நாள் முதல் தினம். தினம் மஹந்யாஸபூர்வமாய் ருத்ராபிஷேகம் ஆரம்பித்துச் செய்துகொண்டுவந்து மண்டலாபிஷேக கிருத்திகையன்று பூர்த்தி செய்வது. இந்தக் கிருத்திகைக்கு மண்டலாபிஷேகக் கிருத்திகை என்று பெயர்.

கிருத்திகை: இந்த ஊரில் கிருத்திகைக்குத் தனிச்சிறப்பு உண்டு. எல்லா ஊர்களிலும் பெரும்பாலும் கிருத்திகை உபவாசம் இருக்கும் நாள் வேறு. இவ்வூரின் முறை வேறு. மற்றைய

ஊரில் கிருத்திகை விருதம் துவக்கம் என்ற முறை, இங்கு முடித்தல் என்ற முறை. அதாவது கிருத்திகை விருதம் முடித்துச் சந்தனக்குழம்பு பெற்று பாரணை செய்யும் முறை விசேஷமாகும். இங்குக் கிருத்திகை காலை 12 நாழிகைக்குமேல் 18 நாழிகைக்குள் இருக்கும் கிருத்திகையே கொள்ளப்படுகிறது.

பவித்ரோத்ஸவம்: சம்வத்ஸர பூஜாலோப தோஷ சாந்தியின் பொருட்டுச் செய்யப்படும் பவித்ரோத்ஸவமும் ஆடி மாதம் பூர்வபக்ஷ சப்தமியில் ஆரம்பம் செய்து எட்டாவது நாள் சதுர்த்தசியில் முடிவு செய்யப்படும் சிறப்பையுடையது. இதனுல் ஆலயத்தில் பூஜைகளில் ஏற்படும் ந்யூனுதிரிக்தப் பிராயச் சித்தமாகச் செய்யவேண்டிய அவச்யமான இந்த சிவோத்ஸவம் சிறப்பாய் நடைபெறுகிறது.

ஆடிப்பூரம்: சக்தியின்பொருட்டு ஆடிமாதம் பூர நக்ஷத்திரத்தை முடிவாக வைத்து இதற்கு முந்திய 10-வது நாள் ஆரம்பித்துச் செய்யப்படுகிறது. இவ்வுத்ஸவம் ஸ்ரீ தையல் நாயகிக்குத் தனிச்சிறப்புடையது.

விநாயகசதுர்த்தி: புரட்டாசி மாதம் அமாவாசையன்று விநாயகசதுர்த்தி உத்ஸவம் ஆரம்பித்து ஆருவது நாளான சுக்ல சதுர்த்தியில் முடிவு. இதற்கு அர்த்தோத்ஸவம் என்று பெயர். பௌதிக உத்ஸவம் என்றும் பெயர். மகாபூதங்களான ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற இவைகளால் உலகிற்கு நன்மைபயக்கச் செய்யப்படும் திருவிழா.

சக்திஉத்ஸவம்: கேதாரகௌரி விருதம் ஆவணி மாதத்து சுக்லபக்ஷ நவமியில் ஆரம்பித்து 21-வது நாளான கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் பூர்த்திசெய்வது. நவராத்ரி உத்ஸவமும், சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி மாதம் 19, 20, 21-ம் தேதிகளில் சூரியன் ஸ்ரீவைத்தியநாதரைப் பூஜிக்கும் காக்ஷி சிறந்தது. ஐப்பசி மாதத்திய பூர நக்ஷத்திரத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார ஸ்வாமிக்கு அபிஷேகம் சிறப்பாக இருக்கும்.

கந்தசஷ்டி உத்ஸவம்: ஐப்பசி மாதத்திய சுக்லப்ரதமை முதல் கந்தஷஷ்டி உத்ஸவம் ஆரம்பம் செய்து ஆருவதுநாளான

ஷஷ்டியில் சூரசங்காரமும் ஏழாவது நாளில் தீர்த்தமும் எட்டாவதுநாளில் தேய்வயானை கல்யாணமும், ஒன்பதாவது நாளில் வள்ளி கல்யாணமும் பத்தாவது நாளில் திருவீதி பவனியும் நடைபெறுவது கண்கோள்ளாக்காக்ஷி.

தீபோத்ஸவம் டோலோத்ஸவம் முதலியவைகளும், மாத பூஜைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மற்றும் மாதந்தோறும் நாயன்மார்களுக்கு அபிஷேகம் செய்தல் முதலிய பக்தோத்ஸவமும் பருவாபிஷேகம் முதலியவைகளும் குறைவர நடைபெறுகிறது. இத்துணைச் சிறப்புவாய்ந்த உத்ஸவாதிகளால் தேய்வீகசக்தி நிறைந்திருப்பதால் சேவார்த்திகள் யாவரும் அவரவர்கள் இஷ்ட பலசித்திகளை அடைகிருர்கள் என்பது உள்ளங்கை நேல்லிகனி போன்றது.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Sri Amirthakateswaraswamy Devasthanam
Tirucadaiyur (Mayuram Tk.)

நான் இன்றையதினம் இந்த சிவாலயத்தை தேரிசனம் சேய்யும் பாக்கியம் கிடைத்தது. என்னுடைய ஜன்மநக்ஷத்திரத்தை உத்தேசித்து ஒரு சின்ன அபிஷேகமும் சகஸ்ரநாமார்ச்சனையும் சேய்யப் பேற்றது. கோயில் நிர்வாகஸ்தர்கள் மிக விமரிசையாக எனக்கு சுவாமி தரிசனம் செய்துவைத்தார்கள். கோயிலில் எந்தப் பகுதியிலும் ஒரு தூசி காண்பது அரிதாயிருக்கிறது. என்னைத்தவறி எனக்கு சந்நிதியில் உணர்ச்சி ஏற்பட்டது. எல்லாம் திறம்பட நடத்திவரும் மகாசந்நிதானத்திற்கு அடியேனுடைய சாஷ்டாங்க நமஸ்காரம். நான் பல ஆலய நிர்வாகங்கள் செய்துவந்தேன். ஸ்ரீ அபிராமியம்மன் திருவருள் அம்மையைத் தேரிசிக்கும்போது உள்ள உணர்ச்சியும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் தேய்வீகத் தன்மையும், இறைபணியும் என் மனத்திலேயே திகழ்கிறது.

(Sd.) R. Arunachala Mudaliar,
ஆலிவலம்.
11—12—58.

ஆதீனத்து அடியவர்கள்

வித்துவான், திரு. ம. சிவசம்பு
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்

'சோழநாடு சோறுடைத்து' என்பார்கள். அதைவிட 'சோழநாடு கோயிலுடைத்து' என்பதே சிறப்பாகும். உமா தேவியார் பற்பல தலங்களில் சிவபெருமானைப் பூசிக்கப் பெற்ற நாடு. சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கப் பாடு படும் மடாலயங்கள் நிறைந்த நாடு. அம் மடாலயங்களில் இறைவனின் முக்கட் சுடர்போல சிறந்து விளங்குவன மூன்று மடாலயங்கள். 1. தருமபுர ஆதீனம் 2. திருவாவடுதுறை ஆதீனம் 3. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம். இம்மடாலயங் களின் அருளாட்சியில் தேவஸ்தானங்கள் பல உள்ளன. அவற்றுள் தருமபுர ஆதீனத்தின் அருளாட்சியில் 27 விண் மீன்கள் எனப் பிரகாசித்துக்கொண்டிருப்பது 27 தேவஸ் தானங்கள். இவற்றுள் இறைவன் முக்கட்சுடர்போல விளங்கு வன மூன்று தேவஸ்தானங்கள். 1. திருக்கடவூர் 2. வேளூர் 3. சீகாழி என்பனவாகும். தீராதவினை எல்லாம் தீர்த்து வைக்கும் வைத்தியநாதப்பெருமான் எழுந்தருளி இருக்கும் வைத்தீஸ்வரன் கோவில் சீரும் சிறப்புமாக - தேவகைலாசமாகக் கண்டார் வியக்கும் வண்ணம் இருக்கிறது. இதன் பெருமைக் கேல்லாம் காரணம் 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடன் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்த குருமகாசந்நிதானங்களும், ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும் ஆகும். உடலால் உழைத்த உத்தம அடியார்கள் பலர். பொருள் சேர் புகழ் புரிந்தார் பலர். பாமாலை தொடுத்துப் பணிசெய்த பாவலர் பலர். அவர்களின் அருஞ் செயல்கள் சொல்லவும் முடியுமோ?

உழைப்பின் உறுதியும் அதன் வெற்றியும்: காலை நேரம். முரசு முழங்க, எடுபிடிகள் முன் செல்லப் பாவலர் புடைசூழ ஒருநாள் யாத்திரை சென்றுகொண்டிருந்தான் அரசன்.

வேளூருக்கு அருகில் வந்தான். அதிசயத்து நின்ருன். கண்ட காட்சி அவனது கருத்தைக் கவர்ந்தது. ஒரு வயலில் ஏரின் ஒரு பக்கத்தில் மாடும் மற்ருெரு பக்கத்தில் ஒரு அடியவரும் உழுதுகொண்டிருப்பதைக் கண்டான். ஆனல் அந்த அன்பின் உருவம், ஊக்கத்தின் உறைவிடம், தொண்டின் சிகரம், உழைப்பின் வாரா உறுதியும் உளவோ என்று எண்ணிக் கொண்டு கருமமே கண்ணுக உழுதுகொண்டிருந்தது. அரசன் அருகில் சென்ருன். இவ்வாறு செய்யக் காரணம் என்ன என்று வினவினுன்? அடிகள் ''மற்ருெரு காளை வாங்கி உழுவதற்குப் போதிய வசதி இல்லை. இவ்வூர் ஆலயத்திற்குச் சொந்தமான இச்சிறு நிலத்தை யானே ஒரு காளையாக இருந்து உழுது தொண்டுசெய்கிறேன்'' என்ருர்கள். அரசன் சுவாமி களின் உண்மை அன்பைக் கண்டு மிகுந்த நிலங்களையும், பொருள்களையும் தானம் செய்தான். இவ்வாறு உழைப்பின் உறுதியால் வெற்றிபெற்ற சுவாமிகள் அட்சயலிங்கத் தம்பிரான் சுவாமிகளே ஆவார்கள்.

இவர்கள் சகல சாத்திரமும் உணர்ந்தவர்கள். அட்டமா சித்தி வல்லவர்கள். கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள். புலவர்களைப் போற்றும் பண்பு உள்ளவர்கள். தருமபுர ஆதீனப் புலவராகிய வடுகநாத தேசிகர் அவர்களைக்கொண்டு வேளூர்த் தல புராணம் இயற்றச் செய்தவர்கள். இதை

''திகழ் சிவஞான தேசிகனருளாற் தெளிந்துளஞ் சகலசாத்திரமும்
புகழ்பெற உணர்ந்தோன் அட்சயலிங்க புண்ணியமுனிவரன்புகல
அகழ்கடலுலகில் வடமொழி வேளூர்ப் புராணந் தென்மொழி
யினிலருளி
புகழ்பெற வரங் கேற்றினனேழில் வடுகநாதன் வாழ்
வள்ளி நாயகன் முன்''

என்னும் வேளூர் புராணச் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம். ஸ்ரீமத் சுவாமிகள் ஏறக்குறைய 200 ஆண்டுகளுக்கு முன் இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

கவிதைப் பணியும், கறுங்கற் பணியும்: 'முதுமறைகள் ஆகமம் முழங்கு புள்ளூரனே, முன்னை வினைதீர்த்தருளும் மன்னனே, புள்ளூரின் முக்கட் குருக்கள் குருவே, முத்தர் குருவே, யோக சித்தர் குருவே, பாலமுத்துக்குமார குருவே'

என்றெல்லாம் 'திருவருட்பா' மூலம் போற்றியவர்கள் 10வது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகசுவாமிகள் ஆவார்கள். அவர்கள் காலத்தில் ஆதீன அடியவராக இருந்து தொண்டு செய்தவர்கள் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள். இவர்கள் காலத்தில் அம்பாள் சந்நிதி, தட்டம் சுற்றி மண்டபம், சித்தாமிர்ததீர்த்தக் கரை முதலியவைகளை கருங் கற் பணிசெய்தார்கள். இதற்குச் சான்றாக இன்றும் கல் வெட்டுகள் உள்ளன.

இமயமுதல் குமரிவரை சைவமும் தமிழும் பரப்பிய குமர குருபர சுவாமிகள் 'முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத் தமிழ்' பாடினார்கள். 'படிக்காசன் உரைத்த தமிழ் வரைந்த ஏட்டைத் தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய் மணக்கும்' என்றெல்லாம் புகழப்படும் படிக்காசுத் தம்பிரான் சுவாமிகள் 'வேளூர்க் கலம்பகம்' பாடினார்கள்.

இவ்வாறு பலரும் பாடுபட்டு வளர்த்த வேளூர் தேவஸ் தானத்தில் இப்பொழுது 25-வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத் தின் ஆணையின்வண்ணம் கட்டளை விசாரணையாக இருப்பவர்கள் ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ஆவார்கள். இவர்கள் சட்டநுட்பம் தெரிந்தவர்கள். பலருடன் அன்பாகப் பழகும் ஆற்றலும் எளிமையான வாழ்க்கையும் உயரிய நோக்கமும் கொண்டவர்கள். தமிழும் ஆங்கிலமும் நன்கு கற்ற வர்கள். தொண்டுசெய்யும் பண்பு உள்ளவர்கள். இவர்களைக் கொண்டு தற்பொழுது அருளாட்சி புரியும் 25-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் செய்கின்ற பணிகள் மிகப்பல. கோவிலின் பிராகாரங்கள் எல்லாம் கருங்கற்பணி செய்கிறார்கள். நூல் நிலயம், நெற்களஞ்சியம், அநாதைக்குழந்தைகள் இல்லம் முதலியவற்றை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதுமட்டுமா? செல்வ முத்துக்குமாரசுவாமி, தையல்நாயகி, வைத்தியநாதர் முதலிய மூர்த்திகளுக்கு எல்லாம் தங்கக்கவசம் செய்திருக் கிறார்கள். இப்பொழுது செல்வமுத்துக்குமார சுவாமிக்கு நவரத்தன அங்கி செய்யும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவ்வாறு பல பணிகளைச் செய்யும் தருமபுர ஆதீனம் வாழ்க! குரு பரம்பரை வாழ்க! திருக்கூட்டத்து அடியவர்கள் வாழ்க! வாழ்க! உலகெலாம்!

புராணம்

சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன்

தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி. தருமபுரம்.

உலகத்தில் இறையருள் சிறந்து விளங்குவன சிவத் தலங்களே. அச் சிவத்தலங்களுள் சிறந்தன திருவாரூர், சிதம்பரம், திருவண்ணுமலை. காசி முதலியன. திருவாரூரில் பிறக்க முத்தி, சிதம்பரத்தில் தரிசிக்க முத்தி, திருவண்ணு மலையில் நினைக்க முத்தி, காசியில் இறக்க முத்தி என்பர் ஆன்ருேர். அம் முறையில் எண்ணத்தகுந்த தலங்களுள் ஒன்ருய் விளங்குவது திருப்புள்ளிருக்குவேளூர். இது இங்கு வழிபட வருகின்றவர்களுக்கு வீடுபேற்றை அளிப்பதோடு ஸ்ரீ செல்வமுத்துக்குமாரனின் அருள் மிக்க தலமாகவும் விளங்கு கிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்ருலும் சிறப்புற்றுத் திகழ்கிறது. சைவ சமயாசாரியர்களுள் சம்பந்தர், அப்பர் இவர்களது தேவாரப் பதிகங்களையும் மற்றுமுள்ள அருட்புலவர் களின் பாடல்களையும் கொண்டு விளங்குவது. இது தருமபுர ஆதீனக் கோயில்களுள் ஒன்ருகவும், சிறந்த காணிக்கைத் தலமாகவும் திகழ்கிறது.

வேண்டுவார் வேண்டுவதே ஈவானுகிய இறைவன் கயிலை மலையினின்றும் சஞ்சீவி வில்வமண்ணுடன் மருத்துவக் கோலங் கொண்டு இத்தலத்தில் எழுந்தருளியிருந்து தன்னை யடைந்து வழிபடுவார்க்கு எண்ணிறந்த உடற்பிணியையும் பிறவிப்பிணி யையும் தீர்த்து அருள்புரிந்து வருவதால் இறைவனின் பெயர் ஸ்ரீ வைத்தியநாதர் என்று வழங்கப்படுகிறது. இதுபற்றியே வைத்தீஸ்வரன்கோயில் என்ற பெயர் இத்தலத்திற்கு வழங்கு கிறது. மேலும் மருந்து (மண்ணுருண்டை) கொடுத்து நோய் தீர்க்கும் வழக்கம் இன்றும் இத்தலத்தில் இருந்துவருவதைக் காணலாம். இத்தகைய மாண்புகள் நிறைந்த இத்தலத்துப் பெருமையையும், இதில் கோயில்கொண்டு எழுந்தருளியிருந்து அருள் வழங்கும் இறைவனின் பெருமையையும் கூறுவதே வேளூர்ப் புராணம்.

உலகமக்களை சைவநெறி வேதநெறிகளை உணரச்செய்து முத்தி இன்பத்தில் திளைக்கச்செய்வன திருமுறைகள், சாத்தீரங்கள், புராணங்கள் முதலியன ஆகும். அவற்றுள் புராணங்கள் கைலாசபதியாகிய சிவபெருமான் திருநந்திதேவருக்குத் திருவாய் மலர்ந்தருள அவர்மூலம் முனிவர்கள் உபதேசிக்கப்பெற்றனர். அவர்களால் உலகம் உய்யக் கிடைத்தவை புராணங்கள். அவற்றுள் வேளூர்ப் புராணத்தைத் தமிழில்பாடியவர் காத்தியாயனிருப்பு வடுகநாத தேசிகர்.

இப்புராணம் செய்யுள் நடையில் அமைந்தது. கடவுள் வணக்கம், பாயிரம், நாட்டுச்சிறப்பு, நகர்ச்சிறப்பு என்னும் முறையில் தொடங்கி நைமிசாரணியச் சருக்கம் முதல் உதங்கச் சருக்கம் ஈருக அறுபத்தோர் (61) சருக்கங்களைக்கொண்டது.

பயிலும்பொழுது இதனை எழுதிய ஆசிரியர் திருமுறை, இதிகாசம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் முதலியவற்றை நன்கு பயின்றவர் என்பது தெற்றென விளங்குகிறது. இராமதீர்த்தச் சருக்கம் இவரது இதிகாசப் புலமையையும், செவ்வேள் திருவவதாரச் சருக்கம் கந்தபுராணப் பயிற்சியையும், இந்திரன் சாபநீங்கு சருக்கம் திருவிளையாடற் புராணப் பயிற்சியையும் நன்கு எடுத்துக்காட்டுகிறது. எடுத்துக்காட்டாகச் சில:-

செவ்வேளின் திருவவதாரத்தைக் கூறப்புகுந்த ஆசிரியர் ‘இத் தலமகிமையை எளிதில் எடுத்துரைத்தல் அரிது. என் அறிவுக்கெட்டியதைக் கூறுகின்றேன்’ என்றுதொடங்கும்போது “தன் பெருமை தானறியாத் தற்பர மறிவனே” என்று கூறும் அடியால் “தம் பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ” என்ற மணிவாசகரின் மாண்பு மொழியின் விளக்கம் புலனுகிறது. அதோடு “தானுங் காண்கிலன் இன்னமுந் தன் பெருந்தலைமை” என்னும் கந்தபுராணமும் உன்னி உணர்தற்குரியது.

நாயுடல்பெற்ற பெண் சித்தாமிர்த தீர்த்தத் துளிபட்டதால் பெண்ணுருப்பெற்றுள் என்று குறிப்பிடுகின்றார் ஒரு பாடலில்.

“தெளித்தனன் ஒருதுளி தெளித்து மற்றதின்
வெளிப்புற மேடைமேல் விழுந்த தண்புனல்
ஒளிக்குநாய் புழுச்சொரி யுடலிற் பட்டது
களித்தனள் நாயுட னீங்கக் கண்டதால்”

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்



தங்கக்கொடிமரம்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான
வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ தையல்நாயகியம்பாள் தங்கக் கவசம்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்



தங்கக் கவசம் சார்த்தப்பெற்ற ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஆறுமுகக்குமாரர்

திருமையாதீனம் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்



தங்கப் பூஜாபாத்திரங்கள்



பூஜைக்குரிய தங்கக்குடங்கள்

இக் கருத்து அமைந்த குமரகுருபர சுவாமிகள் "வெண்சாந்து மற்றைத் திருச்சாந்து நிற்க வற்ருச் சித்தாமிர்தத் தடத் தீர்த்தத் துறைக்குறுந்திவலை யொன்றே யமையும்" என்றருளியதும் ஒப்பு நோக்கற்குரியது. இத்தலத்தின் மகிமை,

"கண்ணகன் புவியிற் பொடிந்ததூள் பகுத்துக்
கணக்கிட லாங்குவி மணலை
எண்ணலா மெழுந்து சொரிமழைத் திவலை
யினைக்கணித் தறியலா முயர்ந்த
விண்ணகத் திலகு தாரகைத் தொகையை
விதிக்கலாம் வயித்திய நாத
அண்ணல்சூழ் தலத்தைக் கண்டபேர் பெறும்பே
றளவிட லரிதரி தாமால்."

என்ற பாடலால் நன்கு விளங்கும்.

சித்தாமிர்த தீர்த்தச் சிறப்பைக் கூறும்போது பாவத்தைக் காடாக உருவகிக்கிருர். காட்டில் உண்டாகும் தீ அக்காட்டையே அழிப்பதுபோல் இத்தீர்த்தம் தன்னிடம் வந்து மூழ்குவோர் பாவம் முதலியவற்றைத் தீர்க்கின்றது என்று கூறும் உவமை போற்றற்குரியது. பாடல் வருமாறு :-

"முளைத்திடும் பாவக் காட்டினுக் கதனின்
மூண்டெழு காட்டுறு தீபபோல்
வளைத்துநீ ருகச் செய்திடும் வறுமை
தீர்த்திடும் வருங்கய ரோகந்
திளைத்திடும் பிரம கத்தியுந் தீர்க்கும்
கீழ்மையா கியசுரா பானம்
விளைத்திடுந் தோட மனைத்தையும் போக்கும்
விளங்குசித் தாமிர்த தீர்த்தம்."

ஆதித்தன் அருச்சனைசெய் சருக்கத்தில் உள்ள 'உயர்ந்தோரை இழிந்தோர் சேர்ந்தால் இழிவுநீங்கி உயர்வுபெறுவர்' என்ற நீதியும் உணரற்பாலது.

இதனைப் படிப்போரும், கேட்போரும் அளவிடற்கரிய செல்வத்தினராய் எதிர்த்துவரும் பகையை வெல்லுபவராய், வித்தை விரும்பும் மக்களைப் பெறுபவராய் சிவபெருமான் திரு வடியைப்பெற்றுப் பேரானந்தமுறுவர்.

கல்வெட்டுக்கள்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி

தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

கல்வெட்டுக்கள் தமிழர்களுடைய வரலாற்றை விளக்குவன. இவை திருக்கோயில்களில் பண்டைத் தமிழ் மன்னர்களால் வெட்டப்பெற்றது. தமிழர்களுடைய வரலாற்றை விளக்கும் தனிநூல் எதுவும் அக்காலத்தில் எழுதப்பெறவில்லை. இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் மேல்நாட்டு ஆசிரியர்கள் எழுதிவைத்த குறிப்புகளுமே இன்றும் நமது பழம் பெருமையை உலகுக்கு அறிவிப்பன. இவற்றைப் பேணிப் பாதுகாப்பன திருக்கோயில்களே. கோயில்கள் தமிழ் மக்களுடைய கலை, கலைவழிவந்த ஒழுக்கம் இவைகளைப்பாதுகாப்பன.

தென்னாட்டுத் திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களில் பல ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் படியெடுக்கப்பட்டன. அவற்றுள் வெளியிடப்படாதன பல உள. எழுதப்பெற்ற கல்வெட்டுக்களும் படியெடுக்கப்படாமலும் திருப்பணிக் காலங்களில் இடம் மாறியும், புதையுண்டும், பொறிந்தும் போயின பல.

புள்ளிருக்குவேளூர் திருக்கோயில் மிகப் பழமையானது. தேவார, திருப்பதிகங்கள் பெற்றது. இவ்வாலயத்தில் இன்று காணப்படும் கல்வெட்டுக்கள் எட்டுதான். இவையும் மிகப் பிற்காலத்தன. மகா மண்டபத்து வடபக்கத்து உட்புறச் சுவரில் காணப்பெறும் தொடர்ச்சியற்ற எழுத்துக்கள் கி. பி. 1120 முதல் 1136 வரை அரசாண்ட விக்கிரமசோழன் காலத்தனவாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள். மற்றொன்று தஞ்சை மன்னனாகிய அச்சுதப்பன் காலத்தது. துளசாஜி மன்னனுடையன இரண்டு. விக்கிரமசோழன் காலத்தது ஒன்று. ஸ்ரீ சக்கோலோதேவமகாராசாவினது ஒன்று. காலமும் பெயரும் தெரியாதன மூன்று. ஆக எட்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன.

விக்கிரமசோழனுடைய மெய்க்கீர்த்தி மட்டிலும் இக்கோயிலில் காணப்படுகிறது, விக்கிரமசோழன் முதற்குலோத்துங்

கனின் மகன். இளமைப் பருவத்தில் வேங்கி நாட்டில் அரசப் பிரதிநிதியாக இருந்து அதனை ஆட்சிபுரிந்தவன். கி. பி. 1118-ல் இளவரசனாகி 1120-ல் முடிமன்னன் ஆனான். இவன் பரகேசரி என்ற பட்டப்பெயரினன். இவனுடைய சிறப்பை இம்மெய்க் கீர்த்தி கூறுகிறது.

இக்கோயிலில் காணப்படும் கல்வேட்டுக்கள் ஆலயத் திருப் பணிகளைப்பற்றியும் இறையிலி நிலங்கள் அளித்ததைப்பற்றியும் சொல்லுவனவாகும். இக் கல்வேட்டுக் குறிப்புகளைப்பற்றி ஆதீனக் கோயில்கள் என்னும் நூலில் சொல்லியிருப்பவை பின் வரும் செய்திகள்.

அச்சுதப்ப நாயக்கர்: இவருக்குப் புண்ணியமாக அழகப்பெருமாள் பிள்ளை என்பவர் சுவாமி சிதம்பரீசர்க்கு மகாசிவராத்திரி யபிஷேகத்திற்கு ஈடாக மண்ணிப்பள்ளம் என்ற கிராமத்தில் நிலம்விட்டு இறையிலி செய்தார். (423 of 1918)

துளஸாமகாராசா: (கி. பி. 1767) இவர் சுகம் 1689-ல் தஞ்சையை யாளுகின்ற காலத்தில் சீகாழிச் சீமையை அரசப்பிரதிநிதியாயிருந்து ஆண்டவர் ஸ்ரீமல்லர் ஸ்ரீகாடே ராவ் அவர்கள். அப்போது தருமபுரத்தில் மகாசந்நிதானமாக இருந்துவந்தவர்கள் 10-வது குருமூர்த்தி சிவஞான தேசிகர் அவர்கள் வேளூர்க் கட்டளை விசாரணையிலிருந்தவர் முத்துக் குமாரசாமித் தம்பிரானவர்கள். அப்போது வேளூர் 2-ம் பிராகாரத்து நாற்புறத்து மதிலும், திருமாளிகைப்பத்தி மண்ட பங்களும், அம்மன் சந்நிதி தட்டஞ்சுற்றி மண்டபமும், திரு மாளிகைப் பத்தியின்மேல் வௌவால் நத்தி மண்டபமும் கட்டி நிறைவேற்றப்பட்டன. (421 of 1918). அடுத்த கல்வேட்டு சகம் 1692-ல் கி. பி. 1770-ல் சித்தாமிர்தத் தீர்த்தக்கரை நான்கு பக்கங்களும் நீராழி மண்டபமும் திருப்பணி செய்யப் பெற்றதை யறிவிக்கும்.

பெயர் குறியாத கல்வெட்டு: வேளூர் தேவஸ்தான கிராமங்கட்கு பாய்ச்சல் காலாக இருப்பது முடவனாறு. இந்த ஆறு பழவாற்றில் ஆதமங்கலத்திற்கு அருகாமையில் பிரிகிறது. இதிலிருந்து புங்கனூர் சமீபத்தில் சட்டைநாதபுரம் வாய்க்கால் பிரிகிறது. இந்த வாய்க்கால் கண்வாய்க்கு நீளம் முப்பத் தைந்து அங்குலமும், அகலம் எட்டங்குலமுமாக வைத்துக்

கட்டினார்கள் என்பதை யறிவிக்கிறது. இன்னும் பெரிதாகக் கண்வாய் வைத்துவிட்டால் தேவஸ்தான நிலங்களின் பாய்ச்சல்கெடும். ஆதலால் இக்கல்வெட்டை மாற்றவும் புதுக்கவும் முடியாதபடி கலியுகத்தும் கண்கண்ட தெய்வமாகிய செல்வ முத்துக்குமாரசாமி கருப்பக்கிருக நிலைப்படியில் சேதுக்கி வைத்தனர். இங்கு அங்குலம் என்பது தச்சுமுழ அளவைப்படியுள்ள அங்குலம். (419 of 1918).

கிராம அளவை செய்தபோது ஒரே யளவுள்ள கோலைப் பயன்படுத்தாமையால், இன்ன கிராமம் இத்தனை யடியுள்ள கோலால் அளக்கப்பெற்றது. என்பதனை யறிவிக்கிறது. இக் கல்வெட்டு.

தோட்டமானியம் அளந்தகோல்	18	அடி	நீளம்
மருத்தூர் அளந்த கோல்	16	,,	,,
கோண்டத்தூர் ,,	15	,,	,,
மாகாணம் கிராமம் ,,	14	,,	,,

சக்கோலோதேவமகாராசா : இவன் ஆரியவசவ கங்கணமதியாத மணவாளன் தந்தருளிய சக்கோலோ எனப் படுவதால் இவன் மணவாளன் மகனாக இருக்கலாம். இவ் வரசன் இவ்வூருக்கு ஆறு யானைகளை விட்டான்.

கொடிமரத்தின் பீடத்தில் உள்ள கல்வெட்டு: சகம் 1802-ல் (கி. பி. 1980-ல்) தருமபுர ஆதீனம் 16-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சச்சிதானந்த தேசிகரருள்பெற்ற மாணிக்கவாசக தேசிக னநுக்கிரகம்பெற்ற சோமசுந்தரத் தம்பிரான் கட்டளை விசாரணை செய்கின்றபோது சுவாமி அம்மன் துவஜஸ்தம்பங்கள் செப்பனிடப்பெற்று, குறடு கட்டி, தங்கம் வெள்ளி பூசப்பட்டன.

பன்னெறி விளக்கம்

களமூர், பெருநாவலர், திரு. செ. செல்வப்ப முதலியார் பாடியது.

அற்றவர் நோவது தம்மூழ்வினையை யமாழிந்த
கோற்றவர் நோவது சேனபதியைக் குணம்புகழக்
கற்றவர் நோவது காசுதவாரைக் கருத்துருகப்
பேற்றவர் நோவது கூத்தியைத் தேடுதம் பிள்ளையையே. 49

ஆகம வித்துவான்,
திரு. S. சுவாமிநாத சிவாசாரியர்,
தலைமை ஆசிரியர்,
வேதசிவாகம பாடசாலை, தருமபுரம்.

பத்ரலிங்கம் அல்லது பலிபீடம், பலிபீடத்திற்குப் பத்திர லிங்கம் என்று பேயர்.

स्थूललिङ्गं विमानं स्यात् सूक्ष्मलिङ्गं सदाशिवः ।
बलिपीठं भद्रलिङ्गं लिङ्गं त्रिविध मुच्यते ॥

ஸ்தூலலிங்கம் விமானம்ஸ்யாத் சூக்ஷ்ம லிங்கம் சதாசிவ: |
பலிபீடம் பத்ரலிங்கம் லிங்கம் த்ரிவித முச்யதே ll

அதாவது விமானம் ஸ்தூல லிங்கம் எனப்படும். கர்ப்பகிரஹத்திலிருக்கும் இலிங்கம் சூக்ஷ்ம லிங்கம் எனப்படும். பலிபீடம் பத்ர லிங்கம் எனப்படும். இதன்மேல் அன்னத்தை வைத்து பலி போடப்படுவதால் பலிபீடம் என்றும் பேயர் வந்தது. ஆலயங்களில் செய்யப்படும் பூஜையாவும் ஐந்தொழிலையுடையது.

सृष्टिश्चैवाभिषेकस्तु स्थितिर्नैवेद्य मेवच ।
संहारो बलिरित्युक्तः तिरोभावस्तु दीपकः ॥
अनुग्रह श्च होमस्यात् पूजायाः पञ्च कृत्यता ।

ஸ்ருஷ்டிஸ் சைவாபிஷேகஸ்து நைவேத்யமேவச l
ஸம்ஹாரோ பலிரித்யுக்த ; திரோபாவஸ்து தீபக : ll
அனுக்ரஸ்ச ஹோமஸ்யாத் பூஜாயா ; பஞ்சகிருத்யதா l

அதாவது, இறைவனுக்குச் செய்யப்படும் அபிஷேகமானது, சிருஷ்டித் தொழிலாகும். நைவேத்யம், ஸ்திதிக்ருத்யமாகும். பலிபோடுதல் சங்கார கிருத்யமாகும், தீபாராதனை செய்தல் திரோபாவ கிருத்யமாகும். ஹோமம் செய்தல் அனுக்ரஹம் என்று அஜிதாகமம் கூறுகிறது.

உலகத்தில் தலைமையாக இருப்பவர்களுக்கு நிக்ரஹ அனுக்ரஹசக்தி முக்கியம். நிக்ரஹம் என்பது, குற்றம் செய்பவனைத் தண்டிப்பது. அனுக்ரஹம் என்பது தனது வேலையை ஒழுங்காகச் செய்பவனுக்கு அருள் வழங்குவது.

நிக்ரஹ சக்தி உள்ள இடத்தில் அனுக்ரஹ சக்தியும் இருக்கும். நியாய சபையில் தண்டனையளிப்பவரும், விடுதலை அளிப்பவரும் நியாயாதிபதிதான். உலகத்தில் நியாயாதிபதி பலரிருக்கலாம். எல்லாவுலகத்தையும் படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தொழில்களைச் செய்யும் கர்த்தா ஒருவன்தான். 'அஸ்திகர்த்தா ஸஹ்ருத்வைதத் ஸ்ருஜத்யஸ்மான் ப்ரபுர்ஹர:' கர்த்தா ஒருவன் உண்டு. அந்த ப்ரபுவான ஹரன் இந்த ப்ரபஞ்சத்தை சங்காரம் செய்கிறான் ஸ்ருஷ்டிக்கிறான், என்பதினால் காப்பாற்றுகிறான் என்பதும் உள்ளடக்கமாகக் காணப்படுகிறது.

''ஏதஸ்யைவாக்ஷரஸ்ய ப்ரசாஸனாத் சூர்யாசந்திரமசௌவித்ருதௌ திஷ்டத:' பிஷோதேதிசூர்யபீஷாத்வாயு: பவதே. பீஷாதக்னிச்சேந்த்ரஸ்ச., மிருத்யுர்த்தாவதி பஞ்சம: இப்பரம்பொருளுடைய ஆணையினாலேயே சூரியன், சந்திரன் இவர்கள் நிற்கிறார்கள். இவரிடம் பயத்தினால் சூரியன் உதயமாகிறான். பயத்தினால் வாயு வீசுகிறான். பயத்தினால் அக்னியும் இந்திரனும் தங்களது தொழிலைச் செய்கிறார்கள், இயமனும்கூட தனது வேலையைப்பிழையின்றிச் செய்ய ஓடுகிறான் என்று உபநிஷத் கூறுகிறது. ''நமஸ்தேருத்ரமன்யவே'' ஓ ருத்ரனே உனது கோபத்திற்கு வணக்கம் என்று வேதம் இறைவனைத் துதிக்கிறது. இவைகளுக்கு முக்கிய காரணம் நிக்ரஹசக்தி. இச்சக்தியால் நிரம்பியவர், மாலும் வேதனும் அறியாச் சேவடியை உடையவர் பரமேச்வரர். அத்தகையபரமேச்வரரை உறைவிடமாகக்கொண்ட ஆலயம் ப்ராணிகளுக்கு மூலாதாரம் போன்றது.

आलय स्सर्वभूतानां मूलाधार इति स्मृतः ।
उत्पन्नस्सर्वभूतानां बलदो बलिरुच्यते ॥

कारणागमम —

ஆலயஸ்ஸர்வபூ தானும் மூலாதார இதிஸ்மிருத :1
உத்பன்னஸ் ஸர்வபூதானும் பலதோ பலிருச்யதே 11

காரணாகமம் —

ஆலயமானது சகலப்ராணிகளுக்கும் மூலாதாரமாக ஆனதாய் விளங்குகிறது. ஆதலால் அங்குப் போடப்படும் பலியானது ஸர்வப்ராணிகளுக்கும் பலத்தைக் கொடுப்பதால் பலி எனக் கூறப்படுகிறது. (தொடரும்)

புலவர்களுக்குப் பாராட்டு

புலம் என்றால் அறிவு. அறிவு உடையார் யாவராயினும் அவர் புலவரே. அவர் இலக்கியப் புலவராக இருக்கலாம்; இசைப்புலவராக இருக்கலாம்; கணக்குப் புலவராக இருக்கலாம்; அவர் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்பது இத் தருமையாதீனத்தின் சீரிய நோக்கம். தமிழ் நாட்டின் அறிவுலகில் தலை சிறந்து விளங்கும் பெருமக்களை தருமையாதீனத்தில் 25ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி இப்போது அருளாட்சி புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவணி மூலந்தோறும் பட்டமளித்துப் பாராட்டி வருகிறார்கள். டாக்டர், திரு. ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களைச் 'சொல்லின் செல்வ'ராகவும், திரு. தே. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைப் 'பல்கலைச் செல்வ'ராகவும், திரு. அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்களைச் 'செந்தமிழ்க்காவல'ராகவும், திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களைச் 'செந்தமிழ்ச் செல்வ'ராகவும், திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களை 'முத்தமிழ் வித்தக'ராகவும், திரு. சிவராமன் அவர்களைச் 'சித்தாந்தச் செல்வ'ராகவும், திருமதி. குழந்தையம்மாளவர்களைச் 'செந்தமிழ்ச் செல்வி'யாகவும், திருமதி. ஈ. டி. இராசேசுவரி அம்மையார் அவர்களை 'விஞ்ஞானச்செல்வி'யாகவும், செந்தமிழ்ச்சொக்கர் திருவருள் ஆக்கிற்று.

24ஆவது குருமகாசந்நிதானத்தின் அருளாட்சியில் ஆதீனப் புலவர் பட்டம்பெற்றுப் பாராட்டப் பெற்றவர்கள்:- சிவஸ்ரீ ஈசானசிவாசாரிய சுவாமிகள், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், திரு. ஔவை. சு. துரைசாமி பிள்ளை அவர்கள், திரு. வயிநாகரம், திரு. வ. இராமநாதன் செட்டியார் அவர்கள், திரு. க. வச்சிரவேலு முதலியார் அவர்கள், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள், திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்கள், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் ஆகியோர். 25 ஆவது குருமகாசந்நிதானத்தால் ஆதீனப் புலவராக

ஆட்கொள்ளப்பெற்றவர்கள் திரு. அருணைவடிவேலு முதலியாரவர்களும், திரு. உருத்திரபதி அவர்களும். திரு. எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்கள் 'எழிசைமன்னர்'ஆகவும், திரு. கே. பி. சுந்தராம்பாள் அவர்கள் 'ஏழிசைவல்லபி' யாகவும், திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் ஆதீன இசைப்புலவராகவும், ஆதரித்துப் பாராட்டப்பெற்றோர். மாயூரம் திரு. T. S. தியாகராச ஐயர் அவர்களைச் 'சிவார்ச்சனைச்செல்வ' ராகவும், திரு. இராமநாத ஐயர் அவர்களைச் 'சிவநேசச்செல்வ' ராகவும், செந்தமிழ்ச்சோக்கர் திருவருள் ஆக்கியது. சென்னை மாநில அறநிலைய அமைச்சரும், அரசியல் அறிவு சான்றோருமாகிய கனம். திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 'நல்லறங்காவலர்' என்ற பட்டமளித்துச் சிறப்பிக்கப் பெற்றுள்ளார்கள்.

இன்னும் பல புலவர்களைப் பாராட்டுதற்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானமவர்கள் திருவுளங்கொண்டிருக்கிறார்கள். இன்று கலைநலம் கண்டு பாராட்டும் நுண்திறம் ஆதீனத்தையே சார்ந்திருக்கிறது அல்லவா? பாராட்டப் பாராட்ட புலவர்களின் தொண்டில் உற்சாகம் மிகும்; தொண்டுவளரும்; அறிவுலகு தழைக்கும்; அதுவே இப்பாராட்டின் தத்துவம் எனலாம்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

—திருவள்ளுவர்.

TIRUVARUR

The Laksharchana that was performed since February 12 at the behest of his Holiness Sri-La-Sri Subramania Desika Gnanasambanda Paramacharya Swamigal of Dharmapura Adheenam to Sri Medha Dakshinamoorthy Swamy in Sri Thiagarajaswami Temple concluded on February 23 in the immediate presence of His Holiness, Muchukunda Archana was also performed, on the occasion to Sri Thiagaraja and discourses were delivered by the leading Saiva Siddhanta Pandits. —Hindu-26-2-59.

சென்னை மாநில நகராட்சி மந்திரி

கனம். திருமதி. லூர்தம்மாள் சைமன் அவர்கள்

தருமபுர ஆதீனம் கல்வி நிலையங்களின்

மாணவர் கழகங்களது ஆண்டு விழாவில் ஆற்றிய

தலைமையுரை

இந்த ஸ்தாபனத்திலுள்ள கல்வி நிலைய கழகங்களின் ஆண்டுவிழா நிகழ்கின்ற அந்த முறைபார்த்து மகிழ்ச்சி. எனக்கு முன் பேசியவர்கள் " பண்பாடு, பண்பு, அறிவு என்பதைப்பற்றிச் சிறப்பாக எடுத்துக்கூறினார்கள். அறிவு எவ்வாறு பயன்பட வேண்டும். எங்கிருந்து கிடைக்கிறது. அறிவோடு சிறந்ததாகப் பண்பு வேண்டும். அந்தப் பண்பை அடைய நாம் முயல வேண்டும் '' என்றெல்லாம் சொன்னார்கள். இவ்விதமான ஒரு ஸ்தாபனத்தில் ஒழுக்கமும் அதைவிட விசேஷமாக உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய நல்லெண்ணக் கருத்துக்களும் போதிக்கப்படுகிறது. இந்த ஸ்தாபனத்தில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளைப் பாராட்டுகிறேன். இந்தப் பழமையான ஸ்தாபனத்தில் கல்வி கற்பதால் பயன்விசேஷமாகக்கிடைக்கிறது. அதை நீங்கள் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் உங்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய நன்மை வெகுவாகக் கிடைக்கிறது. இதேசமயத்தில் நான் கூறுவது என்னவென்றால் உங்களுக்கு அறிவு கல்வி படிப்பு இவ்விதமான நன்மைகள் எளிதாகக் கிடைக்கக்கூடிய ஸ்தாபனங்கள் பல இருப்பினும் இந்தச் சூழ்நிலையில் இருக்கும் நீங்கள் பாக்கியம் செய்தவர்கள் என்றே மீண்டும் கூறுவேன். நல்ல ஒழுக்கமுள்ள ஆசிரியர்களைக் கொண்டு கல்வி கற்பிப்பதாக நான் தெரிகிறேன். இந்த வாழ் நாளை மிகுந்த சிறப்பாகக்கருதி இந்த அறிவுரைகளை என்றும் கடைப்பிடிப்பீர்களானால் எதிர்கால வாழ்க்கை மிகவும் சிறப்பாக இருக்கும்.

இங்கு என்னைப் பேசச்செய்த மேன்மைதங்கிய சந்நிதானம் அவர்கள் திறமை உடையவர்கள். வெளியே இருந்து நன்மை செய்வதைவிட - உள்ளே இருந்து - ஒரு ஸ்தாபனத்தின் தலைவ

ராக இருந்து ஸ்தாபனத்தைத் திறமையாக நடத்தி, மற்றவர்க ளுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தனது ஜீவிதத்தையே அர்ப்பணம்செய்து சேவையில் இருக்கும் இந்த ஸ்தாபனத்தின் மாணவ மாணவிகள் மிகவும் பாக்கியம் உள்ள வர்கள் என்று கூறிக்கொள்ளுகிறேன். இங்கு கல்வி கற்பிப்ப தோடு உடற்பயிற்சியும் அளிக்கப்பெறுகிறது. நான் வரும் பொழுது விளையாட்டுப் போட்டி ஒன்றையும் பார்த்தேன். உடற் பயிற்சி அளித்து அதில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிச ளிக்கும் ஒரு பொறுப்பையும் எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். போட்டியில் வெற்றிபெறுவது முக்கியமான அம்சம். ஆனால் எல்லோரும் வெற்றிபெற முடியாது. வெற்றியும் தோல்வியும் நம்முடையதல்ல. எல்லோருக்கும் முயற்சி வேண்டும். தோல்வி நம்முடையது அல்ல, முயற்சி நம்முடையது. எந்தக் காரியம் செய்தாலும் முயற்சியுடனும் ஊக்கத்துடனும் செய்யவேண்டும். இந்த ஸ்தாபனத்திற்குவரும் வாய்ப்பு அளித்த பெரியோர்களுக்கு என் நன்றி. இந்த ஸ்தாபனம் இவ்விதமான சேவைசெய்வது நாட்டிற்குச் செய்யும் சேவை. நல்ல சேவையில் என்றுமே பணிபுரிய வாழ்த்துக் கூறுகிறேன். வணக்கம்.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam,
Vaithiswarankoil.

It is with deep sense of joy that I presided over the annual day celebration of this Orphanage. I had a chance of seeing the works done by the inmates. The little ones are well trained and it was a pleasure to watch the little hands work. This early training will make them experts later.

I congratulate very sincerely the management for this noble work and I wish all success and prosperity to this noble institution.

(Sd) LOURDHAMMAL SIMON,
7—3—'59.

செய்திகள்

கல்விநிலைய கழகங்களின் ஆண்டு விழா

தருமையாதீனத்தில்

தருமபுரம் ஆதீனம் ஆதீன தேவஸ்தானங்கள் பல்கலைக் கல்லூரி உயர்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்தொடக்கப் பள்ளி, தேவார, வேத சிவாகம பாடசாலைகளின் கழகங்களது ஆண்டுவிழா சென்னை மாநில நகராட்சி அமைச்சர் கனம். திருமதி. லூர்தம்மாள் சைமன் அவர்கள் தலைமையில் 7-3-59 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நிகழ்ந்தது. கனம். அமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி, ஆதீனத்தையும் பாராட்டிப் பேசினார்கள். பின்னர் ஆதீனக் கல்வி நிலையங்களின் மாணவர்களுக்காக வைக்கப்பெற்ற விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சு முதலிய போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். கல்லூரிப் பேராசிரியர் வித்துவான், திரு. சோ. சிங்காரவேலனார் அவர்களும் கல்லூரி நிறைநிலை வகுப்பு மாணவர், K. V. வைத்திய நாதசுவாமி என்பவரும் முறையே "அறிவு வளர்கிறதா?" "கல்வியும் கடமையும்" என்னும் தலைப்புக்களில் பேசினார்கள். ஸ்ரீகுருஞானசம்பந்தர் உயர் தொடக்கப்பள்ளி மாணவியர்களின் சிறு நிகழ்ச்சி (நாட்டியம்) நிகழ்த்தப்பெற்றது. கனம். அமைச்சர் அவர்கள் ஆதீனக் கல்விநிலையங்களைப் பார்வை யிட்டார்கள். அவர்களுக்கு நிலையங்களின் சார்பில் வரவேற் புரை வாசித்தளிக்கப்பட்டது. விழாவில், சென்னை மாநில அமைச்சர், கனம். திரு. கக்கன் அவர்கள், வேதாரண்யம், திரு. ஏ. வேதரத்தினம் பிள்ளை அவர்கள், கும்பகோணம், திரு. ஆர். கந்தசாமி மூப்பனார் அவர்கள் முதலியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பெற்றன. நாட்டு வாழ்த் துடன் விழா இனிது நிறைவுற்றது.

கல்லூரி நிறைநிலை மாணவர்கள்

தருமபுரம் ஆதீனம் ஆதீன தேவஸ்தானங்கள் பல்கலைக் கல்லூரி நிறைவு நிலை மாணவர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கருணையை வியந்து அவர்கட்கு நன்றி தெரிவிக்கும் முறையில் 16-2-59 அன்று விழா ஒன்றை ஏற்பாடு செய்தார்கள்.

அவ்விழாவிற்கு மாணவர்கள், ஆசிரியர்களின் வேண்டுகோட்கிசைந்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் எழுந்தருளி மாணவர்களுக்கு அறிவுரையும் ஆசியும் வழங்கி சிவபோக சாரமும் சோக்கநாத வேண்பாவும் என்ற நூலை வழங்கியருளினார்கள். அன்று நிறைநிலை மாணவர்கள் கல்லூரிப் பேராசிரியர்கட்கு ஒரு விருந்து நிகழ்த்தி நிழற்படமும் எடுத்துக்கொண்டனர். நிழற்படத்திற்கும் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமவர்கள் எழுந்தருளினார்கள். மாணவர்கள் பலரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருட்கோடையையும், கருணையையும் வியந்து பாராட்டிப் பேசி பணிவு மடல் ஒன்று வாசித்தளித்தனர்.

கல்வெட்டுத் திறப்பு விழா

திருவிளநகரில்

தருமபுர ஆதீனத்திற்குச் சோந்தமான விளநகர் ஸ்ரீ துறை காட்டும் வள்ளலார் தேவஸ்தானத்தில் 10—2—59 சேவ்வாய்க் கிழமை மாலை 6 மேணிக்கு சேன்னை மாநில இந்து சமய அறநிலய ஆணையர் திரு. A. உத்தண்டராமப் பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள் தேவாரத் திருப்பதிகக் கல்வேட்டைத் திறந்துவைத்து அவற்றின் இன்றியமையாமையையும், அது போதுமக்களுக்கு எவ்வகையில் பயன்படுகிறது, அதை அவர்கள் எம்முறையில் பயன் படுத்திக்கோள்ள வேண்டும் என்ற பல கருத்துக்களை விளக்கிப்பேசினார்கள். அவர்களுக்கு தேவஸ்தானச் சார்பில் வரவேற்புரை ஒன்று வாசித்தளிக்கப்பட்டது.

திருக்குவளையில்

தருமபுர ஆதீனத்திற்குச் சோந்தமான திருக்குவளை என்னும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் 11—2—59 புதன்கிழமை இரவு 7 மணிக்கு சேன்னை மாநில இந்து சமய அறநிலய ஆணையர் திரு. A. உத்தண்டராமப்பிள்ளை B. A., B. L., I. A. S. அவர்கள் தலைமைதாங்கி தேவாரத் திருப்பதிகக் கல்வேட்டுக்களைத் திறந்துவைத்துப் பேசினார்கள். அவர்களுக்கு தேவஸ்தானச் சார்பில் வரவேற்புரையோன்று வாசித்தளிக்கப்பட்டது. பின்னர் திரு. அறநிலைய ஆணையர் முன்னிலையில் ஸ்ரீ தியாகராஜசுவாமிக்குப் புதிதாகச்சேய்யப்பட்ட வேள்ளிமஞ்சம் பிரதீஷ்டை செய்யப்பேற்று முசுகுந்தார்ச்சனையும் மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. வன்றேண்டன் தோண்டு

என்ற தலைப்பில் கயப்பாக்கம், திரு. சோமசுந்தரம் செட்டியார் (சென்னை) அவர்களும், தருமைக் குருஞானசம்பந்தரும் காழி ஞானசம்பந்தரும் என்ற தலைப்பில், தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர் (நாகை) அவர்களும் பேசினார்கள்.

கூட்டுறவு சங்கத் தொடக்க விழா

மேலராமன்சேத்திகிராமத்தில்

தருமபுர ஆதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த மேலராமன்சேத்தி கிராமத்தில் 19—2—59 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை மாநில இந்து சமய அறநிலையங்கள் உணவு விவசாயம், உள்நாட்டு மந்திரி "நல்லறங்காவலர்" கனம், உயர்திரு. எம். பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் இந்தச்சாகுபடியாளர் கூட்டுறவு சங்கத்தைத்தொடங்கிவைத்துப் பேசினார்கள். பின்னர் 1008 தென்னம் பிள்ளைகள் நடுவிழாவும் நிகழ்ந்தது. கனம், மந்திரி அவர்களுடன் வந்த டிப்டி கமிஷனர் முதலிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். குடிமக்களுக்கு உணவுப்பொட்டலங்கள் வழங்கப்பட்டன. கனம் மந்திரி அவர்களுக்கு தேவஸ்தானச்சார்பிலும், சாகுபடியாளர்கூட்டுறவு சங்கச் சார்பிலும் வரவேற்புரைகள் வாசித்தளிக்கப்பட்டன.

திருவாரூரில்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருவாரூர் இராஜன் கட்டளை ஸ்ரீதியாகராஜசுவாமி தேவஸ்தானத்தில் தருமையாதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவுளப்பாங்கின்படி, நிகழும் விளம்பிஞு தைமீ 30௳ (12—2—59) குருவாரம் முதல் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவாலய சித்தீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு லக்ஷார்ச்சனை தொடங்கி மாசிமீ 11௳ (23—2—59) சோமவாரத்தன்று காலை 10-மணிக்கு மகாயக்ஞபூர்வமாய் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு ருத்ராபிஷேக ஆராதனைகளும், அன்று மாலை 7-மணிக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தியும், இரவு 8-மணிக்கு ஸ்ரீ தியாகராஜப் பெருமானுக்கு முசுகுந்தார்ச்சனையும் நடைபெற்றது. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினார்கள்.

இந்து அநாதைக் குழந்தைகள் இல்லத்தின் ஆண்டுவிழா

வேலூரில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன தேவஸ்தானங்கள் இந்து அநாதைக் குழந்தைகள் இல்லத்தின் ஆண்டுவிழா 7—3—59 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை ராஜ்ய ஸ்தலஸ்தாபன மந்திரி, கனம். திருமதி. லூர்தம்மாள் சைமன் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. ஆஸ்ரமக் குழந்தைகளால் வரவேற்புரை ஒன்று வாசித்தளிக்கப்பட்டது. குழந்தைகள் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தலைவரவர்கள் குழந்தைகளுக்கு அறிவுரை வழங்கினார்கள். விழாவில், சென்னைமாநில அமைச்சர் கனம். திரு. கக்கன் அவர்கள், வேதாரண்யம், திரு. சர்தார். ஏ. வேதரத்தினம் பிள்ளை அவர்கள், கும்பகோணம், திரு. ஆர். கந்தசாமி மூப்பனார் அவர்கள் முதலியவர்களிடமிருந்து வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப்பெற்றன.

திருவள்ளுவர் நினைவு நாள்

சென்னை சமயப் பிரசார நிலையத்தில்

சென்னை தியாகராய நகரிலுள்ள தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 28—2—1959 மாலை திருவள்ளுவர் நினைவு நாள் கொண்டாடப்பெற்றது. விழாவிற்குச் சென்னை அரசாங்க பப்ளிக் இலாகா துணைச்செயலாளர் திரு. நல். முருகேச முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். இலங்கை முன்னாள் அமைச்சர் திரு. சு. நடேசப்பிள்ளையவர்கள் விழாவினைத் தொடங்கிவைத்தார்கள். தொடக்க உரையில் அவர் கூறியதாவது: '' சென்னை நகரத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது திருவள்ளுவர் மயிலாப்பூரில் வாழ்ந்தவர் என்பது தான். உலகிற்கு ஒப்பற்ற இலக்கியத்தை வழங்கிய திருவள்ளுவருக்கு, சமய ஞானத்தைத் தக்க முறையில் வழங்கிச் சிறந்த சைவத்தொண்டாற்றிவரும் தருமபுர ஆதீன பிரசார நிலையத்தில் நினைவு நாள் கொண்டாடுவது பாராட்டத்தக்கது. திருக்குறள் தமிழர்களின் அருந்தனமாகும். சென்னையில் அச்சியந்திரம் முதன் முதலில் வந்தபோது முதலில் வெளியிடப்பட்ட நூல் **திருக்குறளாகும். இதுபற்றிய சுவைமிக்க வரலாற்றைக் கேளுங்கள் அக்காலத்தில், சென்னை ராஜ்யத் தலைவராயிருந்த**

ஆங்கிலத்துரைமகனுர் அச்சியந்திரம் வந்தவுடன் எந்த நூலை முதலில் அச்சிடலாம் என்று வினவினுர். அதற்கு அண்மையிலிருந்தவர்கள், தஞ்சை மன்னனின் அரசவைப் புலவர் கோட்டையூர், சிவக்கொழுந்து தேசிகரைக் கேட்டால் நல்ல நூலைத் தேர்ந்து சொல்வார் என்றனர். அப்படியே அவரை வரவழைத்து வினவினுர். திருக்குறளை வெளியிடலாம் என்று புலவர் கூறினுர். துரைமகனுர் அந்நூலில் என்ன இருக்கிறது என்று கேட்டார். அதற்குப் புலவர் "அதில் என்ன இல்லை" என்ற வினுவினுல் விடை இறுத்தார். அப்படியானுல் கல்லைப் பற்றித் திருக்குறளில் இருக்கிறதா என்று துரைமகனுர் கேட்டார். ஆகா. இருக்கிறது. ஒருமுறைக்கு இருமுறை கல்லைப்பற்றிக் கூறியிருக்கிறது என்று அக் குறட்பாக்களை,

> "வீழ்நாள் படாஅமை நன்றுன்றின் அஃதொருவன்
> வாழ்நாள் வழியடைக்குங் கல்."
>
> 'பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
> கருமமே கட்டளைக் கல்."

என்று விளையமாகச் சொன்னுர். திருக்குறளின் சிறப்பையும் அதைச் சிறப்புற உணர்ந்த சிவக்கொழுந்து தேசிகரையும் பாராட்டித் திருக்குறளை முதலில் அச்சேற்றினுர் துரைமகனுர்.

தமிழரின் சிறந்த பேருக விளங்குவது திருக்குறள். வேறு எம்மொழியிலும் அம்மாதிரி நூல் இல்லை. வாழ்விற்கு அடிப்படையான ஒழுக்கங்களைத் தெளிவாகவும், விளக்கமாகவும் விரிவாகவும் விளக்குவது அந்நூலேயாகும். எந்நாட்டிற்கும், எக்காலத்திற்கும், எக்குலத்தினர்க்கும் ஏற்றதாய் இலங்குவது இது. ஒழுக்க நூல்களுள் தலைசிறந்து விளங்குவதும் இதுவே.

இகம் பரம் என்ற இரண்டையும் கூறும் நூல் திருக்குறள். இது இல்லறம், துறவறம் என்ற இருபெருவழியில் மக்களை அழைத்துச்சென்று மாண்புறச் செய்கிறது. மக்கள் ஒவ்வொருவரும், சிறப்பாக அரசியல் வாதிகள் ஒவ்வொருவரும் படித்துக் கடைப்பிடிக்கவேண்டிய அறநூல். மனத்துக்கண் மாசில்லா திருத்தலே முதல் அறமென அறத்தின் இலக்கணத்தை முதலிலேயே சுருங்கச்சொல்லிவிட்டார். ஒருகருத்தை மீண்டும்மீண்டும் நினைத்துக்கொண்டே இருந்தால் அக்கருத்தை எளிதில் நிறைவேற்றலாம் என்று அனுபவசாத்தியத்தை அறிவித்துள்ளார். உலகம் நம் சொல்வழி நடக்கவேண்டுமானுல் அதற்கு ஒரு வழி சொல்கிருர். அக்குறளைக் காண்க.

" விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

திருக்குறள் தற்கால மக்களின் வாழ்விற்குப் பொருந்தியிருப்பதையும் காணலாம். இங்கிலாந்து தேசத்தின் முதலமைச்சர் வின்செண்ட் சர்ச்சில் அவர்களின் செயலை,

" சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

என்ற குறள் நன்கு தெரிவிக்கிறது. ஜெர்மன் தேசத்துத் தலைவனுயிருந்த இட்லரது செயலை,

" அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும் "

என்ற குறளால் தெளியலாம். காலம் வருமளவும் காத்திருந்து காரியத்தை நிறைவேற்றவேண்டும் என்பதற்கு,

" கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து "

என்ற குறளையும், பிறர் தூற்றுவதைப் பொறுக்கும் பண்புடையவனே உலகாள வல்லவன் என்பதற்கு,

" செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு."

என்ற குறளையும் காணலாம்.

திருக்குறளின் பல பதிப்புக்களையும், பல மொழிகளில் உள்ள மொழிபெயர்ப்புக்களையும், திருக்குறள் சம்பந்தப்பட்ட பல நூல்களையும் தொகுத்து திருக்குறள் நூல் நிலையம் ஒன்று தமிழகத்தில் நிறுவுதல் தமிழரது கடமைக்குள் தலைசிறந்ததாகும் என்று தலைமை வகித்த திரு. ஙல். முருகேச முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

காமம், காதல் என்ற இரண்டையும் ஒன்ருகவே எண்ணியது தொல்காப்பியமும் திருக்குறளும். ஆனுல் இப்பொழுது உடலைப்பற்றியது காமம், உள்ளத்தைப்பற்றியது காதல் எனப் பிரித்துக் காண்கிறது இக்கால உலகம் என்று திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தம் பேச்சில் அறிவித்தார்கள்.

ஒழுங்கையும், நீதியையும் நிலைநிறுத்தத் திருக்குறள் தலைசிறந்த நூலாகத் திகழ்கிறது. வேற்றவர் ஆட்சியால் தமிழர்

தாய்மொழியை அறிகிலர். பண்பை நினைக்கிலர். இப்பொழுது சுதந்திரம் பெற்றுளோம். விடிந்ததா, விடியவில்லையா என்று புரிந்து கொள்ள இயலாத சூழ்நிலையில் இருந்துவருகிறோம். தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமுடையவர்களே இன்றும் திருக்குறளைத் தெரிந்து கொள்ளவில்லை. தற்காலத் தமிழையும் தமிழகத்தையும் தமிழ்ப் பண்பையும் வள்ளுவர் பார்த்தால் இவை தமிழுமல்ல, தமிழ்நாடுமல்ல, தமிழ்ப் பண்புமல்ல என்று நிச்சயம் செல்லிவிடுவார், என்று திரு. ம. பொ. சிவஞானக் கிராம ணியார் அவர்கள் விரிவுரையில் கூறினார்கள்.

ஆழ்ந்த கருத்துக்களை எளிய குறட்பாக்களின் மூலம் அறிஞர்கட்கும் எளியவர்கட்கும் பயன்படும் வகையில் அளித்த பெருமை திருவள்ளுவரையேசாரும்என்று வரவேற்புரையும்நன்றியுரையும் கூறுகையில் நிலைய விசாரணை ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தெரிவித்தார்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. பி. சுவாமிநாதன் திருக்குறட்பாக்களின் மூலம் முதலில் கடவுள் வணக்கமும் வாழ்த்தும் பாடினார்,

சிவராத்திரி விழா

7—3—59 சனிக்கிழமை இரவு 7 மணிக்கு மகாசிவராத்திரி விழா நடைபெற்றது. அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

மகாசிவராத்திரி வரலாறு

தொல்லைய வல்வினை கழித்துத்தரும்
சோமவாரம் ஆதிரை நோன்பன்றிப்
புல்லிய வுமாம கேச்சுரம் சிவராத்திரி
முறையிற் பொருந்த நோற்கப்
பல்வினையுந் தொலைத்திடு கேதாரமண விரதம்
இவை பரமன் நோன்பு
கொல்லுறு சூற்படை விரதமென்னும்
எட்டும் சிவவிரதம் குணிக்குங்காலே.

[உபதேச காண்டம்]

தோற்றுவாய் :

சிவமே பரம்பொருள்; சிவசம்பந்த முடையதே சைவம்; அதனை அநுட்டிப்பவர் சைவர்; சிவ பரம்பொருளை யடைய வழிகள் நான்குண்டு எனச் சாத்திரம் பேசும். அவையாவன; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சரியையாவது விடியற் காலத்தே நீராடி நீறணிந்து சிவாலயத்திற்குச்சென்று கோயிலைத்

திருவலகுகோண்டு சுத்தம் செய்தல்; திருமேழுக்கிடுதல்; புட்பம் பறித்து மாலேகட்டிக் கோடுத்தல்; திருவிளக்கேற்றல்; சிவபெருமான் புகழைப் பாடுதல்; சிவ் விரதங்களே விதிப்படி அனுட்டித்தல்; சிவபுராண படனம்; சிவபுராண சிரவணம் முதலியனவாம். இவற்றுள்ஒன்று சிவவிரதங்களேஅநுட்டித்தல் என்பர் ஆன்ருேர்.

விரத வரலாறு :

விரதம் என்ருல் உயிர் நன்னேறி நிற்றற்போருட்டு " உடம்பை வாட்டுதல் " அல்லது பட்டினி கிடத்தல் என்பது போருள். பட்டினி கிடந்தால் நோயின்றி வாழலாம். இதனே மேனுட்டவரும் அவ்வப்போது கவனித்து வருகின்றனர். எனவே தான் நாமும் நம் உடம்பை நோயில்லாமல் காப்பாற்றிக்கோள்ள நமக்கும் நம் பேரியோர்கள் விரதங்களே ஏற்படுத்தினுர்கள். மேனுட்டவர் பட்டினி கிடக்கும்போது கடவுட்சிந்தனேக்கு இடமில்லே. ஆனுல் நம் நாட்டவரோ பட்டினி கிடக்க நாள்களேயும் ஏற்படுத்தி அவ்வந்நாட்களில் நமது ஆண்டவனேயும் வழிபட ஏற்பாடு செய்துள்ளார்கள். இதனுல், உயிருக்கும் இலாபம் உண்டு, உடம்பும் நோயின்றித் திகழும். இது விஞ்ஞான சாத்திரத்துக்கும் ஒத்ததாகும்.

தேய்வம் ஒன்றே. தேய்வபேதங்கள் பல. எனவேதான், விரதங்களும் பலவாயின. சிவபேருமானுக்குரிய விரதங்கள் எட்டு என்று உபதேச காண்டம் கூறும். இவற்றுள் ஒன்று சிவராத்திரி. இதனே மட்டும் இங்கு விரித்துக் கூறுவாம். "........மழவிடையேறு கைத்திடும் எம்மான், சென்ற சிந்தையில் திருவுளம் உவந்தது தேவரும் முறை நோற்பார், நன்றேனுஞ் சிவராத்திரியில் இது நோற்பவர் நறுங்கோன்றைப், போன்றிகழ்ந்திடு சடைமுடிக் கயிலேயம் புனிதனிற்ருேழ நிற்பார்."

சிவராத்திரி வகை :

இச் சிவராத்திரியும் பலவகைப்படும். நித்திய சிவராத்திரி; மாத சிவராத்திரி; யோக சிவராத்திரி; பட்ச சிவராத்திரி; வருடத்திற்கோருமுறை வரும் மகா சிவராத்திரி (மாக சிவராத்திரி) என ஐவகைப்படும்.

I **நித்திய சிவராத்திரியாவது :** ஒவ்வோரு மாதத்திலேயும் வரும் வளர்பிறை, தேய்பிறைச் சதுர்த்தசி நாட்கள் 24.

II **மாத சிவராத்திரி 14.**

III யோக சிவராத்திரி: சோமவாரம் சூர்ய உதயம் முதல் 10 நாழிகை வரை அமாவாசை இருக்குமாயின் அது யோக சிவராத்திரியாகும்.

IV பட்ச சிவராத்திரி: தை மாதம் தேய் பிறை பிரதமை தொடங்கி 13 நாட்கள் விரதமிருந்து 14-ம் நாள் விரத பூர்த்தி செய்வது.

V மகா சிவராத்திரி அல்லது மாக சிவராத்திரி: (மாக மாதம் அல்லது மாசி மாதத்தில் வருவதால் மகா சிவ ராத்திரி எனப்பட்டது.)

இன்னும் இம் மகா சிவராத்திரி உத்தமோத்தமம் என்றும், உத்தமம் என்றும், மத்திமம் என்றும், அதமம் என்றும் நான்கு வகைகளாகவும் பேசப்பெறும்.

1. சூர்யாத்தமனம்வரைதிரயோதசியிருந்துபிறகு சதுர்த்தசி வந்து மறுநாள் பகல்வரை இருக்குமாயின் அது உத்தமோத்தமம்.

2. சூர்யாத்தமனத்தின் பின் இரவின் 10 நாழிகைக்கு முன் சதுர்த்தசி வந்தால் அது உத்தமமாகும்.

3. காலை தொடங்கி மறுநாள் சூர்யோதயம் வரை வரும் சதுர்த்தசியும் சூரியன் அத்தமிப்பதற்கு முன்வரும் சதுர்த்தசியும் இரவின் 10 நாழிகைக்குப்பின் வரும் சதுர்த்தசியும் மத்திமம்.

4. இரவு 20 நாழிகை வரை சதுர்த்தசியிருந்து பிறகு அமாவாசை வந்தால் அது ஆகாது. (திரயோதசியும் சதுர்த்தசி யும் கூடிய இரவு சிவலிங்க சொரூபம் என்பர் ஆன்ருேர்) இது சந்நியாசிகட்கும், வைதீகர்கட்கும் உதவும்.

அமாவாசையுடன் திருவோணம் கூடினுல் உத்தமமாகும்.

அநுட்டிக்கும் முறை:

முன்னுள் இரவு உணவு இன்றி பட்டினி கிடந்து சிவராத்திரி தினத்தன்று காலையில் நீராடி நித்திய கர்மங்களை முடித்துக் கொண்டு சிவாலய தரிசனம் செய்து சிவபுராண படன சிரவணஞ் செய்துகொண்டு உணவின்றி இருக்கவேண்டும். சிவபூசை யுடையவர்கள் அன்றிரவு நான்கு சாமங்களிலேயும் பூசை செய்ய வேண்டும். நித்திரையின்றியும் இருக்கவேண்டும். சிவபூசை ஏற்றுக்கொள்ளாதவர்கள் சிவலிங்கமுள்ள சிவாலயத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் நான்கு கால பூசைகளையும் ஊண் உறக்கமின்றி, தரிசித்து அநுட்டிக்க வேண்டியது. மறுநாட்

காலே சூர்ய உதயத்திற்கு முன் நீராடி நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு உறவினருடனும், அடியார்களுடனும் பாரணம் செய்தல்வேண்டும். உடம்பிலே உயிர் தங்காது என்று தோன்றினுல் நீர் உட்கொள்ளலாம். அது போதாது என்ருல் வெறும் பால் சாப்பிடலாம். அதுவும் போதாதேன்னின், பழம் இனிப்பு வகையான பட்சணங்களை உட்கொள்ளலாம். இவ்வகை அதமம் எனப்படும். ஆனுல், உடம்பில் பலமில்லாதவர்களும், நோயுடையவர்களும், குழந்தைகளும், கர்ப்பப் பெண்களும் இந்நியதியுடன் விரதானுஷ்டானம் செய்யவேண்டியதில்லை. ஏன்? " நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை " ஆதலால்.

சிவபூசை செய்யும் முறை :

	அபிடேகம்	அலங்காரம்	அர்ச்சனை	நிவேதனம்	தோத்திரம்
1 ஜாமம்;	பஞ்ச கவ்யம், அகில்	வில்வம்	தாமரை	போங்கல்	இருக்வேதம்
2 ஜாமம்;	பஞ்சா மிர்தம், சந்தனம்	தாமரை	துளசி	பாயசம்	யஜுர்வேதம்
3 ஜாமம்;	தேன் பச்சக் கர்ப்பூரம்	சாதி புட்பம்	3 இதழ் வில்வம்	எள்ளன்னம்	சாமவேதம்
4 ஜாமம்;	கருப்பஞ் சாறு, குங்குமப்பூ	நந்தியா வர்த்தம்	நீலோத் பலம்	சுத்தான்னம்	அதர்வண வேதம்

குறிப்பு :- நான்கு சாமங்களிலும் பன்னிரு திருமுறைகளை ஓதுக.

நான்கு சாமங்களிலும் சிவாலயத்திற்குச் சென்று சிவலிங்க தரிசனம் செய்ய இயலாதவர்கள் ௨-ம் சாமாத்தி (லிங்கோத்பவ காலம்) லாவது கட்டாயம் சிவ தரிசனம் செய்யவேண்டும்.

சிவராத்திரி வரலாறு :

இதன் வரலாற்றைச் சிவாகமங்கள் பல வகையாகப் பேசும். ஒன்று மட்டும் இங்கு சிந்திப்பாம். பேருழிக்காலம் வந்தது. உலகமும் உயிர்களும் ஒடுங்கின. சூர்ய சந்திரரும் ஒடுங்கினர். எங்கும் இருள் மயம். சப்தமுமில்லை. உயிர் களிடம் கருணைகோண்ட உமாதேவியார் ஒளிமயமான சிவலிங்க பூசனையை நான்கு சாமங்களிலும் செய்து ஒளியைப்பரப்பிப் புனர் சிருட்டி செய்தாள் என்று பேசும் ஒரு ஆகமம். இரண்டாம் சாமத் தில் சிவலிங்கத்தினின்றும் சிவபெருமான் வேளிப்பட்டு அம்மை யின் சிவபூசைக்கு வியந்து வேண்டும் வரம் யாதெனக்கேட்க உமையம்மையும் நாம் பிழைக்கும் வண்ணம், அந்த இராத்திரி சிவராத்திரியாக இருக்கவேண்டுமென்றும், அந்நாளில் சிவபெரு மானை விதிப்படி வழிபடுவோருக்குச் சிவசாயுச்சியத்தைக் கோடுக்கவேண்டும் என்றும், அவ்விரவு சிவன் பேயராலேயே " சிவராத்திரி " என அழைக்கப்படவேண்டுமென்றும் வேண்டி வரம் பெற்ருள். வாழிய சைவம். வளர்க நம் பண்பு.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ கே, முத்துஜோதிடர் அவர்கள்,

திருவிடைமருதூர்.

(விளம்பிஞு பங்குனிமீ 1உ முதல் 31உ முடிய)

(14—3—59 முதல் 13—4—59 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

அசுவதி முதல் பாதம் சுப சந்தோஷம் தரும். அசுவதி 2, 3, 4 பாதங்கள் வீண் அலைச்சல்களையும், வீண் செலவுகளை யும் உண்டுபண்ணும். பரணி முதல் பாதமும், கார்த்திகை முதல் பாதமும் சுபத்தைத்தரும். தொழில் ஓங்கும். ஆரோக்கிய முண்டாகும். நஷ்டமான பொருள்வரத்து ஏற்படும். வம்சம் ஓங்கும். கார்த்திகைப் பெருமான் அருள் ஏற்படும். சனி, செவ்வாய் சுபமாகும்.

2. விருஷபம். கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீரிஷம் ½

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் நஷ்டத்தைத் தரும். துர்ப் புத்தியை உண்டாக்கும். ரோகிணி நான்கு பாதங்களும் வரவுக்கு மிஞ்சின செலவுகளையும், ஆரோக்கியக் குறைவையும், இடம் மாறலையும் தரும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் சுபத்தையும், உத்யோக லாபத்தையும், நன்மதிப்பையும் உண்டாக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

3. மிதுனம். மிருகசீரிஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் 3, 4 பாதங்கள் இடம்மாறி லாபம் தரும். நூதன முறையில் தொழில் ஏற்படச்செய்யும். திருவாதிரை 1, 2 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். ஆரோக்கியமுண்டாகும். திருவாதிரை 3, 4 பாதங்கள் தொழில் ஓங்கச்செய்யும். நஷ்ட மான பொருள்வரத்து ஏற்படச்செய்யும். பெரியோர் அன்பு கிட்டும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் உன்னத பதவிகளைத் தரும். தெய்வபலம் பிரகாசிக்கும். விவகாரம் ஜெயிக்கும்.

சத்துருபாதை நிவாரணமாகும். ஆரோக்கியம் ஏற்படும். சுபாதிகள் ஏற்படும். சனி, சேவ்வாய் சுபமாகும்.

4: கடகம். புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம் - ஆயில்யம்

புனர்பூசம் 4-ம் பாதம் நித்யமங்களத்தைத்தரும். வித்யாபி விருத்தியாகும். உத்யோக லாபம் ஏற்படும். பூசம் முதல் பாதம் அசுபமாகும் 2, 3, 4 பாதங்கள் சுபசந்தோஷங்களேயும் உலக பிரக்கியாதியையும் லாபத்தையும் தரும். ஆயில்யம் நான்கு பாதங்களும் ஜயத்தை உண்டுபண்ணும், நஷ்டமான போருள் வந்து சேரும். காரிய சித்தியாகும். தேய்வபலம் முன்னிற்கும். புதன், வியாழன் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி ஒன்பது பாதங்களும் லாபத்தையும் சந்தோஷத்தையும் தரும். தோழில் ஓங்கும் வியாபாரிகள் உத்யோகஸ்தர்கள் சந்தோஷமடைவார்கள். அடிக்கடி சஞ்சார பலன் ஏற்படும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். ஆரோக்கிய முண்டாகும். சனியும், புதனும் சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

உத்திரம் 2, 3 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். உத்திரம் நாலாம்பாதமும் ஹஸ்தம் முதல் பாதமும் இடம்மாறி சுபத்தைத் தரும். லாபம் ஏற்படச்சேய்யும். உத்யோக லாபம் ஏற்படும். மங்கள காரியங்கள் ஏற்படச் சேய்யும். ஹஸ்தம் 2, 3, 4 பாதங்கள் யாத்திரா காரியாதிகளேயும், பிரதிஷ்டாதி பலன்களேயும், ராஜாங்க மதிப்பையும், உலக பிரக்கியாதியையும் தந்து தேய்வசக்தி முன்னின்று சகல துரிதங்களேயும் விலகச் சேய்யும். சித்திரை 1, 2 பாதங்கள் சுபமாகும். கடன் நீங்கி சந்தோஷமுண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். புதன், வியாழன் சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

சித்திரை 3, 4 பாதங்கள் தூரப்பிரயாணத்தைத் தரும். விரோதத்தை உண்டுபண்ணும், கடன் ஏற்படும். சுவாதி முதல்

பாதம் அதிகத் தொல்லைகளைத் தரும். மன நிம்மதி இராது. சுவாதி 2, 3, 4 பாதங்கள் தெய்வபலத்தைத் தந்து வெகுகாலமாய் எதிர்பார்த்து நடைபெறாத பெரிய காரியங்களை சாதித்துத் தரும். பலபேருக்கு உதவியளிக்கச் செய்யும். நன்மதிப்பு உண்டாகும். விசாகம் 1 2, 3 பாதங்கள் நுதனத் தொழிலைக் கொடுத்துப் பலருடைய அன்பையும் தரும். உலகப் பிரசித்தி உண்டுபண்ணும். சனியும், புதனும் சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை.

விசாகம் 4-ம் பாதம் ஆரோக்கியத்தைத் தரும். காரியங்கள் தாமதமாய் சித்தியாகும். தெய்வ பலத்தால் துரிதங்கள் நிவர்த்தியாகி சுபமுண்டாகும். அனுஷம் நான்கு பாதங்களும் சுபமிராது. கஷ்ட நஷ்டங்கள் அதிகமாகும். கேட்டை நான்கு பாதங்களும் மிசிரமாய் நடக்கும். வரவு செலவு சமனாகும். திங்கள், புதன் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

மூலம் நான்குபாதங்களும் தெய்வபலத்தால் ஓங்கச்செய்யும். மனம்சாந்தி இராது. பூராடம் நான்கு பாதங்களும் கிரய, விக்ரய லாபங்களும், உத்யோக மேன்மையும், குடும்ப சுகமும், நஷ்டமான பொருள் வரத்தும் ஏற்படும். கடன்நீங்கிச் சுபம் உண்டாக்கும். உத்திராடம் முதல் பாதம் நோய், கடன் இவை நீங்கும், தொழில் ஓங்கும். சுப சோபனாதிகள் ஏற்படும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

உத்திராடம் 2, 3, 4 பாதங்கள் அதிகத் தொல்லைகளையும், வீண் செலவுகளையும் உண்டாக்கும். திருவோணம் 1, 2 பாதங்கள் சுபமிராது. திருவோணம் 3, 4 பாதங்கள் சுப, சந்தோஷங்களைத் தந்து சென்ற மாதம் போலவே இருக்கும். அவிட்டம் 1, 2 பாதங்கள் இடம் மாறுதல் ஏற்பட்டு, உயர்பதவி அடையச்செய்யும். புதன், வியாழன் சுபமுண்டாகும்.

11. கும்பம். அவிட்டம் $\frac{1}{2}$, சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

அவிட்டம் 3, 4 பாதங்களும், சதயம் நான்கு பாதங்களும் சுபமிராது. அதிகக் கஷ்ட நஷ்டங்களை உண்டுபண்ணும்.

பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் சென்ற மாதம்போலவேயிருக்கும். சுபாதிகள் ஏற்படும். செவ்வாயும், புதனும் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபமாகவே நடக்கும். விவசாயிகள், வியாபாரிகள், உத்தியோகஸ்தர்கள் யாவரும் நன்மை அடைவார்கள். இல்வாழ்க்கை உயரும் குடும்ப சுகம் ஏற்படும். தெய்வபலம் பிரகாசிக்கும். எல்லாம் நன்மையாகவே நடக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

குறிப்பு. மேற்படி மாதம் இயற்கைகளில் மாறுதல் உண்டாகும். அதனுல் புதிதுபுதிதான நோய்கள் ஏற்பட்டு மக்களுக்குத் தொந்தரவு ஏற்படும். உலகில் நிம்மதியும், சாந்தியும் குறைவடையும். எல்லாம் இறைவன் அருளால் நன்மை உண்டாகப் பிரார்த்திப்போமாக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapura Adhinam
Velur Sri Vaithianathaswami Devasthanam
Vaithiswarankoil.

நான் பிறந்து 44 வருடங்களாகியும் என் அப்பன் வைத்திய நாதனைத் தொழும் பாக்கியம் இன்றுதான் பெற்றேன். மனது சாந்தி அடைந்தது. இந்த நாளை என் வாழ்நாளில் மறவா நாளாக இருக்கும்படி பாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர பரமேஸ்வரனும் கலியுகவரதன் செல்வமுத்துக்குமாரனும் எனக்கு அருள் புரிய வேண்டும். இங்குக் காணும் தெய்வீகத்தையும், நிர்வாகத் திறமையையும் பற்றி சொல்லவும் வேண்டுமா? இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க.

(Sd) S. H. Kalyanasundaram M. A., B. L.,
Special Deputy Collector,
Revenue Court, Kumbakonam.
3—1—'59

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்
(வேளூர் தேவஸ்தான இறைபணி மன்றம்) திருவள்ளுவர் நினைவுநாள் விழா

The following particulars regarding the ownership of the GNANASAMBANDAM the Monthly newspaper, are published as called for by Rule 8 of the Registration of News papers (Central Rules, 1956).

Form IV

1. Place of publication - DHARMAPURAM
2. Periodicity of its publication - MONTHLY
3. Printer's and Publisher's Name - Sri. K. SUNDARESA IYER
   Nationality - INDIAN
   Address - VELLALAR DOUBLE ST., MAYURAM
4. Editor's Name - Sri. SOMASUNDARA THAMBIRAN SWAMIGAL
   Nationality - INDIAN
   Address - 41, USMAN ROAD, T. NAGAR, MADRAS - 17
5. Names & addresses of individuals who own the Newspaper and partners or Share holders holding more than one percent of the total Capital - His Holiness Sri-la-Sri SUBRAMANIA DESIKA GNANASAMBANDA PARAMACHARYA SWAMIGAL Avl. Dharmapuram Adhinam, Dharmapuram, Mayuram P. O. Tanjore Dt.

I K. Sundaresa Iyer hereby declare that the particulars given above are true to the best of my knowledge & belief.

(Sd.) K. SUNDARESA IYER,
Publisher.

Dated 24-2-1959.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram) 10—3—59.